# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

நவம்பர் 2006 ரூ.10/-




## தமிழ் மாநிலம் அமைந்த 50ஆம் ஆண்டு பொன்விழா





மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
11.11.2006 அன்று, திருச்சிராப்பள்ளியில்,
வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகை திட்டத்தைத் தொடங்கிவைத்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
11.11.2006 அன்று, திருச்சிராப்பள்ளி பாலக்கரை ஹீபர் சாலை சந்திப்பில் ரூ.16 கோடி செலவில்,
புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தைத் திறந்துவைத்து,
அதற்கு “சிங்கத்தமிழன் சின்னச்சாமி-சண்முகம் பாலம்” என்று பெயர் சூட்டினார்.

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஐப்பசி - கார்த்திகை
நவம்பர் 2006
மலர் : 38 இதழ் : 5

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

## இந்த இதழில்...


சமத்துவப் பெருவிழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை... — 2

தமிழ் மாநிலம் அமைந்த 50 ஆம் ஆண்டு பொன்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை — 14

அயல்நாட்டினரை ஈர்க்கும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை — 30

தமிழகத்தில் நேரு — 37

சட்டை - சிறுகதை — 52

மதிப்புக் கூட்டுவரியின் சிறப்பு அம்சங்கள் — 74


**முதலாம் பக்க அட்டை :**

சென்னையில்
1.11.2006 அன்று நடைபெற்ற
தமிழ் மாநிலம் அமைந்த
50 ஆம் ஆண்டு பொன்விழா.

**நான்காம் பக்க அட்டை :**

சென்னையில்
13.11.2006 அன்று நடைபெற்ற
சமத்துவப் பெருவிழா

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

"வாராது வந்த மாமணி" என்பது போல், "செய்யாமற் செய்த உதவி" என்று புகழத்தக்க அரிய உதவி வழங்கப்பட்டால், அதற்கு இந்த வானமும் பூமியும் கூட ஈடாக மாட்டா.

குறள் : 101

**– கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி.கோசலராமன்,** இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம் , ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926 / 25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in

# பத்தாண்டுகால ஜனநாயகப்பட்டினி போக்கப்பட்டுள்ளது

சென்னை
கலைவாணர் அரங்கத்தில்,
13.11.2006 அன்று நடைபெற்ற
**சமத்துவப் பெருவிழா** நிகழ்ச்சியில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை

**தொ**டக்கத்திலே வரவேற்புரையாற்றிய உள்ளாட்சித்துறை செயலாளர் அசோக் வர்தன் ஷெட்டி பேசும் போது "இது ஒரு வித்தியாசமான விழா" என்று சொன்னார். அல்ல, இது வித்தியாசத்தைப் போக்குவதற்காக நடத்தப்படுகின்ற விழா. வித்தியாசம் போக்கப்பட்டு, அதைப் பாராட்ட நடைபெறுகின்ற விழா. இந்த விழாவிலே கலந்து கொண்டு அருமைத் தலைவர்களும், கவிஞர்களும், ஆன்றோர்களும் சான்றோர்களும், எங்களையும், நான்கு ஊராட்சிகளில் வெற்றிபெற்ற குறிப்பாக பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் வெற்றி பெற்ற தலைவர்களுக்கு பாராட்டும் வழங்கியிருப்பது எங்களுடைய மற்றும் அவர்களுடைய எதிர்காலப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரக் கூடியவை என்பதை முதலில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.



சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றுதான் உலகில் எல்லா தலைவர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்காக தொண்டாற்றியிருக்கிறார்கள். அந்தத் தொண்டு வெற்றி பெற்றதா, அல்லது வெற்றி பெற முடியுமா என்ற இந்தக்



கேள்விகளுக்கெல்லாம் ஒரு கடந்த பத்து அல்லது இருபதாண்டுகளுக்கு முன்பே பதில் காண்பது எளிய காரியமாக இல்லை. ஆனால் இன்றைக்கு பதில் காணுகின்ற வலிமையை நாமெல்லாம் பெற்றிருக்கிறோம் என்றால், இந்த வலிமையை நமக்குத் தந்தவர்கள்தான் தந்தை பெரியார் அவர்களும் அவர்களுடைய வழி நின்று இந்த இயக்கத்தை கட்டிக் காத்தவர்களும், இன்றைக்கும் நமக்கெல்லாம் உரமாகத் திகழ்பவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.



**"சாதி" தமிழ் அகராதியிலே இல்லை**

எப்படிப்பட்ட சமுதாயம் நம்முடைய சமுதாயம் என்பதற்கு கடந்த காலத்தில் இந்தச் சமுதாயத்திலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டவர்கள் எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டியிருந்தது என்பதை எண்ணிப் பார்த்தாலே நாம் அதைப் புரிந்துகொள்ள முடியும். குறிப்பாக "சாதி" என்ற இந்தச் சொல் தமிழ் அகராதியிலே இல்லை. சாதி என்பது தமிழனுக்கு என்றைக்கும் இருந்த தில்லை. சதி என்ற ஒரு சொல் இருந்து; அதற்குக் கால் முளைத்து "சாதி" என்று ஆகிவிட்டது. அந்தக் கால் முளைத்த "சாதி" தமிழனை பல்வேறு கூறுகளாக ஆக்கி, சமுதாயத்திலே பல்வேறு முரண்பாடுகளை, வேறுபாடுகளையெல்லாம் உருவாக்கி, ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ள, ஒருவரையொருவர் வீழ்த்த, ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்த பயன்படுத்தப்பட்டது.

அதை சரியான நேரத்தில் கண்டு கொண்டு இதை வீழ்த்தினால்தான் சமுதாயம் ஒட்டுமொத்தச் சமுதாயம் வாழ முடியும் என்று கண்டவர்கள் பலர் என்றால், அதை செயல்படுத்த துணிந்த ஒரே தலைவர் நம்முடைய தந்தை பெரியார் அவர்கள்தான். அவர்கள் அதைச் செயல்படுத்திய காரணத்தால்தான் சாதி ஒழிப்பு மாநாடுகள், சாதி ஒழிப்புக் கூட்டங்கள், சாதி ஒழிப்புச் செயல்பாடுகள் என்ற இவைகளையெல்லாம் அவர்களுடைய போராட்டங்களிலே வரிசைப்படுத்தி நடத்திக் காட்டினார்.

தந்தை பெரியார் அவர்கள் இந்தப் பிரச்சாரத்தை செய்து நம்மையெல்லாம் இந்த அளவிற்கு திருத்தியிருக்காவிட்டால் என்ன நடந்திருக்கும்? எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திராவிட இயக்கம் தோன்றிய அந்தக் காலத்தில் நான் அந்த இயக்கத்தோடு சேர்ந்து தோன்றியவன் என்று சொல்லிக் கொள்ளக் கூடிய அருகதை எனக்கில்லாவிட்டாலும் அந்த வயது எனக்கு அப்போது இல்லாவிட்டாலும் கூட, அந்த இயக்கத்தினுடைய கொள்கைகளை எடுத்துச் சொல்லுகின்ற ஆரம்ப காலத்திலே மிக இளைஞனாக, கூட்டங்களில் பேசும்போது, கிராமங்களிலே நான் எடுத்துச் சொன்னக் கருத்து, கிராம மக்களுக்கு அவர்களுடைய உள்ளத்திலே பதிந்த கருத்து, பதியக் கூடிய அளவிற்கு இருந்த கருத்து, நான் எடுத்துக் காட்டிய கருத்து, அது என்னவென்றால், கிராமவாசிகளைப் பார்த்துச் சொல்வேன், என்னுடைய கூட்டங்கள் நடைபெறுகின்ற கிராமங்களில் இன்றைக்கு பல்லாயிரக் கணக்கிலே மக்கள் கூடலாம், அன்றைக்கு 100 பேர், 200 பேர் கூடியிருக்கின்ற அந்தக் கூட்டங்களில் நான் பேசியிருக்கிறேன், இன்னும் எனக்கு நினைவு இருக்கின்றது.

### சாதி ஆணவம் பிள்ளைகளின் படிப்பிலே நஞ்சாகத் தடவப்பட்டிருக்கிறது

பள்ளிக்கூடத்திலே சென்று பாடப் புத்தகத்தை வாங்கி, புரட்டிப் பாருங்கள், பெரியோர்களே, தாய்மார்களே, என்று ஆரம்பித்து, அந்தப் புத்தகத்தை நீங்கள் புரட்டிப் பார்த்தால், நம்முடைய பெரியவர்கள், நம்முடைய ஊரிலே இருக்கின்ற தொழிலாளிகள், ஊரைக் காப்பாற்றக் கூடியவர்கள் படங்கள் எல்லாம் அதிலே இருக்கும், அவர்கள் செய்கின்ற தொழிலும் அதிலே அச்சியற்றப்பட்டிருக்கும். படங்கள் வடிவில்.

குயவன் மண்பாண்டம் செய்கிறான், உழவன் ஏர் உழுகிறான், கருமான் வேலை செய்கிறான் என்றும், தச்சன் நாற்காலி செய்கிறான் என்றும் “ன்'' விகுதியிலே முடிகின்ற அந்த வாசகங்களுக்கு அடுத்து, அடுத்த பக்கத்தைப் புரட்டினால், “அய்யர் பூஜை செய்கிறார்'' என்றிருக்கும். ஆக அந்தக் காலத்திலேயே இந்தச் சாதித் திமிர், சாதி ஆணவம் நம்முடைய ஆரம்பக் காலத்து பிள்ளைகளின் படிப்பிலேயே நஞ்சாகத் தடவப்பட்டிருக்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு என்பதை நான் மக்களிடத்திலே பிரச்சாரம் செய்தது இன்னமும் நினைவில் இருக்கிறது.



### பட்டினி கிடந்தன ஜனநாயகம்

ஆனால் இன்னமும் அந்த நிலையே இருக்கிறது. அதை தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அது இருந்த காரணத்தினால்தான் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி இவைகள் எல்லாம் பத்தாண்டு காலமாக ஜனநாயகப் பட்டினி கிடந்தன. அந்தப் பட்டினி இன்றைக்குப் போக்கப்பட்டு, ஜனநாயக உணவை அவர்கள் உட்கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதற்கு நம்முடைய உழைப்பும் தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலே நாம் ஏற்றுக் கொண்ட தியாகங்களும் என்பதை தயவுசெய்து நீங்கள் யாரும் மறந்துவிடக்கூடாது.

இன்று இந்த நிகழ்ச்சியில் உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் இந்தப் புதிய வரவுகளுக்கு பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஆகிய உள்ளாட்சித் தலைவர்களுக்கு உற்சாகமளிக்கின்ற வகையில் ஒவ்வொரு ஊருக்கும் இருபது இலட்ச ரூபாய் அந்த ஊர் மக்களுடைய வசதி வாய்ப்புகளுக்காகச் செலவழிக்கப்படும், வழங்கப்படும் என்று எடுத்துக் கூறியிருக்கிறார். உள்ளாட்சித்துறை அமைச்சர் கூறினார் என்றால், முதலமைச்சர் சொல்லித்தான் கூறியிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே தகுந்த முறையில் அவைகள் செலவழிக்கப்பட இங்கே பேசிய நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் எடுத்துக் காட்டியதைப்போல அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய, அதிகாரிகளுடைய ஒத்துழைப்போடு அது நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் மூலமாக நான்கு ஊர்களுக்கு 80 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்றாலுங் கூட, இங்கே பரிசுகள் எல்லாம் வழங்கப் பட்டன. நம்முடைய தொல்.திருமாவளவன் அவர்கள் விடுதலை சிறுத்தைகள் இயக்கத்தின் சார்பாக ஒரு பட்டயத்தையே எனக்குத் தந்து, என்னை “சமத்துவப் பெரியார்'' என்று பட்டம் சூட்டி உங்கள் கைதட்டல் மூலமாகவும் அதை ஆமோதிக்க வைத்திருக்கிறார்.

### தலித் மக்களின் சார்பில் தரப்பட்ட பட்டம்

இதை திருமாவளவன் தந்த பட்டம், தலித் மக்களின் சார்பாக தந்த பட்டம் என்ற முறையில் அதை நான் பெரிய விருதாக கருதிக் கொண்டாலும் கூட, “சமத்துவப் பெரியார்'' என்றுநான் என்னை அழைத்துக் கொள்ள அருகதையும் உள்ளவனாக கருதவில்லை. நான் பெரியாருக்குப் பேரன், பெரியாரிடம் மாணவனாக இருந்தவன். 1945 ஆம் ஆண்டு இங்கே குறிப்பிட்டார்களே, அதைப் போல பாண்டிச்சேரியில் அடிபட்டு வீழ்ந்து, உடம்பெல்லாம் காயத்தோடு உயிர் போய் விட்டதென்று, என்னை பகைவர்கள்

விட்டுச் சென்ற பிறகு, அண்ணன் தளபதி அழகிரிசாமி அவர்களின் உதவியோடு பெரியார் தங்கியிருந்த இடத்திற்கு நான் அழைத்துச் செல்லப்பட்டு, பெரியார் அவர்கள் என்னை ஆரத் தழுவி, என்னுடைய காயத்திற்கு மருந்து போட்டு, அங்கிருந்து என்னை வா, ஈரோடு குடியரசு அலுவலகத்திற்கு என்று அழைத்துச் சென்றாரே, அப்படி அழைத்துச் சென்றபோது, குடியரசு துணை ஆசிரியனாக நான் பணியேற்று, அந்தப் பணியை தொடர்ந்தபோது குடியரசு பத்திரிகையில் நான் எழுதிய ஒரு கட்டுரை "தீட்டாயிடுத்து'' என்பதாகும். ஏன் இப்படி எழுதினேன் என்றால், அதற்கு முதலில் ஒரு கட்டுரை எழுதினேன்.

திருவண்ணாமலையிலே தீபம், அதைப்பற்றி எழுது பார்க்கலாம் என்று பெரியார் அவர்கள் என்னைச் சோதித்துப் பார்த்தார். நான் அந்தக் கட்டுரைக்கு "அண்ணாமலைக்கு அரோகரா'' என்று தலைப்பிட்டு எழுதினேன். அது அச்சடித்து வந்த பிறகு அதைப் படித்துப் பார்த்து பெரியார் அவர்கள், நன்றாக இருக்கிறது, இருந்தாலும் இப்படி "அ'' னாவுக்கு "அ''னா போட்டு, அலங்காரமாக எழுதினால் எனக்குப் பிடிக்காது, விஷயத்தை மட்டும் சொல் என்றார்கள். அப்போதே எனக்கு பெரியார் ஆசிரியராகி விட்டார் என்பதை நீங்கள் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

**சாதி ஒழிப்புக்குப் பயன்பட்ட பெரியாரின் கொச்சைத் தமிழ்**

சரி, அய்யாவுக்கு என்ன எழுதினால் – எப்படி எழுதினால் பிடிக்கும் என்பதை யூகித்து தெரிந்து கொண்ட நான், இன்னும் இரண்டு நாள் கழித்து பார்க்கலாம் என்று இருந்தபோது, ஒரு சம்பவம் நடந்தது. அதுவும் சமத்துவத்தை உள்ளடக்கிய சம்பவம்தான். திருவையாறு உங்களுக்குத் தெரியும். அந்தத் திருவையாறில் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தியாகய்யர் உற்சவத்தில் தமிழ்நாட்டிலே உள்ள எல்லா பாகவதர்களும், பாடகர்களும் வந்து இலவசமாகவே கச்சேரி நடத்துவார்கள். அப்படி நடத்தியபோது பெரியவர் ஒருவர், உயர்சாதிக்காரர், நல்ல சங்கீத வித்வான் ஒருநாள் வந்தார். இங்கே யார் எல்லாம் பாடினார்கள் என்று கேட்டார். இன்னின்னார் பாடினார்கள் என்று சொன்னார்கள். சொன்னவுடன் ஒருவரைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் கேட்டார். அவர் எல்லாவற்றையும் தமிழாகவே பாடியிருப்பாரே, தமிழ் இசையே பாடியிருப்பாரே என்றார். ஆமாம், தமிழ் இசைதான் பாடினார். பாடியவர் தண்டபாணி தேசிகர் என்று சொன்னவுடன், சேச்சே, தமிழ் இசையே பாடப்பட்ட இந்த மேடை தோஷமாகி விட்டது, தீட்டாகி விட்டது, எனவே இங்கே புண்யாஜனம் செய்து, இந்த மேடையை புனிதமாக்கி விட்டு, அதற்குப் பிறகுதான் நான் இங்கே உட்கார்ந்து பாடுவேன் என்று சொல்லி விட்டார்.

இது பத்திரிகைகளிலே வந்த செய்தி, நான் புதிதாக கற்பனை செய்து சொல்கின்ற சொல் அல்ல. ஏடுகளிலே அப்போது வந்த செய்தி. அப்படியே தோஷம் கழிக்கப்பட்டு, அந்தப் பெரியவர் அந்த இடத்திலே மறுநாள் பாடினார் என்று செய்தி. பெரியார் இதைப் படித்துப்பார்த்து விட்டு, அந்தப் பேப்பரை என்னிடம் தூக்கியெறிந்து, இதை வைத்து எழுது என்றார். எழுதினேன், அதற்கு நான் கொடுத்த தலைப்புதான் "தீட்டாயிடுத்து'' என்பதாகும். அதைப் படித்துவிட்டு அய்யா சொன்னார். "சபாஷ், இப்படித்தான் தலைப்பு போடணும்'' என்றார். அதாவது மேடை தீட்டாயிடுத்து என்று நான் அவ்வளவு கொச்சையாகச் சொன்னதுதான் அய்யாவுக்கு பிடித்தது. அப்படித்தான், இங்கே தளபதி வீரமணி பேசும்போது கூடச் சொன்னாரே, அய்யா எப்போதும் எல்லோரும் புரிந்துகொள்ளும் பாஷையிலேதான் பேசுவார் என்று, அப்படிப் பேசி, எழுதி இந்த நாட்டு மக்களை தன்பால் கவர்ந்தவர், இழுத்தவர், ஈர்த்தவர் தந்தை பெரியார் அவர்கள். பெரியாரின் கொச்சைத் தமிழ் சாதி ஒழிப்புக்கு பயன்பட்டிருக்கின்றது.

நாங்கள் அழகாக எழுதி அண்ணாவைப் போல் எழுத வேண்டுமென்று முயற்சித்து, அண்ணாவைப்போல் எழுதிப் பார்த்து, புரட்சிக் கவிஞரைப் போல எழுத வேண்டுமென்று முயற்சித்து, அதைப்போல கவிதைகளை எழுதி, எவ்வளவு எழுதினாலும், அத்தனையும் தந்தை பெரியார் அவர்களுடைய அந்தக் கொச்சைத் தமிழுக்கு முன்னால் என்றைக்கும் நின்றதில்லை. அந்தக் கொச்சைத் தமிழ்தான் இன்றைக்கு சாதிய ஒழிப்புக்கு, மதமாச்சரியங்களால் ஏற்படுகின்ற மடமைகளைக் கொளுத்துவதற்குப் பயன்பட்டிருக்கின்றது.

அப்படிப்பட்ட தந்தை பெரியாருடைய வழியில் நான்கு ஊராட்சி மன்றங்களில் நம்முடைய தோழர்கள் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நான் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன், 80 இலட்ச ரூபாய் அவர்களுக்கு அரசின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நான்கு ஊராட்சி மன்றங்களுக்கும், இதிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றாலுங்கூட, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதனால் ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியை அடையாளபூர்வமாக நான் வெளிப்படுத்த விரும்புகின்ற காரணத்தால், இருபது இலட்சம் ரூபாய் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நான்கு ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் இருபது இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது என்பதையும் எடுத்துக் கூறி, இங்கே வந்து வாழ்த்திய பெருமக்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீண்ட நேரம் பேச இயலவில்லை, உடல் நலமும், குரல் நலமும் சரியாக இல்லாத காரணத்தினால் இந்த அளவோடு விடை பெற்றுக் கொள்கிறேன்.

# பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளுக்கு தலா ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு

"ஏறக்குறைய பத்தாண்டு காலமாக நடைபெற முடியாமல் இருந்த நான்கு ஊராட்சிகளினுடைய தேர்தலை நடத்தி அதனுடைய வெற்றி விழாவாக இந்த சமத்துவப் பெருவிழா நிகழ்ச்சி எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது."

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்கக் கூடிய ஒரு சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பெருமைப்படுகிறேன்.

அண்மையிலே நடந்து முடிந்திருக்கக் கூடிய உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலைப் பொறுத்தவரையிலே 6 மாநகராட்சிகளையும் 102 நகராட்சிகளில் 88 நகராட்சிகளையும், 50 மூன்றாந்தர நகராட்சிகளில் 39 நகராட்சி களையும், 561 பேரூராட்சிகளில் 371 பேரூராட்சிகளையும், 29 மாவட்ட ஊராட்சிகளில் 27 ஐயும், 385 ஊராட்சி ஒன்றியங்களில் 324 ஒன்றியங்களையும் உங்களுடைய அன்போடு, ஆதரவோடு நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணி சிறப்பான வகையிலே வெற்றியைப் பெற்றிருக்கிறது.

இந்த வெற்றியை நாம் பெற்றிருந்தாலும் இதை அடைந்து கொண்டிருக்கின்ற மகிழ்ச்சியைவிட மதுரை மாவட்டத்தில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சிகளிலும் விருதுநகர் மாவட்டத்தில் கொட்டக் கச்சியேந்தலில் நடைபெற்று முடிந்திருக்கக் கூடிய இந்த தேர்தலில் நாம் பெற்றிருக்கக் கூடிய மகிழ்ச்சியைவிட வேறு எந்த மகிழ்ச்சியும் நாம் பெரிதாகக் கருதிட முடியாது. பத்தாண்டு காலமாக தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பெரும் பிரச்சினை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நமது ஆட்சியின் மூலமாக தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆக, இது இந்த அரசிற்குப் பெருமை – குறிப்பாக இதை வழி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இது ஒரு பெரும் பெருமை என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.

உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் என்கின்ற அந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால், இதில் எனக்கும் ஒருதுளி பங்கு உண்டு. இந்த அடியேனுக்கும் அந்தப் பெருமை உண்டு என்பதை நான் மறந்துவிட முடியாது.

பாப்பாபட்டி ஊராட்சித் தலைவர் பொறுப்பிற்கு ப.பெரியகருப்பன் அவர்களும், துணைத் தலைவராக க.தேவராஜ் அவர்களும், கீரிப்பட்டி ஊராட்சி தலைவராக மு.பாலுச்சாமி அவர்களும் துணைத் தலைவராக வெ. பழனிச்சாமி அவர்களும், நாட்டார்மங்கலம் ஊராட்சித் தலைவராக ப.கணேசன் அவர்களும், துணைத் தலைவர் பொறுப்பிற்கு அ.முத்துராமலிங்கம் அவர்களும், கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சித் தலைவர் பொறுப்பிற்கு சோ.கருப்பன் அவர்களும், துணைத்தலைவராக மு.முனியாண்டி அவர்களும், அவர்களோடு சேர்ந்து தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த வார்டின் உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் இந்த நேரத்தில் ஊரக வளர்ச்சி – உள்ளாட்சித்துறையின் மூலமாக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுடைய பொறுப்பு என்பது தொடர்ந்து 6 மாதத்திற்கு அது காலியாக இருந்திட முடியாது. அந்த வகையிலேதான் இன்றைக்கு சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து 10 முறை தேர்தல் அட்டவணை அறிவிக்கப்பட்டும் இந்த 4 ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே முறையாக தேர்தலை நடத்த முடியவில்லை. போட்டியிடுவதற்கு முன்வர முடியாத ஒரு சூழ்நிலை. சில நேரங்களில் போட்டியிட்டாலும் வெற்றி பெற்றிருந்தாலும் பதவியேற்றவுடன் ராஜினாமா செய்ய வேண்டிய ஒரு நிலை.

அது மட்டுமல்ல; சில நேரங்களிலே வேட்பு மனு தாக்கல்கூட செய்ய முடியாத ஒரு நிலை. ஆகவே, இந்த நிலையில் இருந்த அந்த நிலையை மாற்றி, தமிழகத்திலே நம்முடைய ஆட்சி உருவாக்கப்பட்டதற்குப் பிறகு இந்த நான்கு ஊராட்சிகளில் முறையாக இந்த தேர்தலை நடத்தி, அதற்குரிய பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கக் கூடியவர்களை அழைத்து இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 4 ஊராட்சி மன்ற தலைவர்களுடைய பொறுப்பு என்பது 1996–லிருந்து இந்தத் தலைவர்கள் பொறுப்பு என்பது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. 1996லும் தேர்தல் நடைபெறவில்லை – 2001ஆம் ஆண்டிலும் இந்தத் தேர்தலை நடத்த முடியவில்லை. இடையிலே பல்வேறு முயற்சிகள் நடந்திருந்தாலும், ஆனாலும் முறையாக



தேர்தலை நடத்த முடியவில்லை. இப்பொழுது நாம் நடத்தி முடித்திருக்கிறோமே, இந்த உள்ளாட்சித் தேர்தலை பொறுத்தவரையிலே ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே சுழற்சி முறையிலேதான் நாம் தேர்தலை நடத்தி முடித்திருக்கிறோம்.

ஆனால், இந்த நான்கு ஊராட்சிகளைப் பொறுத்த வரையில் இந்த சுழற்சி முறையிலே விதிவிலக்கு அளித்து அதற்காக அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அந்த ஆணையை, சட்டமன்றத்திலே ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி, இந்த மசோதாவை சட்ட மன்றத்திலே இதற்காக வரவேற்று இதற்காக குரல் கொடுத்திருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாம் இன்றைக்கு இந்த மேடையிலே வீற்றிருக்கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட ஒரு சிலர் வரவில்லை ஏன் என்பது உங்களுக்குத் தெரியும்.

கீரிப்பட்டி – கொட்டக்கச்சியேந்தல் இந்த ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலே நான் இங்கே குறிப்பிட விரும்புவது தலைவர்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அழைத்து, நினைவு பரிசு வழங்கி சால்வை அணிவித்து வாழ்த்திய நேரத்தில், அந்த வாழ்த்துக்களைப் பெற்ற தலைவர்கள் முதல்வரிடத்திலே எடுத்து வைத்த கோரிக்கைகள் எங்களுடைய ஊராட்சிக்கு இந்தந்த வசதிகளை எல்லாம் செய்து தரவேண்டும் என்று அந்த கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள்.

நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு
தமிழகத்திலே இருக்கக் கூடிய கிராமப்
பகுதிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர
வேண்டும் என்கின்ற அடிப்படையில்
அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்
திட்டம் என்ற ஒரு உன்னதமான திட்டத்தை
உருவாக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும்
20இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யக்கூடிய
ஒரு சூழ்நிலையை நம்முடைய முதல்வர்
அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

நான் இந்தத் துறையினுடைய அமைச்சர் என்கின்ற முறையிலே தெரிவிக்க விரும்புவது நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்திலே இருக்கக் கூடிய கிராமப் பகுதிகளுக்கு எல்லா வசதிகளும் செய்து தர வேண்டும் என்கின்ற அடிப்படையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு உன்னதமான திட்டத்தை உருவாக்கி ஒவ்வொரு கிராமத்திற்கும் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

ஆகவே, அப்படி ஏற்படுத்தித் தந்திருக்கக்கூடிய சூழ்நிலையின் அடிப்படையில் இந்த கீரிப்பட்டி, கொட்டக்கச்சியேந்தலைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் அந்த இரண்டு ஊராட்சிகளும் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்லி, அதே நேரத்தில் பாப்பாபட்டி, நாட்டார் மங்கலத்தைப் பொறுத்தவரையிலே மாவட்ட ஆட்சித் தலைவருடைய விருப்பார்ந்த நிதிகளிலிருந்து இந்த ஆண்டு 20 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த ஊரினுடைய அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

தேவார மூவர் பாடிய ஊர் திருவாரூர். பசுவின் கன்று மீது தேரை விட்டதற்காக தனது ஆருயிர் மகன்மீது தேரை விட்ட மனுநீதிச் சோழன் பிறந்த ஊர் திருவாரூர். திருவாரூர் தேருக்கு அழகுண்டு. இப்படி பல சிறப்புகளை திருவாரூர் பெற்றிருந்தாலும், அதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல அங்குள்ள மக்களிடையே சாதி வேறுபாடு கிடையாது. பிறப்பால் உயர்வு – தாழ்வு கிடையாது. இதை நான் சொல்லவில்லை.

எனவே நான்கு ஊராட்சியினுடைய நிலையைப் பொறுத்தவரையிலே சுழற்சி கூடாது. இதை அப்படியே பழைய நிலையிலிருந்து தேர்தலை நடத்த வேண்டும் என்று சொல்லி சட்டமன்றத்திலே பலர் குரல் கொடுத்தார்கள். அதை முழு மனதோடு நமது முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டு சட்டமன்றத்திலே அதை சட்டமாக்கி, சட்டமாக்கியதோடு மட்டுமல்லாமல் அன்றைக்கு முதல்வராக சட்டமன்றத்திலே உரையாற்றுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார். முறையாக தேர்தலை நடத்திட வேண்டும் – நியாயமாக இந்தத் தேர்தலை நடத்தி அதில் தேர்வு செய்யக்கூடிய அந்தத் தலைவர்களை பிரதிநிதிகளை எல்லாம் நம்முடைய தமிழகத்தினுடைய தலைநகரமாக இருக்கக் கூடிய சென்னை மாநகரத்திற்கு அழைத்து அவர்களைப் பாராட்டி விழா நடத்திட வேண்டும் என்று சட்டமன்றத்திலே எடுத்துச் சொன்ன அந்த உறுதிமொழி இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆக, இந்த விழா நடத்துவது மட்டுமல்ல – நம்முடைய அரசு செயலர் வரவேற்புரையாற்றுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார். இந்த விழா எப்படி நடைபெற வேண்டும் யார் யார் இந்த விழாவிற்கு அழைக்கப்பட வேண்டும். எந்த நிலையிலே இந்த விழாவினை நடத்திட வேண்டும் – அதுமட்டுமல்ல; விழாவினுடைய அழைப்பிதழைக் கொண்டு போய், நானும் நம்முடைய செயலர் அவர்களும் முதல்வரிடத்திலே காண்பித்தபோது அந்த அழைப்பிதழில் திருத்தங்களையெல்லாம் செய்து இந்த விழாவிற்கு ஒரு தலைப்பைத் தந்தார். அதுதான் 'சமத்துவப் பெருவிழா' என்கின்ற அந்த தலைப்பு.

ஆக, அந்த தலைப்பை தருகிறபோது, அவரே கைப்பட எழுதி, அதைத்தான் இன்றைக்கு நீங்கள் அழைப்பிதழிலே பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். ஆகவே, அந்த நிலையிலேதான் இன்றைக்கு இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் என்பது சமத்துவம்தான். சமத்துவத்தின் அடையாளம்தான் தமிழ். 'த' என்பது வல்லினம் 'மி' என்பது மெல்லினம் 'ழ்' என்பது இடையினம். தமிழ் எழுத்துக்கள் வல்லினம் – மெல்லினம்– இடையினம் மூன்று இனத்திலிருந்தும் ஒவ்வொரு எழுத்து இடம் பெறும் வகையில் அமைந்திருப்பதுதான் தமிழ். அதே போன்று பல்வேறு இன மக்களும் ஒன்றுகூடி ஒரே இடத்தில் ஒற்றுமையாக உறுதியுடன் வாழ்வதுதான் சமத்துவம் அந்த சமத்துவத்திற்குத்தான் இந்த விழா.

இந்த விழா சமத்துவப் பெருவிழாவாக நடைபெறுகிறது. வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் நன்றி சொல்லி விடை பெறுகிறேன்.

**சமத்துவப் பெருவிழாவில் (13.11.2006)**
**முன்னிலை வகித்து**
**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்**
**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை**

* * *



# சத்துணவு - அங்கன்வாடி மையங்களில் 30 ஆயிரம் பணியாளர்கள் உடனடி நியமனம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 22.11.2006 அன்று சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறையின் பல்வேறு பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் முடிவில் பின்வரும் ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 33,333 மகளிர் பயனடையும் வகையில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு பெரும் வரவேற்பு இருப்பதைக் கருத்தில் கொண்டு இதன் கீழ் அதிக மகளிர் பயனடையும் வண்ணம் நிதி ஒதுக்கீட்டை ரூபாய் 60 கோடியாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்.
2. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்புத் தொகை ஒவ்வொரு மாதமும் ரூபாய் 200 வீதம் வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் இந்தத் தொகை மாதம் ரூபாய் 500 ஆக உயர்த்தப்பட்டு இதன் மூலம் 8,400 பேர் தற்போது பயனடைந்து வருகிறார்கள். இந்தத் திட்டத்திற்கு நல்ல வரவேற்பு இருப்பதால் பயனாளிகளின் எண்ணிக்கையை 8,400 லிருந்து 10,000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு கூடுதலாக சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகும்.
3. டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயன்பெற தற்போது வயது வரம்பு 20 முதல் 30 ஆண்டுகளாக உள்ளது. 30 வயதைக் கடந்த விதவைகளை மறுமணம் செய்து கொள்கிறார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு இந்த வயதுவரம்பை 30லிருந்து 35 ஆக உயர்த்த ஆணையிடப்பட்டுள்ளது.
4. தமிழக அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் தற்போது ஆண்டொன்றிற்கு ரூபாய் 250 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் பயன்பெற அதிக விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்காக கூடுதலாக ரூபாய் 100 இலட்சம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
5. சத்துணவு மற்றும் அங்கன்வாடி மையங்களில் 30,000 பணியாளர்கள் உடனடியாக நியமனம் செய்யப் படுவார்கள். ●

# சமத்துவம் பேணிய சான்றோர்கள்



புத்தர்

முதன் முதலில் சாதிப்பாகுபாடுகளை எதிர்த்த சமுதாய சீர்திருத்த மகான்
மண்ணுயிர் அனைத்தையும் தன்னுயிர் போல் கருதிட வேண்டும் என போதித்தவர்

## திருவள்ளுவர்



"பிறபொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

## மகாத்மா காந்தியடிகள்
(1869 - 1948)



★ தீண்டாமை என்பது ஒரு பாவச்செயல் என பிரகடனம் செய்த அண்ணல்.

★ சாதி சமய நல்லிணக்கத்திற்காக தன்னை அர்ப்பணித்த மகாத்மா.

## தந்தை பெரியார்
(1879 - 1973)



★ ஒடுக்கப்பட்டோருக்கு இடஒதுக்கீடு பெற்றுத்தந்த சுயமரியாதை இயக்கத் தந்தை.

★ பகுத்தறிவுப் பகலவன். தாழ்த்தப்பட்டோருக்கு சமஉரிமை பெற்றுத் தந்த வைக்கம் வீரர்.

## பேரறிஞர் அண்ணா
(1909 - 1969)



★ சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் தந்து சமத்துவ சமுதாயம் கண்டவர்.

★ சுயமரியாதை இயக்கத்திற்கும், சமூக நீதிக்கும் வித்திட்ட பேரறிஞர்.

# சமத்துவம் பேணிய சான்றோர்கள்

## சர்.பிட்டி. தியாகராயர்
(1852 - 1925)



★ சமூக நீதிக்காக பெரும் தொண்டாற்றிய
நீதிக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவர்!
★ ஒடுக்கப்பட்ட மக்கள்
சட்ட ரீதியாக எல்லா உரிமைகளும் பெற
பாடுபட்டவர்!

## தமிழ்த்தென்றல் திரு.வி.க.
(1883 - 1953)



★ இங்கு பிறந்தவர் யாவரும் தமிழரே!
★ தமிழகத்தை தாயகமாக
கருதுபவர்கள் யாவரும் தமிழரே!

## இராமலிங்க வள்ளலார்
(1823 - 1874)



★ சாதியிலே மதங்களிலே
சமய நெறிகளிலே...
... ஆதியிலே அபிமானித் தலைகின்ற
உலகீர் அலைந்து அலைந்து வீணே நீர்
அழிதல் அழகலவே"

## இராஜாராம் மோகன்ராய்
(1774 - 1833)



★ உடன்கட்டை ஏறும் கொடுமையை
எதிர்த்து வெற்றி கண்டவர்.
★ குழந்தை திருமணத்தை எதிர்த்தவர்.
பெண் கல்வியை வளர்த்தவர்.

## ரெட்டமலை சீனிவாசன்
(1860 - 1945)



★ தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரின்
கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டுக்கு
பெரும் தொண்டாற்றியவர்.
★ 1930இல் லண்டன் வட்டமேஜை மாநாட்டில்
பழங்குடியினர் உரிமைக்காக குரல் கொடுத்தவர்

## இராமானுஜர்
(1017 - 1137)



★ சாதி பேதமற்ற பக்தி நெறி
★ திருமந்திர பொருளை
திருக்கோட்டியூர் கோயிலில்
அனைத்து மக்களுக்கும் உபதேசம்.

# சமத்துவம் பேணிய சான்றோர்கள்

## மகாத்மா பூலே
(1828 - 1890)



★ தாழ்த்தப்பட்ட பெண் குழந்தைகளுக்கான முதல் பள்ளியை 1848இல் நிறுவியவர்.

★ சத்ய சோதக் சமாஜம் நிறுவி சமூக நீதிக்காக போராடியவர்.

## பெருந்தலைவர் காமராஜர்
(1903 - 1975)



★ ஏழை, எளிய மக்களின் கல்விக்கண் திறந்த கர்மவீரர்.

★ வயிற்றுப் பசியை போக்காமல் அறிவுப் பசியை தீர்க்க முடியாது என பள்ளிகளில் இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்.

## மகாகவி பாரதியார்
(1882 - 1921)



"சாதிகள் இல்லையடி பாப்பா!
உயர் தாழ்ச்சி
இகழ்ச்சி சொலல் பாவம்"

## மூதறிஞர் இராஜாஜி
(1878 - 1972)



★ தீண்டாமை ஒழிப்பு மதுவிலக்கிற்காகப் பாடுபட்டவர்.

★ கோயில்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறந்துவிட ஆணையிட்டவர்

## அயோத்திதாசப் பண்டிதர்
(1845 - 1914)



★ 19 ஆம் நூற்றாண்டிலேயே தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக இயக்கம் கண்ட முன்னோடி.

★ ஆதிதிராவிடர்களுக்காக பல பள்ளிகளை நிறுவியவர்.

## பாவேந்தர் பாரதிதாசன்
(1891 - 1964)



"சாதி, மதம் தமிழ் இல்லை! அந்தச்
சாதி மதத்தை தமிழ் கொள்வதில்லை"

# சமத்துவம் பேணிய சான்றோர்கள்

## ப.ஜீவானந்தம்
(1907 - 1963)



★ மனித நேயர், சாதி சமய மறுப்பாளர், பொதுவுடமைவாதி.

★ நான் ஒரு நாத்திகன், ஏனெனில் நான் மனிதர்களை நேசிக்கிறேன் என்றவர்.

## அம்பேத்கர்
(1891 - 1956)



★ இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி.

★ தாழ்த்தப்பட்டோருக்கு அரசியல், சமூக மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெற்றுத் தந்தவர்.

## பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
(1908 - 1963)



★ ஆங்கிலேயரின் குற்றப்பரம்பரைச் சட்டத்தை எதிர்த்துப் போராடி, அச்சட்டத்தை திரும்ப பெறச் செய்தவர்.

★ தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார மேம்பாட்டுக்காக தனது சொந்த நிலங்களை தானமாக வழங்கியவர்.

## நாராயண குரு
(1854 - 1928)



★ சாதியத்தின் கோரப் பிடியிலிருந்து கேரளத்தை மீட்டவர்.

★ தாழ்த்தப்பட்டோருக்கு பல்லாயிரம் ஆண்டுகளாக மறுக்கப்பட்ட கல்விச் செல்வத்தை வழங்கியவர்.

## டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி
(1886 - 1968)



★ தேவதாசி முறையை ஒழிக்க சட்டம் இயற்ற காரணமானவர்.

★ அவர்கள் புனர்வாழ்விற்காக "அவ்வை இல்லம்" நிறுவியவர்.

## டாக்டர் நடேசனார்
(1875 - 1937)



★ 1912இல் திராவிட சங்கம் தோற்றுவித்து சமூக நீதிக்காக பாடுபட்டவர்.

★ ஆதிராவிட மக்கள் சமுதாய விழிப்புணர்வு பெற்று எழுவதற்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.




# தமிழகத்தில் எல்லாம் தமிழில் வர நாம் அனைவரும் இணைந்து நின்று செய்து முடிப்போம்

தமிழ் மாநிலம் அமைந்த
50ஆம் ஆண்டு பொன் விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை
(1.11.2006)

**“வெள்ளம் போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் கூட்டம், உள்ளத்தால் ஒருவரே, மற்று உடலினாற் பலராய் காண்பார்”** என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இந்த மேடையைப் பார்த்தாலும், எதிரே அமர்ந்திருக்கின்ற பெருங்கூட்டத்தைப் பார்த்தாலும், உடலினாற் பலராய் காணப்பட்டாலும், நாமெல்லாம் உள்ளத்தால் ஒருவரே என்று நிரூபிக்கின்ற விழாவாக, தமிழ்த் திருவிழாவாக இந்த விழா இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கடந்த நான்கைந்து நாட்களாக உடல்நிலை சரியில்லாமல் அலுவலகங்களுக்குக் கூடச் செல்லாமல், வீட்டிலேயே இருந்தேன். இருந்தாலும் விழா, தமிழ் விழா என்ற காரணத்தால், எப்படியும் இதிலே கலந்து கொள்ள வேண்டுமென்று நானே அழைத்திருக்கும்போது அழைக்கப்பட்டவர்கள் வருகின்ற நேரத்தில் அவர்களை வரவேற்பதுதான் தமிழ்ப்பண்பாடு என்ற அந்த உணர்வோடு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.



**அண்ணா மொழிந்த வரலாற்று வாசகம்!**

தமிழ் விழாவில் ஒரு தமிழன் கலந்து கொள்கின்ற வாய்ப்பு இருந்தும், கலந்து கொள்ள முடியாமல் போனால், அதைத் தவிர்த்தால் அது பெரும் தவறு என்பதை இதே மேடையில் 1968ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். 1968ஆம் ஆண்டு சென்னை ராஜ்யத்திற்கு, "தமிழ்நாடு" என்று பெயர் வைக்கப்பட்டு, அந்த நாளை விழாவாகக் கொண்டாட அறிவிக்கப்பட்ட அந்த நாளில், அறிஞர் அண்ணா, அந்த நாளை தொடங்கி வைக்க வருகை தந்தார், இதே இடத்திற்கு அப்போது இது "கலைவாணர் அரங்கம்" அல்ல, "பாலர் அரங்கம்" என்ற பெயரிலே விளங்கியது.

அப்போது அந்த விழாவில் பேசும்போது, "என்னுடைய உடல்நிலை மிகமிக சோர்வுற்றிருக்கின்றது. நான் விழாவிலே கலந்து கொள்ளக்கூடாதென்று என் வீட்டார், நண்பர்கள், மருத்துவர்கள், இயக்க முன்னோடிகள் என்று அத்தனை பேரும் தடுத்தும் கூட நான் இந்த விழாவிலே கலந்து கொண்டுதான் தீருவது என்று வந்திருக்கிறேன், காரணம் இருப்பது ஒரு உயிர், அது போகப் போவது ஒரு முறைதான், அது ஒரு நல்ல காரியத்திற்காகப் போகட்டுமே என்ற அந்த உறுதியோடுதான் இங்கே வந்திருக்கிறேன்" என்று அண்ணா சொன்னார்கள்.

அன்றைக்கு அண்ணா அவர்களின் உடல் நிலை எப்படி இருந்தது என்பதற்கும், இன்றைய என் உடல் நிலைக்கும் யாரும் ஒப்பிட்டுப் பார்த்து கதை எழுத மாட்டார்கள் என்று நம்புகிறேன். இது ஒரு சாதாரண வகையிலே உடலில் ஏற்பட்ட நோய் தாக்குதல்தான். அதைச் சமாளிக்க முடியாமல் ஐந்தாறு நாட்களாக படுக்கையிலே இருந்து இன்றைக்கு எழுந்து வந்தேன். வந்தபோதுகூட, தலைவர்கள் எல்லாம் என்னிடம், சிறிது நேரம் மட்டும் பேசி விட்டுப் போனால் போதும் என்று கூடச் சொன்னார்கள். நான் இயன்ற வரையில் சில கருத்துக்களை உங்களிடம் சொல்லி விட்டுப் போகலாம் என்று நம்புகிறேன்.

**எனதுள்ளம் அடைந்த பெருமகிழ்ச்சி!**

இந்த விழாவில் ஏறத்தாழ 60 பேர்களுக்கு நம்முடைய ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களிடத்திலே சிறப்புக் கேடயங்களைப் பெற்றிருக்கின்றார்கள். தமிழ்நாடு என்று வடிவமைக்கப்பட்ட அந்த செப்புக் கேடயங்களை இங்கே பெற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம்

வெளியூரிலிருந்து, திருத்தணியிலிருந்து, கன்னியா குமரியிலிருந்து வேறு பல மாவட்டங்களிலிருந்து இங்கு அழைக்கப்பட்டு இந்த மேடையிலே அவர்கள் வந்து தோன்றுவதற்கு முன்னால், புத்தாடை புனைந்து வாருங்கள் என்று அதையும் வழங்கி, அதைப் பெற்று புத்தாடை, புதுச் சொக்காய், புதுத்துண்டு இவைகளோடு வந்து காட்சி தந்த அந்த நிலைமையை நான் பார்த்தபோது என்னுடைய உள்ளம் பெருமகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது.

அதுமாத்திரமல்ல; ஓர் அறிவிப்பையும் செய்ய விரும்புகிறேன். எல்லைப் போராட்ட வீரர்கள் சுமார் 150 பேர்களுக்கு சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் 149 பேருக்கு இந்த எல்லைப் போராட்டத்திலே ஈடுபட்ட இந்த மான மறவர்களுக்கு, தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களுக்கு இதுவரையிலே **3,000** ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த விழாவினை முன்னிட்டு இன்று தொட்டு அந்தத் தொகை **4,000** ரூபாயாக உயர்த்தித்தரப்படும் என்பதை உங்களிடத்திலே நான் அறிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல அந்தக் குடும்பங்களிலே யாராவது மறைந்திருப்பார்களேயானால், எஞ்சியுள்ளவர்களுடைய வாழ்க்கைக்காக குடும்பப் பாதுகாப்புக்காக, அவர்களுடைய மரபுரிமையினருக்கு மாதந்தோறும் இதுவரை1,500 ரூபாய் வழங்கப்பட்டதை இனிமேல் 2,000 ரூபாயாக வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## வ.உ.சி இழுத்த செக்கு

இங்கே நம்முடைய திருமாவளவன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். வினாயகம் போன்றவர்களுக்கு, சிலம்புச் செல்வர் ம.பொ.சி. போன்றவர்களுக்கு, நேசமணி போன்றவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்க வேண்டும். ஒரு மண்டபமே கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் எந்த நேரத்திலும், எந்த நிலையிலும், எந்தத் தியாகிகளையும் நாங்கள் மறந்ததில்லை. சொல்லப் போனால், இருபதாண்டு காலம், முப்பதாண்டு காலம் நம்முடைய நண்பர் கிருஷ்ணசாமி அவர்கள் மன்னித்துக் கொள்ள வேண்டும். காங்கிரஸ் ஆட்சி, வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறிய பிறகு, தமிழகத்திலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றபோதுகூட, கண்டுபிடிக்க முடியாத – சிதம்பரனார் இழுத்த செக்கை நான் முதல் அமைச்சராக ஆனபிறகுதான், தேடிக் கண்டுபிடித்து அது கோயம்புத்தூர் சிறையில் இருக்கிறது என்று கண்டறிந்து, அதைக்கொண்டு வந்து சென்னை மாநகரத்திலே "கண்காட்சிப்" பொருளாக வைத்து அனைவரையும் பார்க்கச் செய்து, இப்போது அது கிண்டியிலே கவர்னர் வளாகத்திற்குள் வைக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

## தியாகிகளைப் பாராட்டுகிற அரசு

தியாகிகளுடைய மண்டபம் ஒன்று, நண்பர் இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப கட்டப்பட்டிருக்கின்றது. சங்கரலிங்கனாருடைய சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவு ஏன், சென்னை கோட்டை கொத்தளத்தில் ஒரு சிறுவன் கொடியேற்றினான். அந்தச் சிறுவன், பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்தவன். இருந்தாலும் கூட, அவனுடைய வீரத்தை, தியாகத்தை, நாட்டுப்பற்றை பாராட்டி அவனுக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றியிருக்கிறோம். "ஆர்யா" என்ற பாஷ்யம் என்பது அவனுடைய பெயர். அவன் கோட்டை கொடிமரத்திலே ஏறி தேசியக் கொடியை ஏற்றினான், அப்படி ஏற்றிய அந்த வீரத்தைப் புகழ்ந்து தி.மு.கழக ஆட்சியிலே கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே கவர்னர் வளாகத்திற்குள் பாஷ்யத்தின் சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கின்றது. இப்படியெல்லாம் தியாகிகளைப் பாராட்டுகின்ற அரசுதான் தி.மு.கழக அரசு. எனவே இங்கே நம்முடைய அய்யா மருத்துவர் ராமதாசு அவர்களும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தோழர்களும் திருமாவளவன் போன்றவர்களும் அத்தனை பேரும் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துகளையெல்லாம் நெஞ்சிலே பதிய வைத்து தியாகிகளை என்றைக்கும் மறக்க மாட்டோம். அந்தத் தியாகிகள் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்றல்ல. எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாட்டிற்கு மண்ணுக்கு, மொழிக்குப் போராடியவர்கள், அந்தப் போரிலே மாண்டவர்கள், அந்தப் போரிலே தங்கள் உடமைகளை இழந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கின்ற அரசாக தி.மு.கழக அரசு இருக்கும் என்பதை இந்த நல்ல நாளில் வீரத்திருநாளில் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கின்ற மத்திய அரசினுடைய முடிவின்படி 1.11.1956ஆம் ஆண்டு சென்னை மாநிலம் (மெட்ராஸ் ஸ்டேட்) முதன் முதலாகத்

தோன்றியது . சென்னை மாநிலம் தோன்றிய 25ஆவது ஆண்டு நினைவாக என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே 1.11.1981இல் சென்னையில் இந்த நாளின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டிருக்கின்றது. ஆகவே தேசிய இயக்கத்தார், திராவிட முன்னேற்றக் கழகத்தார், கம்யூனிஸ்ட் நண்பர்கள் அல்லது வேறு கட்சிக்காரர்கள் என்கின்ற பேதம் இல்லாமல் வேறுபாடு இல்லாமல் எல்லோரும் நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டு மக்கள், எல்லோரும் தேசியத்தார் என்ற அந்த உணர்வோடுதான் இதுபோன்ற விழாக்களிலே நாம் கலந்து கொள்கின்றோம்.



### சரித்திரப் புகழ்பெற்ற பக்கங்கள்

மாநிலம் தோன்றிய 50ஆம் ஆண்டு நிறைவையொட்டி, இன்றைக்கு கலைவாணர் அரங்கத்திலே நாம் கூடியிருக்கின்றோம். ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். 1924ஆம் ஆண்டு இருக்கிறதே, அது நான் பிறந்த ஆண்டு. அந்த பிறந்த ஆண்டுக்கு, நான் பிறந்தது மாத்திரம் சிறப்பு அல்ல, வேறு பல சிறப்புகளும் இருக்கின்றன. வேறு பல சிறப்புகள் என்பதால், நான் பிறந்தது சிறப்பு என்று அர்த்தமல்ல. பல சிறப்புக்கள் இருக்கின்றன. அந்தச் சிறப்புக்களில் ஒரு சிறப்பாக ஒட்டிக் கொண்டிருக்கின்ற சிறப்பு, நான் பிறந்த சிறப்பு. ஏனென்றால் ஒரு சாதாரண குடும்பத்தில், தஞ்சை மாவட்டத்தில், திருக்குவளை என்ற கிராமத்தில் மிக மிக மிக என்று எத்தனை மிக மிக போட்டுக் கொண்டாலும் பொருந்தக் கூடிய, அப்படிப்பட்ட ஒரு சாதாரணக் குடும்பத்தில், இழித்துப் பேசக் கூடிய குடும்பத்திலே பிறந்தவன் நான். அதனால்தான் இழிமொழிகளை, பழிச்சொற்களை எந்த நேரத்திலும் தாங்கிக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தை நான் பெற்றிருக்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அப்படிப்பட்ட நான் 1924 ஆம் ஆண்டு பிறந்தேன். அந்த 24ஆம் ஆண்டுதான் பிரச்சினைக்குரிய காவேரி ஒப்பந்தமும் பிறந்தது. அந்த 24ஆம் ஆண்டுதான் மாவீரன் லெனின் மாண்டான். அந்த 24ஆம் ஆண்டுதான் தந்தை பெரியார் "வைக்கம் வீரர்" ஆனார். எவ்வளவு சரித்திரப் புகழ்பெற்ற பக்கங்கள் என்னுடைய பிறப்பையொட்டி இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

அந்த 24ஆம் ஆண்டு நடைபெற்ற இன்னொரு சம்பவத்தை இந்த நேரத்தில் குறிப்பிடுவது மிக மிக முக்கியம் என்று நான் கருதுகிறேன். 1924ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதி 39ஆவது காங்கிரஸ் மகாசபை பெல்காம் நகரில் கூடியது. அதன் தலைவராக அப்போது விளங்கியவர் அண்ணல் காந்தியடிகள். அந்தக் காந்தியடிகள் கொண்டு வந்த தீர்மானம் என்ன தெரியுமா ?

1. மாநில அரசுகளை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும்.

2. திருத்தி அமைக்கப்பட்ட மாநிலங்கள் பூரண சுயாட்சி பெற்றதாக இருக்க வேண்டும்.

3. அந்தந்த மாநில மொழியிலேயே அதனதன் சட்டமன்றங்களும் நடைபெற வேண்டும்.

4. மாநிலந்தோறும் உள்ள நீதிமன்றங்களும், மாநில மொழியிலேயே நடைபெறவேண்டும்.

இதெல்லாம் நான் சொல்வதல்ல, மகாத்மா காந்தி அவர்கள் 1924 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26ஆம் தேதி 39ஆவது காங்கிரஸ் மகாநாட்டில் பெல்காம் நகரத்தில் கூடிய அந்த மாநாட்டில் உதிர்த்த வாசகங்கள். அவர் நேரடியாக எழுதிய தீர்மானம் அந்தத் தீர்மானத்தைத் தான் இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவேற்ற வேண்டும். செயல்படுத்த வேண்டுமென்று நாம் இன்றைக்கு பேசிக் கொண்டிருக்கிறோம் இப்படி பேசிக்கொண்டேயிருந்தால், ஒவ்வொரு விழாவிலும்

பேசிக் கொண்டேதான் இருப்போம். எனவே இதைச் செயற்படுத்த வேண்டிய காலம் விரைவிலே வந்தாக வேண்டும், செயல்படுத்துகின்ற சிங்கங்களாக நம்முடைய இளைஞர்கள், வாலிபர்கள் முன் வர வேண்டுமென்று அவர்களையெல்லாம் இந்த விழாவின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

1927ஆம் ஆண்டில் Indian Statutory Commission என்ற ஒரு கமிஷன் ஏற்பட்டபோது காங்கிரஸ் கட்சி தனது தீர்மானத்தில், என்ன வடித்தெடுத்தது என்றால்,

'The time has come for the Re-distribution of Provinces on a linguistic basis'

'மொழி வழி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்று 27ஆம் ஆண்டிலேயே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தீர்மானம் நிறைவேற்றியது. ஆக இன்றைக்கு நாம் இந்த விழா கொண்டாடுவது அன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில்தான் என்பதை மறந்து விட முடியாது.

**தாய்மொழி வளர்ச்சி**

நாங்கள் நன்றி மறக்கக்கூடியவர்கள் அல்ல. நன்றி தெரிவிப்பவர்கள். அப்படித்தான் காங்கிரஸ் கட்சியின் நண்பர்களுக்கெல்லாம் இந்தத் தீர்மானத்தை 1927ஆம் ஆண்டிலேயே கொண்டு வந்து நிறைவேற்றியதற்காகவும், 28ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் மாநாட்டில் அமைக்கப்பட்ட நேரு தலைமையிலான மொழிக் குழு "மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டால்தான் அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் தாய்மொழி வளர்ச்சி பெறும்" என்பதை வலியுறுத்தியது.

இவற்றின் விளைவாக இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் அரசு வங்காள மாகாணத்திலிருந்து அஸ்ஸாம், ஒரிசா ஆகியவற்றைத் தனித்தனி மாநிலங்களாகப் பிரித்து, எஞ்சிய கல்கத்தாவையும் அதன் பகுதிகளையும் வங்காளராஜ்யம் என தனி மாநிலம் ஆக்கியது. இவைகள் எல்லாம் நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் இங்கே உரையாற்றிய டி.கே.ரெங்கராஜன் அவர்களும் நன்கறிவார்கள். தோழர் பாண்டியன் அவர்களும் நன்கறிவார்கள். அவர்கள் இத்தகைய வரலாறுகளை உருவாக்கியிருக்கும் இயக்கத்தினர். எனவே நான் அதை விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இல்லையென்றே கருதுகிறேன்.

**தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிற காட்சி!**

ஆனால், வங்காள ராஜ்யம் தனி மாநிலமாக ஆன பிறகும் கூட, தென்னிந்தியாவில் தமிழகம், ஆந்திரம், மலபார், தென்கன்னடம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட சென்னை ராஜ்யத்தை மட்டும் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்க பிரிட்டிஷ் அரசு அப்போது பிடிவாதமாக மறுத்துக் கொண்டே இருந்தது. அந்தப் பிடிவாதத்தை தகர்த்ததின் வெற்றியாகத்தான் இன்றைக்கு மாநிலங்கள் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிந்திருக்கின்றன. அதிலே ஒரு மாநிலமாக தமிழகம் இன்றைக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றது என்று விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே நண்பர் திருமாவளவன் குறிப்பிட்டதைப் போல் இது மகிழ்ச்சியாகக் கொண்டாடுகின்ற விழாவா அல்லது இதிலே வரவு செலவு என்று பார்த்தால் இந்த



மொழிவாரி மாநிலப் பிரிவினைகளால் நமக்கு வரவு அதிகமா, செலவு அதிகமா என்று பார்த்தால் வரவு குறைவுதான். ஆனால் செலவு அதிகம்தான். என்னென்ன செலவு என்றால், இன்றைக்கு தேவிகுளம், பீர்மேடு நம்மிடத்திலே இல்லை, அது செலவுக் கணக்கிலே போய் விட்டது. வரவுக் கணக்கிலே இருப்பது நாம்தான். நாம் மிச்சம் இருக்கிறோமே அதுதான் இந்த மாநிலப் பிரிவினையால் ஏற்பட்ட நன்மை.

நான் இதனை எதற்கு ஒப்பிடுகிறேன் என்றால், ஒரு தெருவில் தீப்பற்றி எரிந்து வீடுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகி, வீடுகளிலே இருந்த பண்ட பாத்திரங்கள் எல்லாம் கருகிப்போய், எல்லாம் போய்விட்டதே என்று அழுகின்ற நேரத்தில் மிச்சம் அந்தத் தாய் பெற்ற குழந்தை மாத்திரம் ஒரு மூலையிலே உயிரோடு துடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் அந்தக் குழந்தையைத் தூக்கிய தாய், "ஆ, என் கண்ணே, நீ பிழைத்திருக்கிறாயா?" என்று கொஞ்சுவாளே, அதைப் போல நம்முடைய மொழி தமிழ், இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்தும் காப்பாற்றப்பட்டு பிழைத்திருக்கின்றது. அதை வளர்ப்போம். அதை வாழ்த்துவோம், அதற்கு வலிமை சேர்ப்போம் என்ற அந்த எண்ணத்தைத் தான் இந்த மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பிறகு நாம் பெற்றிருக்கின்ற உறுதியாகக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### இணைந்து நின்று செய்து முடிப்போம்!

"இந்த உறுதியான நாளில் தமிழகத்தில் எல்லாம் தமிழிலே வரவேண்டும். அதற்கு கருணாநிதி ஆவன செய்ய வேண்டும், உங்கள் காலத்திலே இல்லாமல் எந்தக் காலத்தில் செய்யப் போகிறீர்கள்?" என்று எல்லோரும் கேட்டார்கள். நம்முடைய மருத்துவர் அய்யாவிலிருந்து திருமாவளவனிலிருந்து, எல்லோரும் " உங்கள் காலத்தில் தான் செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள் தயவு செய்து, இது "நம்முடைய" காலம் என்பதை மறந்து விடாதீர்கள்! இதிலே உங்கள் காலம், எங்கள் காலம் என்று அல்ல, நம்முடைய காலத்திலே செய்வோம், நம்முடைய காலத்திலே நாம் இணைந்து இன்று செய்து முடிப்போம்! நல்ல காரியத்தைச் செய்யும்போது இணைவதிலே தவறில்லை. ஆகவே இணைந்து நின்று செய்வோம் என்று அனைவரையும் அதற்கு அழைத்து இந்த அளவில் உடல் நிலை கருதி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். ●

## உயர்நீதிமன்ற வழக்கு மொழியாக தாய்மொழி தமிழ்

### தமிழக அரசு அறிவிப்பு

சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும், இதுவரையில் ஆங்கில மொழியில் மட்டுமே நடைபெற்று, ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. அரசியல் சாசனச் சட்டம் பிரிவு 348–இல் உயர்நீதிமன்றத்திலும் மற்றும் உச்சநீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆங்கில மொழியே சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

எனினும், அரசியல் சாசனச் சட்டம் பிரிவு 348, உட்பிரிவு (2) –ல் மாநில மொழியில் உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற வேண்டும் என்று குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று மாநில அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள அரசியல் சாசனச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி சென்னை உயர்நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் உள்ள வழக்கு மொழியாக தாய்மொழி தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கான நடவடிக்கைகள் முறைப்படி மேற்கொள்ளப்படும். □

# ஐந்து மாதங்களில் தமிழகத்தில் ரூ.3,000 கோடி வெளிநாட்டு முதலீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்




**அ**றிஞர் அண்ணா அவர்களுடைய பொன்மொழி ஒன்று உண்டு. அது பொன்மொழி மாத்திரமல்ல, ஆளுகிறவர்களை எச்சரிக்கின்ற மொழி. "சாலையோரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்தில் விபரீத எண்ணங்கள், அரசே, அதுதான் காலக்குறி'' என்பது அந்தப் பொன்மொழியாகும். இப்படிச் சொன்னால், அவர்கள் புரட்சி செய்ய ஆரம்பித்தால், இன்றைக்கு மௌனப் புரட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற வேலையற்றதுகள், சாலையோரத்திலே படுத்துறங்குகின்றவர்கள் கொதித்தெழுந்து எரிமலையாகி, எதிர்க்கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தால் அரசு

11.11.2006 அன்று திருச்சிராப்பள்ளியில் வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித் தொகை திட்ட தொடக்க விழாவில் ஆற்றிய உரை

கவிழும், நாடு நாசமாகும், ஊர் சீர்கெடும், பூகம்பம் ஏற்படும், புயல் வீசும், சூறாவளி தோன்றும் அந்தச் சுழற்காற்றில் நீங்கள் எல்லாம் சுருட்டி எறியப்படுவீர்கள் என்ற எச்சரிக்கையை ஆளுகின்ற ஆட்சியாளருக்கு அந்த இரண்டு வாக்கியம் எடுத்துச் சொன்னது. அதைத்தான் இன்றைக்கு நெஞ்சிலே பதிய வைத்துக் கொண்டு இந்த அரசு சாலையோரத்திலே கிடக்கின்ற வேலையற்றதுகளுக்கு வேலை கொடுக்கின்ற பணியை, வேலை கொடுக்கின்ற வரையில் அவர்களுடைய வாழ்க்கைக்கு இன்பம் அளிக்கின்ற அந்தச் சேவையில் ஈடுபட்டிருக்கின்றது. அதனுடைய அடையாளமாகத்தான் இன்றைக்கு திருச்சி நகரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அந்த அரசுக்கு தலைமையேற்பவன் என்ற முறையில் நான் திருச்சியிலும், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் தமிழகத்தில் எல்லா பகுதிகளிலும் இந்த ஒரே நாளில் வேலைவாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கு, பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு தொகை, ப்ளஸ் டூ படித்தவர்களுக்கு ஒரு தொகை, பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தவர்களுக்கு ஒரு தொகை என்று – முறையே 300 ரூபாய், 200 ரூபாய், 150 ரூபாய் என்று வழங்குகின்ற நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி இருக்கின்றன.

**ஆறுதலான உதவி**

இந்த ஏற்பாட்டின்படி இந்த ஒரு நாள் தமிழகம் முழுவதும் பயன்பெறுகின்ற இளைஞர்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தினுடைய புள்ளி விவர எண்ணிக்கையின்படி மாவட்ட வாரியாகப் பார்த்தால் திருச்சியிலே இன்றைக்கு வழங்கப்படுகின்ற இந்தத் தொகை எத்தனை பேர்களுக்கு வழங்கப்படுகின்றது என்றால், 14,089 பேருக்கு வழங்கப்படுகின்றது.

சென்னை மாவட்டத்தில் 5,528 பேர்; திருவள்ளூர் மாவட்டத்தில் 5,218 பேர்; காஞ்சிபுரத்தில் 5,407 பேர்; வேலூர் மாவட்டத்தில் 9,783 பேர்; திருவண்ணாமலை மாவட்டத்தில் 9,242 பேர்; கரூர் மாவட்டத்தில் 3,629 பேர்; பெரம்பலூர் மாவட்டத்தில் 7,548 பேர்; புதுக்கோட்டை மாவட்டத்தில் 7,199 பேர்; தஞ்சாவூர் மாவட்டத்தில் 6,039; திருவாரூர்

**வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித் தொகை திட்டத்தில் திட்டம் தொடங்கப்பட்ட 11.11.2006 அன்று மட்டும் பயன்பெற்றோர் விவரம்**

| வ.எண். | மாவட்டம் | நபர்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | 5,528 |
| 2. | திருவள்ளூர் | 5,218 |
| 3. | காஞ்சிபுரம் | 5,407 |
| 4. | வேலூர் | 9,783 |
| 5. | திருவண்ணாமலை | 9,242 |
| 6. | கரூர் | 3,629 |
| 7. | பெரம்பலூர் | 7,548 |
| 8. | புதுக்கோட்டை | 7,199 |
| 9. | தஞ்சாவூர் | 6,039 |
| 10. | திருச்சிராப்பள்ளி | 14,089 |
| 11. | திருவாரூர் | 4,080 |
| 12. | கடலூர் | 8,824 |
| 13. | நாகை | 6,074 |
| 14. | விழுப்புரம் | 9,661 |
| 15. | கோவை | 2,774 |
| 16. | சேலம் | 8,293 |
| 17. | நீலகிரி | 4,540 |
| 18. | தருமபுரி | 6,732 |
| 19. | கிருஷ்ணகிரி | 4,496 |
| 20. | நாமக்கல் | 8,527 |
| 21. | ஈரோடு | 4,230 |
| 22. | மதுரை | 11,684 |
| 23. | தேனி | 6,893 |
| 24. | திண்டுக்கல் | 6,317 |
| 25. | சிவகங்கை | 5,690 |
| 26. | இராமநாதபுரம் | 5,956 |
| 27. | விருதுநகர் | 6,342 |
| 28. | தூத்துக்குடி | 5,018 |
| 29. | நெல்லை | 8,923 |
| 30. | கன்னியாகுமரி | 10,080 |

மாவட்டத்தில் 4,080 பேர்; கடலூர் மாவட்டத்தில் 8,824 பேர்; நாகை மாவட்டத்தில் 6,074 பேர்; விழுப்புரம் மாவட்டத்தில் 9,661 பேர்; கோவை மாவட்டத்தில் 2,774 பேர்; சேலம் மாவட்டத்தில் 8,293 பேர்; நீலகிரி மாவட்டத்தில் 4,540 பேர்; தருமபுரி மாவட்டத்தில் 6,732 பேர்; கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4,496 பேர்; நாமக்கல் மாவட்டத்தில் 8,527 பேர்; ஈரோடு மாவட்டத்தில் 4,230 பேர்; மதுரை மாவட்டத்தில் 11,684 பேர்; தேனி மாவட்டத்தில் 6,893 பேர்; திண்டுக்கல் மாவட்டத்தில் 6,317 பேர்; சிவகங்கை மாவட்டத்தில் 5,690பேர்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,956 பேர்; விருதுநகர் மாவட்டத்தில் 6,342 பேர்; தூத்துக்குடி மாவட்டத்தில் 5,018 பேர்; நெல்லை மாவட்டத்தில் 8,923 பேர்; கன்னியாகுமரி மாவட்டத்தில் 10,080 பேர்; ஆக மொத்தம், தமிழ்நாடு முழுவதிலும் இன்று ஒரு நாளில் மட்டும் வழங்கப்படுகின்ற எண்ணிக்கை 2 இலட்சத்து 6 ஆயிரத்து 766 இளைஞர்களுக்கு இந்த நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இந்த நிதி உதவியைப் பெற்று அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை என்ற வேதனையை அறவே துடைத்துக் கொள்வார்களா என்றால் முடியாது. இது ஒரு வகையில் ஒரு ஆறுதலான உதவிதான். இப்பொழுது இதையாவது பெற்றுக் கொள்ளுங்கள் என்று இளைஞர்களுக்கு, படித்து வேலை இல்லாமல் இருக்கின்ற வாலிபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஒரு தொகைதான் இந்த இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு தரப்படுகின்ற தொகையாகும்.

**கடமைத்தொகை**

இதைக் கருணைத் தொகை என்றோ, உதவித் தொகை என்றோ நான் குறிப்பிட விரும்பவில்லை. உண்மையாகச் சொல்ல வேண்டுமேயானால், இதற்குப் பெயர் "கடமைத் தொகை" – ஒரு அரசுக்கு உள்ள கடமையை நிறைவேற்றுவதற்காகத் தரப்படுகின்ற தொகை, அதைத்தான் இன்று

**ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, இந்திய நாட்டுச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை ஒரே கையெழுத்தில் ரத்து செய்த ஆட்சி தான் இன்றைக்கு உங்கள் முன்னால் அமர்ந்திருக்கின்றேனே, என்னுடைய தலைமையில் உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி.**

தமிழகம் முழுவதும் இந்த அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் ஆங்காங்கு இளைஞர்களைச் சந்தித்து இந்தத் தொகையை வழங்குகின்றார்கள்.

இதற்கு நான் இளைஞர்களிடம் நன்றியை எதிர்பார்க்கவில்லை. என்ன கைமாறு என்று அவர்களிடம் நாங்கள் கேட்கவில்லை, அதை எதிர்பார்க்கவும் இல்லை. நாங்கள் அவர்களிடம் விரும்புகின்ற கைமாறெல்லாம், இதைப் பெற்று, இதை அப்படியே ஒழுங்காக பெற்றோர்களிடம் அளித்து, அவர்கள் தங்களுடைய தேவையை ஓரளவு நிறைவு செய்து கொள்ள நீங்களும் உதவியாக இருந்து இதற்குப் பிறகு, இந்த உதவிக்குப் பிறகு அடுத்த கட்டமாக வேலைவாய்ப்புகளை, அதே நேரத்தில் தேடியலைந்து, அதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்திக் கொண்டு, வேலைவாய்ப்புகளைப் பெற்று, வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு அரசின் திட்டங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு உங்களுடைய குடும்பத்தை, வீட்டைக் காப்பாற்றி, வீட்டைக் காப்பாற்ற மாத்திரம் நாம் பிறக்கவில்லை, நாட்டையும் காப்பாற்ற பிறந்திருக்கிறோம் என்ற நல்ல எண்ணத்தோடு பணியாற்றுவீர்களேயானால் நான் பெரிதும் மகிழ்வேன், நான் உற்சாகமடைவேன், நான் இன்று வழங்கிய இந்த நிதித்தொகை உள்ளபடியே பயனுடையது என்று நான் எண்ணுவேன்.

**வாக்குறுதிகளை நிறைவேற்றும் அரசு**

அடுத்தடுத்த திட்டங்களைச் செயல்படுத்த முனைவதற்கு இந்த நாள் ஒரு தூண்டுகோல் நாளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இங்கே பேசிய நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தொட்டியம் சட்டப்பேரவை உறுப்பினர் ராஜசேகரன் பேசும்போது இந்த ஆட்சி பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு தொடர்ந்து தன்னுடைய வாக்குறுதிகளையெல்லாம் காப்பாற்றி வருகிறது என்று சொன்னார்கள். இப்படிச் சொல்வது தமிழ்நாட்டில், ஏன் பொதுவாக நாட்டில், ஏன் பொதுவாக உலகத்தில் ஒரு ஆச்சரியமான

செய்திதான். தேர்தலுக்குப் பிறகு, தேர்தலில் நின்று வெற்றி பெற்ற ஒரு கட்சியின் ஆட்சி, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை யெல்லாம் காப்பாற்றுகின்றது என்றால் அது வியப்புக்குரிய செய்திதான், ஆச்சரியத்திற்குரிய செய்திதான். ஆனால் அந்த ஆச்சரியத்திற்கு இடையிலே, வியப்புக்கு இடையிலே இங்கே பெற்றிருக்கின்றன என்றால், அதற்கு என்ன காரணம்? நான் வேறு காரணங்களை அரசியல் ரீதியாக தேடி அலைய விரும்பவில்லை, ஒரேயொரு காரணம், வழங்கிய வாக்குறுதிகளை வாய்மையோடு நிறைவேற்றினோம் என்ற காரணம்தான், தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையோடுதான். ஆனால் இந்த




தமிழகத்திலே இருக்கின்ற தி.மு.கழக அரசானாலும் அல்லது தி.மு. கழகத்தின் ஆதரவோடும், தி.மு.கழகத்தின் ஒத்துழைப்போடும் டெல்லியிலே அமைந்திருக்கின்ற நம்முடைய தியாகச் சுடர் திருமதி. சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலோடு நடத்தப்படுகின்ற பிரதமர் மன்மோகன் சிங் அவர்களுடைய ஆட்சியானாலும், இந்த ஆட்சி தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை காற்றிலே பறக்க விடாமல், அதை நிறைவேற்றுவது நம்முடைய கடமை என்ற உணர்வோடு நிறைவேற்றிக் கொண்டிருப்பதை நீங்கள் காணுகிறீர்கள், நாம் காணுகிறோம்.

**உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி**

இப்போது நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நம்முடைய ஆளுங்கட்சியினுடைய கூட்டணிக் கட்சிகள் அத்தனையும் மிகப்பெரும் வெற்றியை எல்லா இடங்களிலும் வாக்குறுதிகளை வழங்கப்பட்ட போது மக்கள் நம்பினார்களோ இல்லையோ, வாக்காளர்கள் நம்பினார்களோ இல்லையோ எங்கே நம்பி விடப் போகிறார்களோ என்று பயந்து ஒரு சாரார், இதை நம்பாதீர்கள், நம்பாதீர்கள் இவைகள் எல்லாம் வெத்து வேட்டுகள், இவைகள் எல்லாம் வெறும் முழக்கங்கள், இவைகள் எல்லாம் தேர்தல் காலத்திலே சொல்லக் கூடிய காற்றிலே கலக்கக் கூடிய வேதாந்தங்கள். இவைகள் நடக்காது, நடக்க முடியாது, இவர்களால் நடத்த இயலாது என்றுதான் எங்களுடைய பலகீனத்தைச் சுட்டிக் காட்டி எங்களுக்கு இருக்கின்ற வாய்ப்பு வசதிகளையெல்லாம் குறை சொல்லி, இவர்களால் இதைச் செய்ய முடியாது என்று குறிப்பிட்டு, ஆட்சிப் பொறுப்புக்கு வந்து செய்யத் தொடங்கியதும், தொடர்ந்து செய்ய முடியாது என்று அடுத்த கட்டத்திற்குத் தாவி, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நாளிலேயே அதே மேடையில் கொண்டு வா, கோப்புகளை என்று

## உதவித்தொகை அளித்த

# உற்சாகமும் தன்னம்பிக்கையும்

ஈரோடு முனிசிபல் குடியிருப்பில் வசிப்பவர் திருமதி எஸ். விஜயசித்ரா (வயது 35) இவர் இளங்கலை கலையியல் படித்துவிட்டு கடந்த 12 ஆண்டுகளாக வேலை வாய்ப்பு கிடைக்காமல் இருப்பவர். ஈரோட்டில் 11.11.2006 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் தா. கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்.கே.கே.பி.ராஜா தமிழக அரசு கொண்டு வந்துள்ள வேலை வாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் இவருக்கு உதவித் தொகையை வழங்கினார்.




அரசின் உதவியைப் பெற்றுக் கொண்ட திருமதி. எஸ். விஜயசித்ரா, எனக்கு வேலைக்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை உள்ளது. இவ்வுதவியை

சொல்லி, கொண்டுவரப்பட்ட கோப்பு, ஏழை விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயிகளுக்கு கடன்பட்டு, கவலையிலே தோய்ந்திருக்கின்ற விவசாயிகள் பட்ட கடனைத் தீர்க்கின்ற வகையில் கூட்டுறவுக் கடன், ஒரு கோடி அல்ல, இரண்டு கோடி அல்ல, இந்திய நாட்டுச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடனை ஒரே கையெழுத்தில் ரத்து செய்த ஆட்சி தான் இன்றைக்கு உங்கள் முன்னால் அமர்ந்திருக் கின்றேனே, என்னுடைய தலைமையில் உங்களால் அமைக்கப்பட்ட ஆட்சி.

அதே நாளில்தான் எல்லா கட்சித் தலைவர் களும் அமர்ந்திருந்த அந்த மேடையிலேதான் அடுத்த தேர்தல் வாக்குறுதியாக தரப்பட்ட, இளஞ் சிறார் களுக்கு சத்துணவோடு இனிமேல் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்படும் என்ற அந்தத் திட்டத்தை எந்த நாளிலே தொடங்குவது என்று அறிவித்தேன் என்றால், பிள்ளைகளுக்கு கல்விச் சாலைகளைத் திறந்து வைத்து, கல்விக் கண் திறந்தாரே காமராஜர், அவர் பிறந்த நாளில் இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்று தெரிவித்து, அந்தத் திட்டத்தையும் அறிவித்தேன்.

அதைப் போலவே தான், அதைத் தொடர்ந்து தான் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்ற திட்டத்திற்கும், அதே மேடையில் கையெழுத் திட்டேன்.

**தொழிற்சாலைகள் நிரம்ப வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலில் பயிற்சி பெறுங்கள், அதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள், இந்தப் பணத்தை முடிந்தால் அதற்கு செலவிடுங்கள், இல்லாவிட்டால் அதை உன் பெற்றோரிடம் கொடுங்கள், அவர்கள் குடும்பத்தை நடத்தட்டும், இது ஏதோ நம்முடைய இஷ்டம் போல் செலவு செய்து கொள்ள ஜாலியாக சினிமா பார்க்க, கேளிக்கை நடத்த கொடுக்கப்பட்ட தொகை என்று கருதாதீர்கள். இது முதலமைச்சர் கொடுக்கின்ற தொகை அல்ல, தம்பி உன்னுடைய அண்ணன் உனக்குக் கொடுக்கின்ற தொகை.**

### குவியும் சாதனைகள்

அடுத்து, தரிசு நிலங்களை வழங்குகின்ற திட்டம். அந்த தரிசு நிலங்களைப் பண்படுத்தி வழங்குவோம், பண்படுத்த தேவை இல்லாத நிலங்களாக இருந்தால்

கணினிப்பயிற்சி பெறவும், புத்தகங்கள் வாங்கவும் வேலைக்கு மனுசெய்யவும் பயன்படுத்துவேன். வேலை தேடும் உற்சாகத்தையும், வாழ்வில் மேலும் உயர தன்னம்பிக்கையையும் இந்த உதவித்தொகை அளித்துள்ளது. எனக்கு 3 மாதத்திற்கான உதவித் தொகை ரூ.900 அளிக்கப்பட்டுள்ளது. எனது குடும்பத்தினரும் நானும் ஊக்கம் பெற்றுள்ளோம் என்று கூறினார்.




இதே விழாவில் உதவித்தொகை பெற்ற திரு. ஜி. அசோக்குமார் (வயது 32) , "மீண்டும் +2 தேர்வில் வெற்றி பெற்று வாழ்வில் உயருவேன்" என்கிறார். "அரசு எனக்கு உதவித்தொகையாக அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கு தலா ரூ.150 வீதம் மொத்தம் ரூ.450 வழங்கியுள்ளது. இதுவரையில் போட்டித் தேர்வுக்கு சொந்தமாக புத்தகம் வாங்க இயலாத நிலையில் இருந்தேன். அரசின் இந்த உதவி மூலம் இனி புத்தகங்களை நானே வாங்கிப் படிப்பேன். வேலைக்கு விண்ணப்பிக்க இனி கடன் வாங்க வேண்டியதில்லை. அரசின் இந்தத் திட்டத்தினால் எனக்கு தன்னம்பிக்கை கூடியுள்ளது. உழைக்க வேண்டும் என்ற உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது" என்று திரு. அசோக்குமார் நம்மிடம் கூறினார்.

இந்த இருவர் மட்டுமின்றி உதவித் தொகை பெற்ற அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனம்கனிந்த நன்றியை உணர்ச்சிப் பெருக்கோடு கூறினர்.

இத்திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பற்ற 4,354 இளைஞர்களுக்கு ரூ.25 இலட்சத்து 79 ஆயிரத்து 550 உதவித்தொகையாக அளிக்கப் படுகிறது. இவர்களில் 1,449 பேர் எஸ்.எஸ். எல்.சியும், 2290 பேர் +2வும், 615 பேர் பட்டப்படிப்பும் படித்தவர்கள்.

உழைத்து உயரத்துடிக்கும் இளைய சமுதாயத்திற்கு அரசின் இந்த உதவித் தொகை உற்சாகம் தரும் ஊக்கமாகவே அமைந்துள்ளது.

செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர்
ஈரோடு மாவட்டம்.

* * *

அவைகளில் எந்தவிதமான தகராறும் இல்லாத நிலமாக இருந்தால், அதையெடுத்து யாருக்கு அது உரியதோ அந்த விவசாயிக்கே வழங்குவோம் என்று அந்தத் திட்டத்தையும் அறிவித்து, அதனுடைய செயலாக்கமாக திருவள்ளூர் மாவட்டத்தில், நானே அந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, அதே நாளில் தமிழகம் முழுதும் 26,000க்கு மேற்பட்ட ஏக்கர் பண்படுத்தப்பட்ட நிலங்கள், நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இப்போது அடுத்தபடியாக அந்த நிலங்களை மூன்று மாதங்களுக்குப் பிறகு வழங்கப்படும் என்று அறிவித்ததற்கேற்ப இன்னும் சில நாட்களிலே அநேகமாக டிசம்பர் 17ந்தேதி அடுத்த கட்ட நிலம் வழங்குகின்ற காரியம் தமிழ்நாடு முழுதும் நடைபெறும். நான் விழுப்புரத்தில் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய குறிப்பிட்ட பகுதிகளில் கலந்து கொண்டு ஏழை விவசாயிகளுக்கு நிலத்தை வழங்கவிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் நடக்காது, தேர்தல் நேரத்திலே மக்களை ஏமாற்றுவதற்காக அளிக்கப்படுகின்ற வாக்குறுதி என்று சொல்லப்பட்டது. யார் சொன்னார், எவர் சொன்னார் என்றெல்லாம் நான் கூற விரும்பவில்லை. அப்படிச் சொன்னால் இந்த அரசு விழா, அரசியல் விழாவாக ஆகிவிடும்.

சொன்னார்கள், உங்களுக்கே தெரியும். நீங்கள் என்ன தெரியாதவர்களா? யார் சொன்னார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? ஆனால் சொன்னவர்களின் வாய் அடைத்துப் போகின்ற அளவிற்கு இந்த நான்கைந்து மாதக் காலத்தில் இந்த ஆட்சியின் சாதனைகள் குவிந்து கொண்டே இருக்கின்றன. அப்படி குவிகின்ற சாதனைகளிலே ஒன்றுதான் இன்றைக்கு இளைஞர்களுக்கு, படித்து, எந்தப் பணியும் இல்லாமல் திரிந்து கொண்டிருக்கின்ற இளைஞர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்ற, ஆறுதல் அளிக்கின்ற, அவர்களைப் பெற்ற தாய் தந்தையருக்கு, சகோதரர்களுக்கு ஒரு மின்னல் கீற்று போன்ற புன்னகையை அவர்களுடைய முகத்திலே உருவாக்குகின்ற ஒரு காரியம், அதைத்தான் இன்றைக்கு எங்களால் செய்ய முடிந்திருக்கிறது. இந்த மின்னல் கீற்று போன்ற புன்னகை பௌர்ணமி காலத்து நிலவைப் போல், அந்த முகம் முழுதும் பரவி, அவர்கள் மகிழ்ச்சியோடு உலவிட தமிழகத்திலே உங்களுக்குத் தெரியும் – இந்த ஐந்து மாத காலத்தில் ஆறு பெரிய தொழிற்சாலைகளுக்கு ஏறத்தாழ 3,000 கோடி ரூபாய் முதலீடு தமிழகத்தில் வெளிநாட்டுக்காரர்கள் செய்கின்ற அளவிற்கு கையெழுத்துபோட்டு ஒப்பந்தம் நிறைவேறியிருக்கின்ற செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது.

**உள்ளூர் ஆட்களுக்கு வேலை**

அந்த ஒவ்வொரு தொழிற்சாலையும் உடனடியாக அமைய இருக்கின்றது. அப்படி அமையுமேயானால், அந்தத் தொழிற்சாலைகளிலே பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். நான் தொழிற்சாலைக்கு இங்கே உரிமை கோரி, அதனுடைய நிபந்தனை களையெல்லாம் ஏற்றுக் கொண்டு வந்திருக்கின்ற தொழில் அதிபர்கள், அவர்கள் கொரியாவிலிருந்து வந்தாலும், ஜப்பானிலிருந்து வந்தாலும், ஜெர்மனியிலிருந்து வந்தாலும், எங்கிருந்து வந்தாலும் அவர்களுடைய அந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திலே கையெழுத்து போடும் போது நான் அவர்களிடம் கேட்கின்ற முதல் வார்த்தை, நீங்கள் இங்கே தொழிற்சாலையை உருவாக்கினால், அந்தத் தொழிற் சாலையிலே வேலை பார்க்க உள்ளூர் ஆட்களுக்குத்தான் பெரும்பான்மை யோருக்கு நீங்கள் வேலை அளிக்க வேண்டும் என்ற உறுதியைப் பெற்றுக் கொண்டுதான் அந்தத் தொழிற் சாலைகளுக்கு இப்போது அனுமதி அளிக்கப் படுகின்றது. உரிமை வழங்கப்படுகின்றது. இதைச் சொல்லக் காரணம் இன்றைக்கு 100 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞன் வாழ்நாள் முழுவதும் 100 ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கவா இந்தத் திட்டம்? இந்தத் திட்டத்தை, இது அமோகமாக வாழ்க,வளர்க என்று யாரும் வாழ்த்தக் கூடாது. வாழ்த்தினால் மாதா மாதம் 150 ரூபாய் வாங்கிக் கொண்டே வாழ்க்கையை நடத்து என்று இளைஞர்களுக்குச் சொல்வது போலாகிவிடும். மாதா மாதம் 300 ரூபாய் வாங்கிக் கொண்டு உன்னுடைய வாழ்க்கையை நடத்து என்று அந்த படித்த பட்டதாரிக்கு சொல்வது போலாகிவிடும். ஆகவேதான் தொழிற்சாலைகள் நிரம்ப வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலில் பயிற்சி பெறுங்கள், அதற்கு உங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள், இந்தப் பணத்தை முடிந்தால் அதற்கு செலவிடுங்கள், இல்லாவிட்டால் அதை உன் பெற்றோரிடம் கொடுங்கள், அவர்கள் குடும்பத்தை நடத்தட்டும், இது ஏதோ நம்முடைய இஷ்டம் போல் செலவு செய்து கொள்ள ஜாலியாக சினிமா பார்க்க, கேளிக்கை நடத்த கொடுக்கப்பட்ட தொகை என்று கருதாதீர்கள். இது முதலமைச்சர் கொடுக்கின்ற தொகை அல்ல, தம்பி உன்னுடைய அண்ணன் உனக்குக் கொடுக்கின்ற தொகை. நீ அந்தக் கடமையை சரியாக நிறைவேற்று, நான் மனம் மகிழ நிறைவேற்று என்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

* * *

# ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டிற்குள் முதலீட்டுத் திட்டங்கள்

சென்னையில் இந்திய தொழில் வர்த்தக கூட்டமைப்பின் தேசிய செயற்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
கலந்துகொண்டு ஆற்றிய உரை (2.11.2006)

சென்னையில் இன்று நடைபெறும் இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்புகளுடைய தேசிய செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த கூட்டமைப்பு உயரிய தொழில் அமைப்புகளில் ஒன்றாகும். இந்த கூட்டமைப்பு பல்வேறு மட்டங்களில் மாநில அரசுடன் பெருமளவில் தொடர்ச்சியான தொடர்பு வைத்துள்ளது. கொள்கைகளை உருவாக்குவது போன்றவற்றில் இந்த அமைப்பின் பங்களிப்பை நாங்கள் மிகவும் மதிக்கின்றோம்.

பொருளாதார வல்லுநர்கள் கூறுவதைப்போல இது வளர்ச்சிக் காலம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசின் முற்போக்கு கொள்கை காரணமாக இந்திய பொருளாதாரம் பெரும் வளர்ச்சி கண்டு வருகிறது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சீனாவில் இருந்து இந்தியாவிற்கு தங்களது கவனத்தை திருப்பி வருகின்றனர். நாம் அனைவரும் ஒரு குழுவாகப் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது.



நாம் எல்லாம் வரம்புகள் அற்ற உலகச்சந்தை யுகத்தில் இருக்கின்றோம். போட்டி என்பது வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் எழுதப்படாத சட்டமாக உள்ளது. இந்த கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தொழிலுக்காகப் போட்டியிட்டு வரும்போது மாநில அரசுகள் முதலீடுகளுக்காகவும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்காகவும் போட்டியிட்டு வருகின்றன. தமிழ்நாடு தொடர்ந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் பெருமளவில் கவர்வதில் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது, இருந்து வரும்.

தமிழ்நாட்டில் பொருள் உற்பத்தித் துறை, வேலைவாய்ப்பினை அளிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்த பங்கை வகிக்கிறது. இருப்பினும் சேவைத்துறை வேலைவாய்ப்புகளை அளிப்பதில் மிகப் பெரும் அளவில் உருவாகி வருகிறது. எனவே, தமிழக அரசு உற்பத்தித்துறை மற்றும் சேவைத்துறை ஆகியவற்றின் ஆரோக்கியமான வளர்ச்சியை விரும்புகிறது.

**தமிழக அரசின் முயற்சியால் குவியும் முதலீடுகள்**

ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டிற்குள் முதலீட்டுத் திட்டங்கள் பெருகி வருகின்றன. மாநில அரசின் துடிப்பான முன்முயற்சி மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கை ஆகியவை இதற்கு முக்கியமான காரணங்களாகும். இதைத் தக்க வைத்துக் கொள்வது தேவையாகிறது. எனவே, நான் எனது தலைமையின் கீழ் தொழில் முனைப்பு குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்துள்ளேன்.

**மாணவர்களை தொழிலுக்கு தயார்படுத்தும் அளவிற்கு தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்த்த நாங்கள் விரும்புகிறோம். தொழில்நுட்பத்தில் முழு திறமை பெறும் அளவிற்கு அவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. இதை தொழில் நிறுவனங்களுடன் இணைந்துதான் செயல்படுத்த முடியும். திறமையான தொழிலாளர்களுக்கு தேவை வளர்ந்து வருகிறது.**

தமிழ்நாடு அரசு முதலீட்டாளர்களுடன் நட்புக் கொண்டதாகவும் முடிவுகளை மேற்கொள்வதில் வெளிப்படையானதாகவும் இருந்து வருகிறது. மேலும், முதலீட்டு ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவெடுப்பதில் மாநில அரசு விரைவாகச் செயல்பட்டு வருகிறது. மிக முக்கியமாக முதலீட்டாளர்களுக்கு நாங்கள் அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோம். எனவே, தமிழ்நாடு தொழில் முதலீடுகளைப் பெருமளவில் பெறுவதில், குறிப்பாக அயல்நாட்டு நேரடி

முதலீடுகளைப் பெறுவதில் முன்னணியில் இருப்பதில் எந்த வியப்பும் இல்லை. புதிய அரசை அமைத்து ஐந்துமாத காலத்தில் மாநில அரசு மோட்டரோலா, அப்பல்லோ டயர்ஸ், டெஸ்ஸால்வ் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த டெல் மற்றும் தைவான் நாட்டைச் சேர்ந்த பெங்டெய் ஆகிய நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை செய்து உள்ளது. இந்த ஐந்து திட்டங்கள் மூலமாக மொத்தத்தில் 2,300 கோடி ரூபாய் முதலீடு வந்துள்ளது. இந்த ஐந்து திட்டங்களும் 50 ஆயிரம்பேருக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பினை அளித்துள்ளது.

முதலீடுகளை ஈர்ப்பதில் நாங்கள் ஆர்வம் செலுத்தி வரும்போதே தமிழ்நாட்டில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதிலும் நாங்கள் அதே கவனத்தைச் செலுத்தி வருகிறோம். கடந்த 2.7.2005 அன்று ரூ. 2,428 கோடி செலவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சேது சமுத்திரத் திட்டத்தினை இந்திய பிரதமர் அவர்கள் துவக்கி வைத்ததிலிருந்து எங்களது கடமை உணர்வு தெளிவாகிறது. தூத்துக்குடி துறைமுகக் கழகம் உள் துறைமுகத்தை வளர்ப்பதற்கான திட்டத்தை துவக்கி உள்ளது. எண்ணூர் துறைமுகக் கழகம் நிலக்கரி, இரசாயனம், எரிவாயு, இரும்புத் தாது மற்றும் கன்டெய்னர் டெர்மினல் திட்டங்களை மேலும் வளர்ச்சியடையச் செய்ய திட்டமிட்டுள்ளது. மேலும், சென்னை துறைமுகம் இரண்டாவது கன்டெய்னர் டெர்மினலை உருவாக்க திட்டமிட்டுள்ளது. இவை அனைத்தும் மத்திய அரசுடன் எங்கள் ஒருங்கிணைப்பின் காரணமாக சாத்தியமாகி உள்ளது.

### வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் முனைப்பாக இருக்கிறோம்

மாணவர்களை தொழிலுக்கு தயார்படுத்தும் அளவிற்கு தொழில்நுட்ப கல்வியின் தரத்தினை உயர்த்த நாங்கள் விரும்புகிறோம். தொழில் நுட்பத்தில் முழுதிறமை பெறும் அளவிற்கு அவர்களை உயர்த்த வேண்டியுள்ளது. இதை தொழில் நிறுவனங்களுடன் இணைந்துதான் செயல்படுத்த முடியும். திறமையான தொழிலாளர்களுக்கு தேவை வளர்ந்து வருகிறது. ஆகவே, இந்த கூட்டமைப்பின் உறுப்புத் தொழில் நிறுவனங்கள் இந்த மாநிலத்தில் உள்ள பாலிடெக்னிக்குகள் மற்றும் ஐ.ஐ.டி. தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நெருக்கமாக பணியாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு தொழிலில் தொடர்ச்சியான பயிற்சிக்கான வாய்ப்பினை அளிக்கலாம் இந்த முன்முயற்சிக்கு தொழில் நிறுவனங்களுக்கு செயல்திறனுடைய ஆதரவை நான் எதிர்பார்க்கிறேன்.

வளர்ச்சிப் போக்கிற்கு மனிதத்துவம் தேவை என்பதில் என்னுடன் நீங்கள் ஒத்துப்போவீர்கள் என்று நம்புகிறேன். பொருளாதாரத்தில் வளர்ச்சி என்பது வேலை வாய்ப்புகளில் வளர்ச்சி என்றும் பொருள் படவேண்டும். சமுதாயத்தின் கீழ் மட்டங்களில் உள்ள பிரிவினருக்கு அதிகமான வாய்ப்புகளை அளிப்பது என்றும் அது பொருள்பட வேண்டும். தமிழக மக்களுக்காக வேலைவாய்ப்பை உருவாக்குவது என்பது அரசின் முனைப்பாக எப்போதுமே இருந்து வருகிறது. நுட்பமான தொழில் பயிற்சி, தொழில் வாய்ப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளை விரிவாக்குதல் ஆகியவற்றின் மூலம் உள்ளூர் சமுதாயத்தினரை வளர்த்தெடுப்பது நமது பொதுவான இலட்சியமாக உள்ளது.

இந்த ஆண்டின் இறுதியில் அறிவிக்கப்பட உள்ள தொழில் கொள்கை பொருளாதார வளர்ச்சிக்கு எங்களது அரசின் கடமை உணர்வை மேலும் புதுப்பிக்கும். வரும் மாதங்களிலும் ஆண்டுகளிலும் இந்த கூட்டமைப்பினுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதை எதிர்பார்க்கிறேன். இந்த செயற்குழு கூட்டம் வெற்றியடைய வாழ்த்துகிறேன். □



# அயல்நாட்டினரை ஈர்க்கும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை

தமிழ்நாட்டிற்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கவும், சுற்றுலாத்தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு தற்போது இரண்டாவது இடத்தையும், உள்நாட்டுப் பயணிகளின் வருகையில் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

**சுற்றுலா காவலர்கள்**

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிக்கவும் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் போக்கவும் "சுற்றுலா காவலர்களை" ஏற்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்து அதற்கான ஆணையை 17.10.2006 அன்று வெளியிட்டுள்ளது.

சோதனைக் கட்டமாக பின்வரும் சுற்றுலா தலங்களில் சுற்றுலா காவலர்கள் (Tourism Police) நியமிக்கப்படுவார்கள்.

மாமல்லபுரம் , உதகமண்டலம் , கொடைக்கானல், மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஒரு புறக்காவல் நிலையம் ஏற்படுத்தப்படும். அதில் ஒரு தலைமைக் காவலரும் மற்றும் ஐந்து காவலர்களும் நியமிக்கப்படுவார்கள்.

**வழிகாட்டிகள் நியமனம்**

சுற்றுலாப் பயணிகளுக்கு, சரியான தகவல்களை அளிக்கவும், அவர்களுக்கு உரிய வழிகாட்டவும், முதற்கட்டமாக 400 வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும். இந்த வழிகாட்டிகள் பின்வரும் இடங்களில் செயல்படுவார்கள்.

சென்னை, தஞ்சாவூர், கொடைக்கானல், மாமல்லபுரம், மதுரை, உதகமண்டலம், காஞ்சிபுரம், இராமேசுவரம், திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி.





இதற்கான ஆணை 5.9.2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகள்:–**

தமிழ்நாட்டிற்கு வரும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலாத்துறை கடந்த நான்கு மாதங்களில் வெளிமாநிலங்களில் கீழ்க்கண்ட இடங்களில் விளம்பர முகாம்களை நடத்தியுள்ளது.

| | |
|---|---|
| மும்பை | (15.6.2006) |
| அகமதாபாத் | (14.6.2006) |
| கொல்கத்தா | (28.7.2006) |
| ஹைதராபாத் | (17.10.2006) |
| ஜெய்ப்பூர் | (27.10.2006) |

இரயில்வே நிருவாகமும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் இணைந்து RAIL CUM TOUR- திட்டத்தை டெல்லி, மும்பை, அகமதாபாத், ஹைதராபாத், ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் நடத்தியது. இத்திட்டத்தின்படி சுற்றுலாப் பயணிகள் சென்னை சென்ட்ரல் நிலையம் வரையில் இரயிலில் அழைத்து வரப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தின் மூலம் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி தமிழ்நாட்டில் உள்ள

சுற்றுலாப் பகுதிகள் பற்றிய ஒருங்கிணைந்த கையேடு இந்தியில் வெளியிடப்பட்டுள்ளது. வடமாநிலங்களில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளில் மதுரை, இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு விரும்பி அதிக எண்ணிக்கையில் செல்கின்றனர். எனவே அந்த இடங்களைப் பற்றி தனித்தனியாக சிறப்புக் கையேடு இந்தியில் முதன்முறையாக வெளியிடப்பட்டுள்ளது.

**குறும்படம் மற்றும் விளம்பரப்படம்**

"தமிழ்நாடு சுற்றுலா பற்றிய" குறும்படம் ஒன்று 20 நிமிடம் தயாரிக்கப்பட்டு பிற மாநிலங்களில் நடைபெறும் விளம்பர முகாம்களின்போது பத்திரிகையாளர்களுக்கும், சுற்றுலாப் பயண முகவர்களுக்கும் காண்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள் பற்றிய விளம்பரப்படம் (20 நொடிகள் ) ஒன்று தயாரிக்கப் பட்டுள்ளது. பிற மாநிலங்களில் உள்ள தொலைக் காட்சிகளின் மூலம் இவை வெளியிடப்படும்.

**அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை**

தமிழ்நாடு சுற்றுலா பற்றிய விளம்பரங்கள் வெளிநாடுகளில் வெளிவரும் வார / மாத இதழ்களில் மாதந்தோறும் வெளியிடப்படுகின்றன. மேலும் வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலா வர்த்தகம் மேம்பாட்டுச் சந்தைகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொள்கிறது. கடந்த செப்டம்பர் மாதம் 12.9.2006 முதல் 15.9.2006 வரை நடைபெற்ற (பசுபிக் ஆசியா பயணமுகவர்கள்) PATA மாநாட்டில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்துகொண்டுள்ளது. நவம்பர் திங்களில் லண்டனில் நடைபெற்ற (6.11.2006 முதல் 9.11.2006 வரை) W.T.M. (உலக சுற்றுலா வர்த்தக சந்தை மாநாடு) மாநாட்டில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டது. அப்போது தமிழ்நாடு சுற்றுலா பற்றிய கையேடுகள் வீடியோ குறுந்தகடு, வண்ணப்பட குறுந்தகடு, தமிழகம் பற்றிய முழுமையான குறுந்தகடு ஆகியவை பயணிகளுக்கு வழங்கப்பட்டது.

**சுற்றுலாப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துதல்**

இந்த ஆண்டு பின்வரும் முக்கிய சுற்றுலாத் தலங்களில், மைய அரசின் உதவியோடு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மதுரை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், வேலூர் மற்றும் செட்டிநாடு.

முன்னே குறிப்பிட்ட ஒவ்வொரு இடத்திற்கும் ரூபாய் ஐந்துகோடி வரை செலவழிக்கப்படும்.

மேலும் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடுத் திட்டத்தின் கீழ் சென்னை – காஞ்சிபுரம் – மாமல்லபுரம் சுற்றுலா சுற்றுச்சாலை ரூ.8 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி பின்வரும் இடங்களில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

குன்றத்தூர், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம், திருப்புக்குழி, பழையசீவரம், நென்மேலி, திருக்கழுக் குன்றம், மாமல்லபுரம், திருப்போரூர்.

**கம்பிவழிப் பயணம்**

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க கம்பிவழிப் பயணம் (Rope Car) பின்வரும் இடங்களில் செயல்படுத்தப்படும்.

| | | |
|---|---|---|
| உதகமண்டலம் | – | மொத்த மதிப்பீடு ரூ. 1,518.69 இலட்சம் (மைய அரசு நிதி உதவி ரூ. 397 இலட்சம்) |
| கொடைக்கானல் | – | மொத்த மதிப்பீடு ரூ. 1,396.5 இலட்சம் (மைய அரசு நிதி உதவி ரூ. 363 இலட்சம்) |
| கன்னியாகுமரி | – | மொத்த மதிப்பீடு ரூ.1,613.50 இலட்சம் (தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அனைத்து செலவினங்களையும் ஏற்றுக்கொள்கிறது) |
| ஏற்காடு | – | BOOT திட்டம் அடிப்படையில் தனியார் மூலம் செயல்படுத்தப்படும். |

இதற்கான அரசு ஆணை 14.9.2006 அன்று வெளியிடப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

**மதுரைக்கு ஹெலிகாப்டர் சேவை**

மதுரைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி "பவன்ஹான் (Pawan Hans) ஹெலிகாப்டர்" நிறுவன அதிகாரிகள் மதுரைக்கு "ஹெலிகாப்டர்" சேவை தொடங்குவது பற்றி தமிழ்நாடு அரசு அதிகாரிகளுடன் விரைவில் கலந்துரையாட உள்ளார்கள். *






## புதுடெல்லியில் மதநல்லிணக்க மலர்ப் பேரணியில்

# தமிழ்நாட்டிற்கு விருது

மத ஒற்றுமையையும், மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்துகின்ற மலர்ப் பேரணி விழா (Phool Walon-ki-Saine) மொகலாயப் பேரரசர் அக்பர் காலத்திலிருந்து தில்லி நகருக்கு அருகிலுள்ள "மெஹராளி" என்ற இடத்தில் ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விழா, இந்து, முஸ்லீம் ஒற்றுமையையும் மத நல்லிணக்கத்தையும் வலியுறுத்த, பேரரசர் அக்பர் அவர்களால் (கி.பி. 1556–1605) துவக்கி வைக்கப்பட்டு தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

1961–ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தும் இந்த மலர்ப் பேரணி விழா செம்மையுற நடத்திட வழிவகை செய்தார். இவ்விழா, பழம் பெருமை காக்கும் அதன் மரபு முறைகள் மாறாமல் இன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. விழா நாளன்று, இந்துக்களும், முஸ்லீம்களும் தர்க்காவிலிருந்தும் காளி கோவிலிலிருந்தும் அணி வகுத்துச் சென்று இறை வழிபாடு செய்து மக்கள் நலம் வேண்டுவார்கள். இந்து முஸ்லீம் இணைந்து செல்லும் இப்பேரணியின் முன்னே வனப்புமிக்க வெல்வெட்டாலும், அழகிய வேலைப்பாடுகள் மற்றும் வண்ணப் பூக்களாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய மலர் விசிறிகள் (பங்கா) மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைக்கப்பட்டு ஆண்டுதோறும், இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள் தங்கள் மலர் விசிறிகளையும் (பங்காக்களையும்) கலைஞர்களையும் அனுப்பி இவ்விழாவில் பங்கேற்க வைக்கின்றன. 1961ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு, மலர் விசிறி மற்றும் கலைக்குழுக்களையும் அனுப்பி இவ்விழாவில் கலந்து கொண்டு வருகிறது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மலர் விசிறிகளுக்கும், கலை நிகழ்ச்சிகளுக்குமென வழங்கப்படும் பரிசுகள் சென்ற ஆறு ஆண்டுகளாக தமிழ்நாட்டிற்கே கிடைத்துள்ளன.



⑤



இந்த ஆண்டு 2006 மத நல்லிணக்கம், மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் மலர்ப் பேரணியில், இரண்டு மலர் விசிறிகள் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த ஆண்டு மலர்ப் பேரணியில் தமிழ்நாடு அரசு பங்கேற்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதன்படி தமிழ்நாடு அரசின் சார்பாக மதுரையைச் சேர்ந்த டாக்டர் சோமசுந்தரம் அவர்கள் தலைமையிலான கலைக்குழு மத ஒற்றுமையை வலியுறுத்தும் விதமாக கலை நிகழ்ச்சிகளை அமைத்து வழங்கியது. ஆந்திரா, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், உத்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் டெல்லி மாநிலங்களும் பங்கேற்றன. தமிழ்நாடு அரசு சார்பாக தப்பாட்டம், கரகம் மற்றும் சிலம்பு ஆட்டம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தன. இந்த மலர்ப் பேரணி விழாவில் மாண்புமிகு மத்திய மற்றும் புதுடெல்லி மாநில அமைச்சர்கள், முக்கிய பிரமுகர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர். இக்கலைவிழாவில், தமிழ்நாடு அரசு சார்பாக கலந்துகொண்ட கலைக்குழு சிறந்த கலைக் குழுவாகவும், சிறந்த மலர் விசிறிகளாகவும் தேர்வு செய்யப்பட்டது. புதுடெல்லி, தமிழ்நாடு இல்ல உறைவிட ஆணையர் திரு. சசிசேகர், இ.ஆ.ப., அவர்கள் சிறந்த கலைக்குழு மற்றும் மலர் விசிறிகளுக்கான சிறப்புப் பரிசுகளை தமிழ்நாடு அரசின் சார்பில் பெற்றுக்கொண்டார். ✦





## திருப்பெரும்புதூரில்

# சாம்சங் நிறுவன தொழிற்சாலை

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

தமிழகத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் மற்றும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஆகிய இரண்டு உற்பத்தித் தொழிற்சாலைகளைத் தொடங்குவது தொடர்பாக, தமிழக அரசுக்கும், சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் 10–11–2006 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது. அவ்வமயம், மாண்புமிகு மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் திரு. தயாநிதி மாறன் அவர்கள் உடனிருந்தார்.

சாம்சங் நிறுவனக் குழுமம் தென்கொரியாவில் முதலிடத்திலுள்ள வர்த்தக நிறுவனமாகும். சாம்சங் நிறுவனக் குழுமத்தின் முன்னணி நிறுவனமான சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், செமிகண்டக்டர், தொலைத் தொடர்பு, டிஜிடல் மீடியா, டிஜிடல் ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பம் போன்றவற்றில் உலக அளவில் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாகும். சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் 2005 ஆம் ஆண்டில் 56.7 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய் 2,55,000 கோடி) விற்று முதல் செய்து 7.5 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய் 34,000 கோடி) நிகர லாபம் ஈட்டியுள்ளது. மிகவேகமாக வளர்ந்து வரும் வர்த்தக அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், வண்ண மானிட்டர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், நினைவுப்பதிவுச் சில்லுகள் மற்றும் டி.எப்.டி. – எல்.சி.டி. போன்றவற்றை உலகிலேயே அதிக அளவு உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். 2005–ஆம் ஆண்டு நிறுவன புகழ் (Brand Equity) கணக்குப்படி, சாம்சங் உலக அளவில் 20–ஆவது இடத்தில் வரிசையிடப் பட்டுள்ளது. 2005–ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப புகழின் கணக்குப்படி, சாம்சங் உலக அளவில் 7–ஆவது இடத்தில் வரிசையிடப் பட்டுள்ளது.

இந்தியாவில் சாம்சங் நிறுவனம் புதுதில்லிக்கருகில் உள்ள நோய்டா என்ற இடத்தில், பலவிதமான நுகர்வோர் மின்னணுச் சாதனங்களை– அதாவது

தட்டை வடிவிலான (flat) மற்றும் LCD வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள் மற்றும் கணினி மானிட்டர்கள் போன்ற வீட்டு உபயோகப்பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.

சாம்சங்க் நிறுவனம் தனது உற்பத்தி மையத்தை இந்தியாவில் அமைப்பது குறித்து பல்வேறு மாநிலங்களை விரிவாக ஆராய்ந்தது. தமிழக அரசின் உத்வேகம் ஊட்டும் அணுகுமுறை, தரமான மனிதவளம், சிறந்த சாலைவசதி, நம்பகமான சரக்குப் போக்குவரத்து சேவை மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய காரணங்கள் சாம்சங்க் நிறுவனத்தை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஈர்த்துள்ளது. சாம்சங்க் நிறுவனம் திருப்பெரும் புதூரில் தொடங்கவுள்ள தொழிற்சாலைகள் 2007ஆம் ஆண்டின் மத்தியில் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

சாம்சங்க் நிறுவனம், வண்ணத் தொலைக் காட்சிப்பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ஏர்கண்டிஷனர்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஒன்றை ரூ.284 கோடி முதலீட்டில் தொடங்கவுள்ளது. மேலும் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் ஒன்றை ரூ.166 கோடி முதலீட்டில் அமைத்து அதன் மூலம் கம்ப்யூட்டர் மானிட்டர்கள் (L.C.D. மானிட்டர்கள் உட்பட) கம்ப்யூட்டர் பிரிண்டர்கள் மற்றும் பிற தொழில்நுட்ப சாதனங்களை தயாரிக்கவுள்ளது. ஆக மொத்தம் சாம்சங்க் நிறுவனம் இந்த இரண்டு திட்டங்களிலும் சேர்த்து ரூ.450 கோடி முதலீடு செய்யவுள்ளது.

சாம்சங்க் நிறுவனம், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் தனது உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது. அதைப்போல திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் சாம்சங்க் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் அமையவுள்ளது. சாம்சங்க் நிறுவனத்திற்கு உள்ளீட்டு பொருள்கள் வழங்கும் நிறுவனங்கள் (Vendors) பலரும் இத்திட்டத்தால் கவரப்பட்டு தங்களது தொழிற்சாலைகளை திருப்பெரும்புதூர் சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் சிப்காட் தொழிற்பூங்காவில் அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் மூலமாக சுமார் 2,500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 1,500 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிட்டும். இத்திட்டத்தின் மூலம் எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் உற்பத்திக்கு தமிழகத்தில் மேலும் ஊக்கம் கிடைக்கும் என்றும் தமிழகத்தில் கொரிய நாட்டு முதலீடு மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழிற்துறைச் செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்களும் சாம்சங்க் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் தென் மேற்கு ஆசிய மண்டல தலைமையிடத் தலைவரும், தலைமை நிருவாக அலுவலருமான திரு.எஸ்.எச். ஓ. அவர்களும் கையொப்பமிட்டனர். இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் சாம்சங்க் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளாக திருவாளர்கள், டபிள்யூ.டி.யாங்க் (இயக்குநர் மற்றும் தலைமை நிதி அதிகாரி), ஆர். சுட்ஷி (துணை நிருவாக இயக்குநர்), ஒய்.பி.யூ (இயக்குநர் உற்பத்தி)) மற்றும் சுனில் கோயல் (துணை செயல் தலைவர் – நிதி) ஆகியோரும் தமிழக அரசின் தலைமை செயலாளர், திரு. எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் திரு. சந்திரமௌலி, இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர்.

■



இந்திய தேசிய காங்கிரஸ் தலைவராக இருந்தபோது பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் 1936-இல் (அக்டோபர் 5-20) தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது நடந்த சில சுவைமிகு சம்பவங்கள்.

நவம்பர் 14 - ஜவகர்லால்நேரு பிறந்த நாள்



குபீரென்று கோபப்படுவதும், அடுத்த வினாடியே அதை மறந்து விடுவதும் நேருவுக்கே உரிய தனித் தன்மை சில நேரங்களில் அவர் குழந்தையைப் போல் மாறிவிடுவதும் உண்டு.

ஒரு நாள் சுற்றுப் பயணம் முடித்துவிட்டு வந்திருந்த நேரு அன்றைய பத்திரிகைகளில் தமது நிகழ்ச்சிகள் பற்றிய புகைப்படங்கள் வெளிவந்திருப்பதை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு பக்கத்தில் இருந்தவரிடம் "ஒரு கத்திரிக்கோல் வேண்டுமே ?" என்றார்.

"கத்திரிக்கோல் எதற்காக ?" என்று கேட்டார்கள்.

"பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருக்கிற என் மகள், இதையெல்லாம் பார்த்தால் தன் தந்தைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைவாள்; இந்தச் செய்தித்தாள்களில் உள்ள படங்களைக் கத்தரித்து அவளுக்கு அனுப்பப்போகிறேன்." என்றார் நேரு.

"அப்படியானால் இந்தப் படங்கள் எதற்கு ? அவர்களிடம் கேட்டு அந்தப் புகைப்படங்களையே வாங்கித் தருகிறோம்" என்றார்கள், அங்கிருந்தவர்கள்.

"அப்படியானால் அந்தப் படங்களைக் கண்ணாடி போட்டே வைத்துக் கொள்வாள் அவள்" என்று பெருமகிழ்ச்சியோடு தெரிவித்தார் நேரு. அவருடைய இந்த மகிழ்ச்சி அங்கிருந்த அனைவரையும் அதிசயிக்கச் செய்வதாக இருந்தது.

* * *



# தமிழகத்தில் நேரு

கோவை மாவட்டம் கோபியில் நேருவுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்குப் பேசுவதாக முன்னேற்பாடு இல்லை. ஆனால் அங்கிருந்த அமைதியான மக்களைக் கண்ட நேரு, சுமார் அரைமணி நேரம் உரையாற்றினார்.

"இதுபோன்ற அமைதியான மக்களிடையே பேசுவது எனக்கு ஆனந்தமாக இருக்கிறது." என்றும் அவர் பெருமையோடு சொன்னார்.

⌘ ⌘ ⌘

பொள்ளாச்சி பொதுக்கூட்டம் இரவு 10 மணிக்கு நேரு முதலானோர் அங்கு வரவே சுமார் பன்னிரெண்டு மணியாகிவிட்டது.

கூட்டம் முடிந்ததும் "உடுமலைக்குப் போகலாம்" என்றார் நேரு.

"நீங்கள் சாப்பிட வருவீர்கள் என்று சேட்ஜி காத்திருப்பாரே ?" என்றார் ஒருவர்.

"சேட்ஜியும் அவர் விருந்தும் காத்திருக்கலாம்; ஆனால் என்னுடைய மக்களை நான் காக்க வைக்க முடியாது" என்றுமிகுந்த கண்டிப்போடு சொல்லிவிட்டார், நேரு.

⌘ ⌘ ⌘

நேருவைத் தொட்டுப் பார்க்கும் ஆவலில் கோவை மாவட்ட மக்கள் எடுத்துக் கொண்ட உரிமை, "அவருடைய சிவந்த கரங்களில் நகக்கீறல்களாகக் கோடு கோடாகத் தெரிந்தது. இதைக் கவனித்த தி.சு. அவினாசிலிங்கம் "எங்கள் மாவட்ட மக்கள் இப்படி அதிகப்படியாக நடந்து கொண்டதற்காக, தாங்கள் மன்னிக்க வேண்டும்" என்றார் பணிவோடு.

"மக்களுக்கு என்னிடம் உள்ள அன்பின் அடையாளச் சின்னமல்லவா இது; இதில் வருத்தப்பட என்ன இருக்கிறது!" என்றார் நேரு, சிரிப்போடு!

⌘ ⌘ ⌘

## நேருவின் பொன்மொழிகள்



**ஜனநாயகம்**

ஜனநாயகத்தின் அர்த்தமே சமத்துவம்தான்; வாக்குரிமையைச் சமஉடைமையாகப் பெற்றிருப்பதால் மட்டுமே அது சமத்துவமாகாது; ஆனால், பொருளாதார, சமூகச் சமநிலையே ஜனநாயகத்தின் பொருளாகும். ஒரு பிடிவாதமான ஒரு கோட்பாட்டாலோ, அல்லது மதத்தாலோ நான் பிணைக்கப் பட்டவனல்ல; ஆனால், நான் மனிதனுடைய உள்ளார்ந்த ஆன்ம நெறியினை நம்புகிறேன். தனி மனிதனுடைய உள்ளார்ந்த பெருந்தன்மையை நான் மதிக்கிறேன். ஒரு கோட்பாடாக, அதை அடைவது என்பது சற்றுச் சிரமமே, சமத்துவத்தை வலியுறுத்துகிற ஒரு சமூக அமைப்பில், பெரிய வேறுபாடு இன்றி ஜனநாயகத்தை எய்திட இயலுமென்றே நான் நம்புகிறேன். பணம் படைத்தவரின் இழிவான நடத்தையை எவ்வளவு வெறுக்கிறேனோ அதே அளவு ஏழையரின் ஏழ்மை நிலையையும் நான் வெறுக்கிறேன்.

* * *

**சோஷலிசம்**

உலகப் பிரச்சினைகளுக்கு, தீர்வுகாணக் கிடைத்திட்ட, ஒரு திறவுகோல், சோஷலிசமே வெறும் மனித இனநலப் பற்றாளனாக இல்லாமல், விஞ்ஞானப் பொருளாதார அடிப்படையிலேயே நான் இச்சொல்லைப் பயன்படுத்துகிறேன். எவ்வகையிலும், சோஷலிசம், பொருளாதாரச் சித்தாந்தத்தை விட, ஒருவகையில் சிறந்ததாகும். இது ஒரு வாழ்க்கைத் தத்துவம் என்பதனாலேயே அது என்னைப் பாதித்துள்ளது. ஏழ்மை, வேலையில்லாப் பெருஞ்சுமை, அவமதிப்பு, தன்னுரிமையற்ற நிலை ஆகிய இந்திய மக்களின் இத்தகு துயரங்களுக்கு சோஷலிசத்தைத் தவிர வழியேதுமில்லை. ஜனநாயகத்துடன் சோஷலிசத்தை எவ்வகையில் அமைதி மற்றும் சட்டப்பூர்வமான முறையில், இணைப்பது என்பதுதான், நம் முன்னேயுள்ள வினாவாகும். இந்தியா, தனக்கு முன் வைத்துக் கொண்டிருக்கிற பிரச்சினை இதுதான். எவ்வித வற்புறுத்தல் அல்லது கட்டாயத்தின் பேரிலும் இதனை நாம் வெற்றி கொள்ள இயலாது. மக்களின் நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் பெற்றுத்தான் இதை அமல்படுத்த வேண்டும்.

* * *

**உரிமை**

விரும்பியபடி வாழ, முன்னேற்றமடைய அவரவருடைய விதியை அவரவரே நிர்ணயம் செய்து கொள்ள, உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உரிமையுண்டு. சமாதான சகவாழ்வை மேற்கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு.

* * *

# உடல் நலம் பேணல்



உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்த முள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு; நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

கூழை யேநீ குடித்தாலும்,
குளித்த பிறகு குடி, அப்பா!
ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா!




மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்,
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்.

தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்தபின் உணவும்,
நோயை ஓட்டி விடும், அப்பா!
நூறு வயதும் தரும், அப்பா!

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே;
வையம் புகழ வாழ்வாயே.

– கவிமணி தேசிக விநாயகம்
"குழந்தைச் செல்வம் நூலில்"

# குழந்தை

- ஒரு குழந்தை குறை கூறப்பட்டே வாழ்ந்தால், அவன் கண்டனம் செய்யக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை விரோதத்துடன் வாழ்ந்தால், அவன் சண்டை போடக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை கேலி செய்யப்பட்டு வாழ்ந்தால், அவன் நாணமடையக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை அவமானத்துடன் வாழ்ந்தால், அவன் குற்ற உணர்வோடு இருக்கக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தால், அவன் பொறுமையைக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை உற்சாகப்படுத்ததுலுடன் வாழ்ந்தால், அவன் நம்பிக்கையைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை புகழப்பட்டு வாழ்ந்தால், அவன் மெச்சுதலைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை நேர்மையுடன் வாழ்ந்தால், அவன் நீதியைக் கற்றுக்கொள்கிறான்.
- ஒரு குழந்தை பாதுகாப்புடன் வாழ்ந்தால், அவன் விசுவாசத்தைக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை அமைதியுடன் வாழ்ந்தால், அவன் தன்னையே விரும்பக் கற்றுக் கொள்கிறான்.
- ஒரு குழந்தை ஏற்கப்பட்டு நட்போடு வாழ்ந்தால், அவன் உலகத்தில் அன்பைக் காணக் கற்றுக்கொள்கிறான்.

– டோராத்தி லா நெட்டே

# சொல்லும் பொருளும்

புணக்கார வியாபாரி ஒருவர் இறக்கும் நிலையில் இருந்தார். மகனுக்குத் தமது வியாபார ரகசியத்தைச் சொல்லத் துடித்தார்.

1. வியாபார இடத்திற்கு நிழலில் போ; நிழலில் வா.
2. பணத்தைக் கடன் கொடு; திருப்பி நீயாகக் கேட்காதே.
3. அதிக விலைக்கு வாங்கு; மலிவாக விற்பாயாக.

நாலாவது ரகசியத்தைச் சொல்லுமுன் வியாபாரி மூச்சு நின்று விட்டது. தன் தந்தை சொன்னபடியே செய்தான். தன் வீடு தொடங்கி கடை வரைக்கும் கல் மண்டபம் கட்டினான்; பணம் கடன் கொடுத்தான்; எவரிடமும் திருப்பிக் கேட்வில்லை. அதிக விலைக்கு வாங்கி, குறைந்த விலைக்கு விற்றான்.

காலம் ஓடிக் கொண்டிருந்தது. பணம் கரைந்து போய் விட்டது. அவன் உறவினர் ஒருவர், வீட்டுக்கு வந்தார். நிலைமையை அறிந்தார். கோடீஸ்வரன், லட்சாதிபதியாக மாறி இருப்பதை அறிந்தார். அனுதாபத்துடன் விவரம் கேட்டார்.

தந்தையின் மூன்று ரகசியங்களைப் பெரியவரிடம் சொன்னான் வியாபாரியின் மகன்.

வந்த பெரியவர் படித்தவர் மட்டுமன்று; உலக அனுபவம் உள்ளவர்.

“அட அப்பாவி உன் தந்தை சொன்னவற்றை நீ புரிந்து கொள்ளவில்லை!”

“என்ன அர்த்தம் ?”

பெரியவர் விளக்கம் சொன்னார்.

“முதல் இரகசியம். நீ நிழலில் போக வேண்டும். அதாவது வியாபார இடத்திற்கு அதிகாலையில் போ. மாலைக்குப் பின் திரும்பி வா.

இரண்டாம் இரகசியம். யோக்கியர்களாகப் பார்த்துக் கடனைக்கொடு; அவர்களாகத் திருப்பித் தருவார்கள். நீ கேட்டு கடன் வசூல் செய்கிற ஆசாமிகளிடம் கடனைக் கொடுக்காதே என்று பொருள்.

மூன்றாம் இரகசியம். நிரம்பக் கொள்முதல் செய்; விலை மலிவாக இருக்கும்; அப்படியானால் நிறைய வாடிக்கைக்காரர்கள் ஏற்படுவார்கள். நிறைய வாங்கி நிறையப்பேருக்கு விற்பது என்று பொருள்.

இப்புதிய விளக்கத்தைக் கேட்ட பின்பு வாணிபம் செய்த சிறுவன் விழிப்படைந்தான். இழந்த செல்வத்தைப் பெருக்கும் மார்க்கத்தையும் தந்தையின் சூட்சம சூத்திரங்களையும் கண்டு கொண்டான். ✶

(சிந்தனைக்கு விருந்தாகும் குட்டிக்கதைகள் என்ற நூலிலிருந்து...)



நவம்பர் 14
சர்வதேச சர்க்கரை நோய் தினம்

# சிறார்களைத் தாக்கும் சர்க்கரை நோய்



“சர்க்கரை’ என்கிற பெயர், கேட்பதற்கு இனிப்பாக இருந்தாலும், “சர்க்கரை நோய்” மிகக் கசப்பானதாகும். இது உடல் நலக்கேட்டை உண்டாக்கும் ஒரு நோய். பெரியவர் – சிறியவர் வேறுபாடின்றி எல்லோருக்கும் இந்த நோய் வரலாம். சிறுவர்களை அந்நோய் எவ்வாறெல்லாம் தாக்கும் – அந்த நோய்க்கு ஆளான சிறியவர்களைப் பாதுகாப்பது எப்படி என்பது பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இளம் வயதினரையும் சர்க்கரை நோய் பரவலாகத் தாக்குகிறது.

**நோய் ஏற்படுவதற்கான காரணம்**

இந்த நோய் சிறுவர்களிடையே வருவதற்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன; ‘போலியோ’ அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ அல்லது தட்டம்மை அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ இந்நோய்க்கு இதுதான் காரணம் எனத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

**நோயின் அறிகுறிகள்**

இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும். அதிகத் தண்ணீர் குடிக்கும், அதாவது எப்போதுமே தாகம் அதிகமிருக்கும். அதுமட்டுமல்ல; பசியும் அதிகமாக இருக்கும். அதிகம் சாப்பிட்டும் கூட, உடல் எடை வேகமாகக் குறையும். குழந்தை மிகச் சோர்வுடன் காணப்படும்.



இவைகளை அலட்சியப்படுத்தினால் 48 மணி நேரத்திற்குள்ளாகவே, அதாவது இரண்டு நாட்களுக்குள் குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும் வாய்ப்புள்ளது. அவ்வாறு சென்றால் கூட, இரு நாட்களுக்கு முன்பு இதுபோன்ற நிலை ஏற்பட்டால், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரிடம் அதை மறக்காமல் கூற வேண்டும்.

நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கும்போது, குறைந்தது ஒரு முறையாவது சர்க்கரையின் அளவை இரத்தத்திலும், சிறுநீரிலும் பரிசோதனை செய்து பார்ப்பது நல்லது.

ஒரு வேளை இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருப்பின் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்து நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தையை நலமாக்கி விடலாம்.

### நோயைக் கட்டுப்படுத்த...

மருத்துவர் பரிந்துரைக்கும் இன்சுலின் ஊசியை தொடர்ந்து குழந்தைக்குப் போட்டு வர வேண்டும். குறைந்தது ஒரு முறை அல்லது இருமுறையாவது ஊசி போட்டால்தான் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். ஊசியை மருத்துவர் அறிவுரைப்படி தொடர்ந்து போட்டு வந்தோமானால் மற்ற குழந்தைகளைப் போலவே இந்த குழந்தையும் நன்கு வாழலாம்.



### உணவுக் கட்டுப்பாடு

சர்க்கரை நோய் கண்ட சிறியவர்களுக்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம். குறிப்பாக இனிப்பு வகைகளை விருப்பம்போல் சாப்பிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்ற உணவு வகைகளை மருத்துவரின் ஆலோசனைப்படி அளிக்கலாம்.

இந்நோய் உள்ள சிறுவர் சிறுமியருக்கு வாந்தி, பேதி, சளி, காய்ச்சல், மலேரியா, டைபாய்டு போன்ற நோய்கள் ஏற்பட்டால், அப்போது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பார்த்து மருத்துவரின் ஆலோசனைப்படி இன்சுலின் ஊசி போடவேண்டும்; மற்ற நோய்க்கும் மருந்துகள் சாப்பிடுவது அவசியம்.



### சர்க்கரை அளவு குறைந்தால்....

மாதம் ஒருமுறை உணவுக்கு முன்பு ஒருமுறை இரத்தப் பரிசோதனையும், ஆலோசனையின்படி ஊசி போட்டுக் கொண்டு, அரை மணிநேரம் கழிந்தவுடன் உணவுக்குப் பின் இரண்டு மணி நேரம் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனையும் செய்து கொள்ள வேண்டும்.

உணவுக்கு முன் 80–120 மி.கி., உணவுக்கு இரண்டு மணி நேரம் கழித்து 120 – 160 – மி.கி.வரை இருப்பது நன்று.



குழந்தை தாழ்சர்க்கரை நிலைக்குச் சென்று விடாமல் பார்த்துக் கொள்வது அவசியம். சர்க்கரையின் அளவு 60. மி.கி. குறைவானால், அதிகமான பசி, உடல் வேர்த்து விடுதல், படபடப்பு, கைகால்களில் நடுக்கம், தெளிவின்மை, உளறுதல், மயக்கம், நினைவிழத்தல் ஆகியவை ஏற்படும். நினைவு இழப்பதற்கு முன், ஏதாவது ஓர் இனிப்பான திரவத்தை உடனே கொடுத்து விட வேண்டும்.

பெற்றோர்கள் ஊசிக்குப் பயந்து கொண்டு மாற்றுச் சிகிச்சை முறைக்கு செல்வது, அதாவது மருந்து சாப்பிட்டாலே போதும் என்ற அளவில் குழந்தைகளைக் கொண்டு செல்கின்றனர். இது முற்றிலும் தவறு. சில நாட்களுக்குள் இக் குழந்தைகள் இச்சிகிச்சை பலனின்றி மயக்க நிலையை அடைந்து, உயிருக்கு ஆபத்து நேரலாம்.

சர்க்கரை நோயை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், அதனால் ஏற்படும் உடல் பிரச்சினைகள் தவிர்க்கப்படுவதோடு, பின் விளைவுகளான கண்கள், சிறு நீரகம், கால் நரம்புகள் பாதிப்பு போன்றவை பெருமளவு தடுக்கப்படுகின்றன. பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு இந்நோய்வந்து விட்டதே என அஞ்சவேண்டியதில்லை – சற்று எச்சரிக்கையுடன் செயல்பட்டால் நோயற்ற மற்ற குழந்தைகள் போல் அக்குழந்தையும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

* * *




# மோட்டார் வாகனத் தொழிலின் உலக வரைபடத்தில் சென்னைக்கு முக்கிய இடம்

**தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் கால்கோள் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (4.11.2006)**

மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களே!

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களே!

தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களே,

மத்திய அரசின் மாண்புமிகு கனரகத் தொழில்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சர் திரு. சந்தோஷ் மோகன் தேவ் அவர்களே!

மத்திய அரசின் மாண்புமிகு கனரகத் தொழில்கள் துறை இணை அமைச்சர் திருமதி. காந்தி சிங் அவர்களே!

மாண்புமிகு மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

அரசின் உயர் அதிகாரிகளே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

அனைவர்க்கும் என் வணக்கம்.

தமிழகத்தில் வளர்ந்து வரும் மோட்டார் வாகனத் தொழில்களை மேம்படுத்து வதற்காகவும், அவற்றை மேலும் வளர்ப்பதற்காகவும் நவீன ஆராய்ச்சி, வளர்ச்சி மற்றும் சோதனை வசதிகளைச் சென்னைக்கு அருகில் ஏற்படுத்தித் தருமாறு மத்திய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். எனது, அந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு பிரதமர் அவர்கள், மதுரையில் சேதுசமுத்திரத் திட்டத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றியபோது, 'மத்திய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் (National Automotive Testing Research and Development Infrastructure Project - NATRIP) தமிழகத்தில் அமைக்கப்படும்' என 2.7.2005 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, "சென்னைக்கு அருகில், ஒரகடம் என்னும் இடத்தில் வாகனச் சோதனை மையம் அமைவதற்குரிய சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பு தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ளது; விரைவில் அந்த மையம் நிறுவப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்" என 22.7.2006 என்று தமிழக சட்டப்பேரவையில் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிட்டிருந்தோம். அதன்படி, நீண்டகாலம் நமது நெஞ்சில் கனவாக இருந்த இந்த மாபெரும் திட்டம் இன்று இங்கே எழுச்சியுடன் நிகழும் அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியுடன் நிறைவேறத் தொடங்குகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்களும், நமது மதிப்பிற்குரிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்களும் மகத்தான இந்தத் திட்டத்தை மட்டுமல்ல;

தமிழ் மக்களின் 150 ஆண்டுகால கனவாக இருந்த சேதுசமுத்திரத் திட்டத்தைத் தமிழகத்திற்கு வழங்கி இருக்கிறார்கள்.

அதே போல, நூறாண்டுகளுக்கு மேல் நாம் கோரிவந்தபடி தமிழ்ச் செம்மொழித் திட்டத்தை நிறைவேற்றியும் இருக்கிறீர்கள்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் நோக்கியா தொழிற்சாலையைத் தமிழகத்தில் தொடங்கி உள்ளார்கள்.

பல ஆண்டுகாலக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையத்தைத் தாம்பரத்திலே நிறுவி உள்ளார்கள்.




சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ரயில்வே மண்டலம் அமைக்க ஆவன செய்துள்ளார்கள்.

சேலம் உருட்டாலையைச் சர்வதேச அளவுக்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை (Cold Rolling Mill) அமைத்திட 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இந்த தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் தொடங்கும் திட்டத்தினையும் தமிழகத்திற்குத் தற்போது வழங்கி உள்ளார்கள்.

இவைபோல, பல திட்டங்களை, கேட்டதை கேட்டபடியே உடனுக்குடன் நமக்கு வழங்கிவரும் நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கும்,

நமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாசத்திற்கும், நிறைந்த மதிப்பிற்கும் உரிய தியாகத் திருவிளக்கு திருமதி. சோனியா காந்தி அவர்களுக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியினைத் தமிழக மக்கள் சார்பில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதுவரை வழங்கியுள்ள திட்டங்களுக்கு நன்றி செலுத்துகின்ற அதே நேரத்தில், தமிழகத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென மத்திய அரசிடம் நாம் ஏற்கெனவே கோரியுள்ள ஒரு சில முக்கிய திட்டங்களையும் தமிழகத்திற்கு விரைவில் அனுமதித்து உதவுமாறு தங்கள் இருவரையும் அன்போடு கேட்டுக் கொண்டு, இத்திட்டங்களை இங்கே நினைவுபடுத்துவது எனது தலையாய கடமைகளில் ஒன்று என்று கருதுகிறேன்.

- குமரி மாவட்டம் குளச்சலில் ஒரு பெரிய துறைமுகம் (Major Port).
- மதிப்புக்கூட்டு வரியை 1.1.2007 முதல் தமிழகத்தில் நடைமுறைப்படுத்து வதால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு ஈட்டுத்தொகை வழங்குதல்.
- பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுதல்.
- கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்திற்கு நிதியுதவி வழங்குதல்.

- சென்னை விமான நிலையத்தை விரிவுபடுத்தி, டெல்லி மற்றும் மும்பையிலுள்ள பன்னாட்டு விமான நிலையங்களின் தரத்திற்கு இணையாக மேம்படுத்தி நவீனமயமாக்குதல்.

- சென்னைக்கும் மதுரைக்கும், சென்னைக்கும் கோவைக்கும் இடையில் அதிவேக புல்லட் ரயில்களை இயக்குதல்.

- தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க ஆணை பிறப்பித்தீர்கள். அதற்கு நன்றி, என்றென்றும் நன்றி. ஆனால் அந்தச் செம்மொழித் திட்டம் செம்மையாக நிறைவேற இன்னும் வழி வகுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, செம்மொழித் திட்டத்தின் சார்பாக ஆண்டுதோறும் "வள்ளுவர்" விருதும், "தொல் காப்பியர்" விருதும் வழங்க வேண்டுமென்றுநான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

– இத்தகைய பல்வேறு திட்டங்களைத் தமிழகத்திற்கு அனுமதித்திட வேண்டுமென நேரிலும், கடிதங்களின் மூலமாகவும் மத்திய அரசுக்கு பலமுறை கோரிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென மாண்புமிகு பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களையும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி. சோனியா காந்தி அம்மையார் அவர்களையும் மிகுந்த அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

நமது நாட்டில் மோட்டார் வாகனத் தொழில்கள், அண்மையில் அலை அலையாகப் பெருகிவருகின்றன. இத்தொழில்களில், இந்தியா முழுவதிலும் ஐம்பது ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேலாக முதலீடுகள் செய்யப்பட்டு, மோட்டார் வாகனங்களின் ஆண்டு விற்பனை மதிப்பு 1 இலட்சத்து 65 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்துள்ளது; இது நாமெல்லாம் பெருமைப்படக் கூடிய மகத்தான தேசிய சாதனையாகும்.

மோட்டார் வாகனத் தொழிலில், தமிழகம் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. அசோக் லேலண்டு, டி.வி.எஸ் போன்ற பெரிய மோட்டார் நிறுவனங்கள் பல ஆண்டுகளாகத் தமிழகத்தில் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றன. ஆனால், 1996க்குப்பின் ஹூண்டாய் மோட்டார் நிறுவனமும், ஃபோர்டு தொழிற்சாலையும் நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக மோட்டார் வாகனத் தொழில்களில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. நமது நாட்டிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் பலர் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் ஆர்வத்துடன் அமைக்கத் தொடங்கி உள்ளனர்.

இந்தத் தொழிற்சாலைகளின் வேகமான வளர்ச்சி காரணமாக, இந்தியாவில் உற்பத்தியாகும் வாகன உதிரிபாகங்களில் தமிழகம் 35 விழுக்காடு அளவுக்கு உற்பத்தி செய்கிறது; அதேபோல, மோட்டார் வாகனங்களின் உற்பத்தியும் ஏறத்தாழ 20 விழுக்காடு அளவிற்கு உயர்ந்துள்ளது.

இவை இந்திய வாகனத் தொழில்களின் வளர்ச்சியில் தமிழகம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இன்று அடிக்கல் நாட்டப்படக்கூடிய இந்த மையம், மத்திய அரசின் 1,718 கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு களுக்கான மெகா திட்டத்தின் ஓர் அங்கமாக, மத்திய மாநில அரசுகளின் கூட்டு முயற்சியில், ஒரகடத்தில் அமைக்கப்படுகிறது.

470 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாகும் இந்த மையத்தை அமைப்பதற்காகத் தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனம் 304 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளது. அனைத்து அம்சங்களிலும் வாகனங்களைச் சோதனை செய்து, அவற்றின் தரத்தை உறுதி செய்திடும் ஒரு முழுமையான மையமாக இது விளங்கும்.

ஒரகடத்தில் நிறுவப்படும் இந்த மையம் அனைத்து வகை வாகனங்கள், உதிரி பாகங்களின் தரம், வாகன இயக்கமுறைகள் ஆகியவற்றை ஈரோ 5 எனப்படும் ஐரோப்பிய விதிமுறைகளின் படி சோதித்துச் (HOMOLOGUS) சான்றிதழ் வழங்கும்; மேலும், வாகன என்ஜின் மற்றும் தகவல் தொடர்பு போன்றவைகளில் பின்பற்றப்படும் மின்னணு முறைகள் (INFROTRONICS),

வாகனங்களில் அமைக்கப்படும் சீட்பெல்ட் முதலிய பாதுகாப்பு, தடுப்புச் சாதனங்கள் (PASSIVE SAFETY),

புறச் சூழல்களுக்கேற்ப வாகனத்தில் அமையும் மின்காந்தத் தாங்கு திறன்கள் (ELECTRO MAGNETIC COMPABILITY) ஆகியவற்றைத் துல்லியமாகச் சோதனை செய்திடும் மிகச் சிறந்த ஆய்வு மையமாக இது திகழும்.

இந்த மையம், வாகன ஓட்டத்தைச் சோதித்தறிவதற்காக 1.8 கி.மீ. நீள சோதனைப் பாதையுடனும் அமையும். இத்திட்டம் 3,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். ஐயுற வேண்டாம். அதுவும் உள்ளூர் தொழிலாளர்களே இதில் பெரும்பாலோர் இடம் பெறுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையம் அமைவதன் மூலம்தான், உண்மையிலேயே ஒரு முழுமை வாய்ந்த மோட்டார் வாகனத் தொழில்களுக்கான இணைப்பு மையம் (Automobile Hub) எனும் சிறப்பைச் சென்னை மாநகரம் பெறும்;

உலக அளவில் வாகனச் சோதனை மற்றும் உறுதிப்படுத்துதல் தொழிலின் சந்தை மதிப்பு 560 பில்லியன் அமெரிக்க டாலராகும். இதில் கணிசமான தொகையை இந்த மையம் இங்கே ஈர்க்கும். எனவே, மோட்டார் வாகனத் தொழிலின் உலக வரைபடத்தில் சென்னை ஒரு முக்கிய இடத்தைப் பெறும்.

இத்திட்டம், தமிழகத்தில் வாகனத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களிடையேயும் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உள்நாட்டுச் சந்தையிலும், வெளிநாட்டு ஏற்றுமதிகளிலும்

“

**தமிழகத்தில் வாகனத் தயாரிப்புத் தொழில்களில் தற்போது ஏறத்தாழ 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் எனவும், அடுத்த 10 ஆண்டுகளில் இத்தொழில்களில் 5 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரியவந்துள்ளது.**

”

செல்வாக்குப் பெற்று, ‘தென்கிழக்கு ஆசியாவின் டெட்ராய்ட்’ என சென்னை மாநகரம் புகழப்படுகிறது.

தற்போது, தமிழக கார் தொழிற் சாலைகளில் ஏறத்தாழ 100 கோடி அமெரிக்க டாலர் (ஒரு பில்லியன்) அளவுக்கு முதலீடுகள் செய்யப் பட்டுள்ளன. ஹூண்டாய் நிறுவனம், 2007 ஆம் ஆண்டில், ஆண்டு உற்பத்தித் திறனை 6 இலட்சம் கார் என உயர்த்திட முடிவு செய்து, தனது தொழிற்சாலையை விரிவுபடுத்தி வருகிறது.

இந்த வாகனச் சோதனை மையம் தயாரிப்புகளைச் சோதித்தல் மற்றும் உறுதிப்படுத்துதல் பணிகளை விரைந்து முடித்து, தொழிற்சாலைகளில் வாகன உற்பத்திப் பணிகள் விரைவாய் நிகழ உதவும்.

தமிழகத்தில் வாகனத் தயாரிப்புத் தொழில்களில் தற்போது ஏறத்தாழ 80 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர் எனவும், அடுத்த 10 ஆண்டுகளில் இத்தொழில்களில் 5 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த ஆய்வு முடிவில், தமிழகத்தில் வாகன உற்பத்தி 2015ஆம் ஆண்டில், 6 முதல் 7 மடங்குவரை அதிகரிக்கும் என்றும், இத்தொழில் முதலீடுகள் 15 பில்லியன் அமெரிக்கா டாலர் முதல் 20 பில்லியன் அமெரிக்க டாலர் வரை உயரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கடந்த 5 மாதங்களில், மோட்டோரோலா, அப்போலோ டயர்ஸ், டெசால்வ், குரோத்லிங்க், டெல் கம்ப்யூட்டர்ஸ் ஆகிய ஐந்து தொழில் நிறுவனங்களுடன், தொழிற்சாலைகளைத் தொடங்கிட, தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இந்த ஐந்து தொழில் நிறுவனங்களின் மூலம், தமிழகத்தில் 2,300 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் பெருகும்; 24,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 26,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 50 ஆயிரம் பேர் நிரந்தர வேலை வாய்ப்புகளைப் பெறுவர்.

மாநிலத்தின் விரைவான முன்னேற்றம் கருதி, இந்த அரசு மத்திய அரசுடன் இணைந்து இணக்கமாகச் செயல்படுகிறது. இந்த இணக்கமான நல்லுறவு மேலும் மேலும் தொடர வேண்டும்; மத்திய அரசின் உதவிகளும் ஒத்துழைப்பும் தமிழகத்திற்குத் தொடர்ந்து கிடைத்திட வேண்டும் என இவ்வேளையில் மீண்டும் அன்புடன் கேட்டுக்கொண்டு, இதற்குக் காரணமான அனைவருக்கும் உங்கள் சார்பாக நன்றி தெரிவித்து அமைகிறேன்.

வணக்கம்.


ஆவின் ®
Green மேஜிக்
புதியது, தூயது & சுகாதாரமானது
ISO 9001-2000 & HACCP CERTIFIED
4.5% பால்
எக்ஸ்ட்ரா பவர்
எக்ஸ்ட்ரா சக்தி
Green MAGIC
Pasteurised Standardised Milk
Fortified with Vitamin A
Fat 4.5% S.N.F. 8.5%
ஆவின்
Green மேஜிக்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
1800 425 3300 (Toll Free) போன் : 24358033 / 24332383
www.aavin.net e-mail : aavinnodal@hotmai.com



# சென்னையில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்





**செ**ன்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறையுடன் பன்னாட்டு அரிமா சங்கம் – 324ஏ5, பன்னாட்டு ரோட்டரி சங்கம்–3230 மற்றும் இளைஞர் விழிப்புணர்வு இயக்கம் ஆகியவை இணைந்து மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களை 12.11.2006 அன்று சென்னையில் உள்ள 155 வார்டுகளிலும் நடத்தியது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தியாகராய நகர் டாக்டர் கிரியப்பா சாலையில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

அந்த முகாமில் கண் சிகிச்சை முகாம், பொது மருத்துவப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை மற்றும் சென்னை மாநகராட்சி மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நடமாடும் மருத்துவ ஊர்தியைப் பார்வையிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில், "சென்னை மாநகராட்சி சார்பில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் ரோட்டரி மற்றும் அரிமா சங்கங்களுடன் இணைந்து பொதுமக்களின் சேவைக்காக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகாமில் சிக்–குன்–குனியா, மூட்டு வலி, இரத்தக் கொதிப்பு, தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், வயிற்றுப் போக்கு, கண் நோய் மற்றும் நீரிழிவு நோய்களுக்குப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. அறுவை சிகிச்சை தேவைப் படுபவர்களுக்கும் உடனடியாக செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அனைத்து ஊராட்சிகளிலும் வருமுன் காப்போம் திட்டம் மூலம் மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது. தேவைப்படும் பகுதிகளுக்கு இது போன்ற சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும். நடமாடும் மருத்துவ ஊர்திகள் மூலம் ஏழை, எளிய மக்கள் இருக்கும் குடிசைப் பகுதிகளுக்கும், மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும்

**ஏறத்தாழ 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த முகாமில் 400 மருத்துவர்கள், 800 செவிலியர்கள் மற்றும் 4,000க்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர்கள் இச்சிறப்புப் பணியில் ஈடுபட்டனர்**



பகுதிகளுக்கும் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப்படுகிறது" என்றார்.

ஏறத்தாழ 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முகாமில் 400 மருத்துவர்கள், 800 செவிலியர்கள் மற்றும் 4,000க்கும் மேற்பட்ட மருத்துவ உதவியாளர்கள் இச்சிறப்புப் பணியில் ஈடுபட்டனர். சென்னை மாநகராட்சியில் உள்ள 10 மண்டலங்களிலும் இலவச கண் சிகிச்சை முகாம்களும் நடமாடும் மருத்துவ ஊர்தி வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னையில் நடைபெற்ற மருத்துவ முகாம்களில் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்று மருத்துவப்பரிசோதனை செய்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்பிரமணியன், துணை மேயர் திருமதி. ஆர். சத்தியபாமா, ஆணையாளர் திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திரு. கே. மணிவாசன், இ.ஆ.ப., மருத்துவ அலுவலர் திரு. குகானந்தம், மண்டல அலுவலர் திரு.பி. முருகேசன், மன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் மா.பா. அன்புதுரை, வே.கிருஸ்டி, சைதை பி.ரவி, ஏ.பாபு. திருமதி. சுசீலா கோபாலகிருஷ்ணன், அரிமா மற்றும் ரோட்டரி சங்க நிருவாகிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சென்னை மாநகராட்சி

* * *

**2007 ஆம் ஆண்டின் அரசு பொது விடுமுறை நாட்கள்**

| வ.எண். | விழா | நாள் | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 1. 1. 2007 | திங்கள் |
| 2. | பொங்கல் திருநாள் | 15. 1. 2007 | திங்கள் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 16. 1. 2007 | செவ்வாய் |
| 4. | உழவர் திருநாள் | 17. 1. 2007 | புதன் |
| 5. | குடியரசு தினம் | 26. 1. 2007 | வெள்ளி |
| 6. | முகரம் | 30. 1. 2007 | செவ்வாய் |
| 7. | தெலுங்குப் புத்தாண்டு | 19. 3. 2007 | திங்கள் |
| 8. | மகாவீர் ஜெயந்தி | 31. 3. 2007 | சனி |
| 9. | மீலாதுன் நபி | 01. 4. 2007 | ஞாயிறு |
| 10. | புனித வெள்ளி | 06. 4. 2007 | வெள்ளி |
| 11. | தமிழ்ப் புத்தாண்டு | 14. 4. 2007 | சனி |
| 12. | மே தினம் | 1. 5. 2007 | செவ்வாய் |
| 13. | சுதந்திர தினம் | 15. 8. 2007 | புதன் |
| 14. | கிருஷ்ண ஜெயந்தி | 4. 9. 2007 | செவ்வாய் |
| 15. | விநாயகர் சதுர்த்தி | 15. 9 2007 | சனி |
| 16. | மகாத்மாகாந்திபிறந்தநாள் | 2. 10. 2007 | செவ்வாய் |
| 17. | ரம்ஜான் | 14. 10. 2007 | ஞாயிறு |
| 18. | ஆயுதபூஜை | 20. 10. 2007 | சனி |
| 19. | விஜயதசமி | 21. 10. 2007 | ஞாயிறு |
| 20. | தீபாவளி | 8. 11. 2007 | வியாழன் |
| 21. | பக்ரித் | 21. 12. 2007 | வெள்ளி |
| 22. | கிறிஸ்துமஸ் | 25. 12. 2007 | செவ்வாய் |

சிறுகதை

கிருஷ்ணன் நம்பி

அந்தக் கல்யாணத்துக்கு முத்துசாமி எப்படிப் போகாமல் இருக்கமுடியும்? எத்தனை அன்பாக, கரிசனையாக வீடுதேடி வந்து அழைத்துவிட்டுப் போயிருக்கிறான் ராஜாராமன். "நீ மட்டும் காலை எட்டு மணிக்குள் வந்து சேராமலிருந்தாயோ, கல்யாணத்தையே ஒத்திபோடச் சொல்லிவிடுவேன்'' என்று பிரியமும், கண்டிப்பும் கலந்து சொல்லி விரலை ஆட்டி எச்சரித்து விட்டல்லவா போனான் அவன்.

கோரம்பாய்ப் படுக்கையில் புரண்டபடி சிந்தனைகளில் மனசைப் புரட்டினான் முத்துசாமி. ஆனால், பக்கத்து கிராமத்தில் நடக்கிற ஒரு சிநேகிதனின் கல்யாணத்திற்குப் போவதில் பிரமாதமான சிந்தனைக்கோ, மனஅலைச்சலுக்கோ எங்கே இடம் இருக்கிறது? ஒன்றுமில்லைதான். போட்டுக் கொண்டு போக ஒரு சட்டை மட்டும் கைவசமிருந்தால் முத்துசாமி ஒன்றையுமே யோசித்திருக்கமாட்டான். ஆமாம், அவனுக்குப் போட்டுக் கொள்ள ஒரு சட்டை இல்லை. அன்று வரை அது அவனுக்கு ஒரு குறையாகவேபடாமலிருந்தது. மாசம் அஞ்சுக்கும் பத்துக்கும் கடைக்குக்கடை ஏறி இறங்கிக் கணக்கு எழுதிட்டு வருகிற உத்தியோகத்துக்கு சட்டை எதற்கு? மேலும் அந்த ஊர் என்ன பெரிய பட்டணக்கரையா? குக்கிராமத்தைவிடக் கொஞ்சம் ஒசத்தியாக இருக்கும். அந்த ஊரில் அந்த உத்தியோகத்துக்குச் சட்டை அவசியமில்லை என்றுதான் தனக்குள் வாதித்துக் கொண்டான்.

முத்துசாமிக்கு எளிமையில் நம்பிக்கை கிடையாது. பணக்காரனுக்கு எளிமை அழகாக இருக்கலாம்; ஏழைக்கு வேண்டுமென்ற ஆசை இல்லாமலில்லை. ஆனால் அரை வேட்டிக்கே இடம் தர உதைக்கும் அவனுடைய 'பட்ஜெட்' சட்டைக்கு இடம் கொடுக்க வேண்டுமே அவனுக்கு இரண்டு பச்சைக்கரை வேட்டிகளும் இரண்டு பனியன்களும் இருந்தன. இதைத் தவிர தோளில் போட்டுக் கொள்கிற துண்டுகள் இரண்டு. ஊரில் ஆறு இருக்கிறது. ஆற்றோரத்தில் கல்லும் கிடக்கிறது. துவைத்துத் துவைத்து, மாற்றி மாற்றிக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான். மாசம் முப்பது முதல் நாற்பத்தியைந்து ரூபாய்வரை வருகிற வருமானத்தில் நன்றாகச் சாப்பிடுகிற நாலு குழந்தைகளையும் மனைவியையும் வைத்து சம்ரட்சிக்க வேண்டுமானால் கோவணம் கட்டிக் கொண்டு வாழக்கூடத் தகப்பன் கற்றுக் கொள்ள வேண்டும்.

# சட்டை

முத்துசாமியும் எத்தனையோ கல்யாணங்களுக்குப் போயிருக்கிறான். இப்போது ஏற்பட்டிருக்கிற மாதிரி தர்ம சங்கட நிலைமை இதற்குமுன் எப்போதுமே அவனுக்கு ஏற்பட்டதில்லை. அவனைக் கல்யாணத்துக்கோ அல்லது பிற விசேஷங்களுக்கோ அழைத்தவர்கள் எல்லாம் அவனைப் போன்ற ஆண்டிகளாகவோ, அல்லது அவனைவிடவும் இறங்கின ஆண்டிகளாகவோதான் இருந்தனர். வெறும் வேட்டி துண்டுக்காரன் வீட்டுக் கல்யாணத்துக்கு பனியன், வேட்டி, துண்டுடன் அந்தஸ்தாகப் போயிருக்கிறான் அவன். எந்தப் பணக்காரர் வீட்டுக் கல்யாணத்துக்கும் அன்று வரை அழைக்கப் பட்டதில்லை அவன். அப்படி ஒரு சந்தர்ப்பம் நேரவில்லை.



இப்போது நேர்ந்துவிட்டது. அவனுடன் அவ்வூரில் சின்ன வயசில் ஒன்றாகப் படித்த ராஜாராமன், பட்டணம் போய் பெரிய படிப்புப் படித்து, பெரிய பட்டம் பெற்று, பெரிய மிராசுதார் பெண்ணையும் ரூபாய் பதினாயிரம் வரதட்சிணையையும் தட்டிக் கொண்டு போக 'ஜம்'மென்று மாப்பிள்ளையாக வந்திருக்கிறான். கொடுத்து வைத்தவன்; அதிர்ஷ்டசாலி. ஆனால் இந்த நிலையிலும் இந்த ஏழை முத்துசாமியை மறக்கவில்லையே அவன். எத்தனை நல்ல மனசு அவனுக்கு ஹாட்டும், ஸூட்டுமாகக் கொளுத்துகிற வெயிலில் கைக்குட்டையால் முகத்தையும், கழுத்துப் பட்டையையும் துடைத்துக் கொண்டு குங்குமமாகச் சிவந்த முகத்துடன் இந்தக் குடிசைக்கு வந்தானே. வந்தவனிடம் 'சட்டை வாங்கிக்கொடு; உன் கல்யாணத்துக்கு வருகிறேன்' என்று கேட்க முடியுமா? ராஜாராமனின் அன்பை நினைத்தபோது முத்துசாமியின் மனசு ஒரு தரம் விம்மிற்று; கிளுகிளுத்து உடம்பு புல்லரித்துக் கண் துளிர்த்தது. மிராசுதார் வீட்டு மாப்பிள்ளைப் பையன் அங்கே வந்து போவதைப் பார்த்து அண்டை வீட்டுக்காரர்கள் கொஞ்சம் அசந்துதான் போனார்கள். அசட்டு முத்துசாமியிடம் அவர்களுக்கெல்லாம் சற்று மதிப்புகூட உண்டாயிற்று.

கோரம்பாய்ப் படுக்கை உடம்பைச் சற்று உறுத்தவே சட்டென்று முத்துசாமி எழுந்து உட்கார்ந்து கொண்டான். முதுகைச் சொறிந்தான். அந்தக் குடிசையில் எத்தனையோ பொருட்கள் இல்லாமலிருந்தன. அங்கே மூட்டைப்பூச்சிகள் கூட இல்லை அதில் அவனுக்கு அளவற்ற திருப்தி ஒன்றுமில்லாவிட்டாலும் மூட்டைக்கடி இன்றி நிம்மதியாகத் தூங்கலாமல்லவா? ஆனால் அன்று அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பணக்கார சிநேகிதனின் கல்யாணத்துக்குப் போட்டுகொண்டு போக அவனுக்கு ஒரு சட்டை இல்லை.

சுவரில் அடிக்கப்பட்ட ஆணியில் தவம் புரிந்து கொண்டிருந்த சிம்னி விளக்கைக் கழற்றி எடுத்து அதன் சுடரைச் சற்று பெரிது பண்ணினான். 'மூட்டைத் தொல்லை இல்லை என்று சந்தோஷபட்டுக் கொண்டிருந்தோமே இங்கேயும் வந்துவிட்டதா?' சிம்னி விளக்கின் ஜீவனற்ற தேய்ந்த ஒளியில் கோரம்பாயில் மூட்டைப் பூச்சியைத் தேடினான் அவன். ஒரு மூட்டை அகப்பட்டது. இங்கேயும் மூட்டை வந்துவிட்டது. தப்ப முயற்சித்த மூட்டையைப் பிடித்து விரல்களுக்கிடையே கொலை செய்தான். ரத்தத்தின் செம்மை அவனது இடக்கைச் சுட்டுவிரலிலும், கட்டைவிரலிலும் தோய்ந்து, அது மூட்டையின் ரத்தமா, முத்துசாமியின் ரத்தமா? அந்த உரிமைப் பிரச்சினை பற்றி வெகுநேரம் அவனால் சிந்திக்க முடியவில்லை. அந்தக் கல்யாண நினைவு, சட்டை நினைவு மீண்டும் அவன் நெஞ்சில் கால்பரப்பியது.

சிம்னி விளக்கின் சுடரைச் சின்னதாக்கி சுவரில் மாட்டினான். அவனுடைய மூத்தமகன் அருணாசலம் தூக்கத்தில் ஏதோ உளறியபடிப் புரண்டு படுத்தான். மற்ற மூன்று குழந்தைகளும் சுருண்டு சுருண்டு வரிசையாகக் கிடந்தன. அவன் மனைவி சுப்பம்மா பாதி திறந்த வாயுடன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய ஒரு கால் மூன்று வயசுக் கடைக்குட்டிப் பையனின் முதுகில் கிடந்தது. முத்துசாமி எழுந்துபோய் மெதுவாக அந்தக் காலை நகர்த்தி தரையில் போட்டுவிட்டுத் தன் படுக்கைக்கு வந்தான். படுத்தபடியே தன் குழந்தைகளையும் மனைவியையும் சற்றுநேரம் அமைதியாகப் பார்த்தான். சுப்பம்மா ஒரு மரக்கட்டையைத் தலையணையாக வைத்திருந்தாள். குழந்தைகளின் தலைமாட்டில் ஒரே ஒரு எண்ணெய்ச் சிக்குப்பிடித்த, பூப்போட்ட தலையணை ஒருவர் தலைக்கும் அணையாகாமல் விலகிக்கிடந்தது. மொத்தம் அவர்களிடம் இரண்டு தலையணைகளே இருந்தன. ஒன்றை முத்துசாமி வைத்துக் கொள்வான். மற்றொன்று மற்றவர்களுக்கு யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிடுவான் அவன். சுப்பம்மா அதைக் குழந்தைகளிடம் கொடுத்து விடுவாள். அவர்கள் தினமும் 'எனக்கு, எனக்கு' என்று தலையணைக்காகச் சண்டை போடுவார்கள். அருணாசலம் பெரியவனாதலால் – எட்டு வயசு அவனுக்கே வெற்றி கிடைக்கும். அவன் தன் தலைக்குத் தலையணை வைத்துக் கொள்வான். மனசிருந்தால் தன் தம்பிக்கோ, தங்கைக்கோ தலையணையில் ஒண்டிக் கொள்ள இடம் கொடுப்பான். சற்று நேரத்தில் அந்தத் தலையணை நழுவி ஒருவருக்கும் இல்லாமல் அப்பால் போய்விடும்.

முத்துசாமி அந்தத் தலையணையை ஒரு நிமிஷம் கவனித்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தத் தலையணைகூடத் தன் குழந்தைகளில் ஒன்றோ என்று அவனுக்கு அப்போது தோன்றிற்று போதும் போதும்; இருக்கிற குழந்தைகளுக்கே ஒன்றையும் காணோம்.....

மறுபடியும் சட்டை நினைவு வந்துவிட்டது. மணி என்ன இருக்கும்? பன்னிரண்டுக்கு மேலிராது. தெரு விளக்கின் மங்கிய வெளிச்சம் ஜன்னல்வழி உள்ளே விழுந்து கொண்டுதானிருந்தது. எதிர்வீட்டுப் பசுமாடு 'ம்மா' என்று எதற்கோ சத்தம் கொடுத்தது. ஒரு கணம் சுவர்க் கோழியின் சங்கீதத்தை ரசித்தான் முத்துசாமி.

ஐந்து ரூபாய் பணம் கடன் வாங்கியாவது ஒரு புதுச் சட்டை தைத்துக் கொண்டு விடலாம் என்ற எண்ணம் வெகு நேரத்திற்குப் பின் அவன் மனசில் பளிச்சிட்டது. அந்த நினைப்பு தோன்றியபோது அவன் உடல் ஒரு தரம்

குலுங்கிற்றா ? அவனது சராசரி மாத வருவாயில் ஆறில் ஒருபங்கு அல்லது ஒன்பதில் ஒரு பங்கு ! புதுச்சட்டை ஒன்று தைத்துக் கொள்ளும் எண்ணம் எப்படித்தான் தன் மனசில் தோன்றியதோ என்று ஆச்சரியமும், எரிச்சலும் அடைந்தான் அவன். அம்மாதிரி ஒரு எண்ணம் தனக்கு வந்திருக்கக் கூடாது என்று நினைத்தான். ஒரு நாள் கல்யாணத்துக்காகப் புதிதாக ஒரு சட்டை தைத்துக் கொள்ளத் துணிவதோ ? பொறுப்பற்ற எண்ணங்கள் சில வேளைகளில் தன்னிடம் தலைகாட்டுவதை எண்ணி அவன் வெட்கினான்.

தெருவிளக்கு அணைந்துவிட்டது. அணைந்து எத்தனை நேரமாகியிருக்கும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. எங்கிருந்தோ நாய் குரைத்த சப்தம் வந்தது. சட்டைப் பிரச்சினை பற்றி ஒரு முடிவுக்கும் வராமலே சற்று நேரத்தில் அவன் தூங்கிப் போய் விட்டான். துயர்ப்படும் ஏழை மக்களின் இரவில் தூக்கம் எத்தனை பெரிய இன்பமாய்ச் சிறகு விரிக்கிறது.

காலையில் முத்துசாமி படுக்கையை விட்டு எழுந்தபோது மணி ஏழாகிவிட்டிருந்தது. வழக்கமாக ஆறு மணிக்கெல்லாம் எழுந்து விடுபவன், இரவு வெகுநேரத்திற்குப்பின் தூங்கியதால் காலையில் ஒரு மணி நேரம் அதிகமாகத் தூங்கிவிட்டான் போலிருக்கிறது. பாயைச் சுருட்டி ஒரு மூலையில் எறிந்துவிட்டுக் குளிக்கப் புறப்பட்டான். உமிக்கரியும், துண்டும், பனியனும் எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கி நடந்தான். மனதில் சட்டை நினைவு மீண்டும் இழையோட ஆரம்பித்துவிட்டது. மறுநாள் அல்லவா கல்யாணம்.

குளிர்ந்த ஆற்றுப் பரப்பில் இரண்டு கைகளையும் விரித்துத் துழாவிக்கொண்டு இறங்கியபோது தனக்கேற்ற ஒரு சட்டை நீரில் மிதந்து வரக்கூடாதா என்று அவன் நப்பாசைப்பட்டான். உடனே தன் அசட்டுத் தனத்தைத் தனக்குள் கண்டித்துக் கொண்டான். உடுத்துக் கொண்டு போக கம்பிக்கரையாக ஜரிகைபோட்ட வேட்டி அவனிடமிருந்தது. யாரோ எப்போதோ மோட்டாரில் தவறி விட்டுவிட்டுப் போன ஒரு காகிதக் கட்டை எடுத்துப் பிரித்தபோது அதனுள் அழகிய புதிய ஜரிகை வேட்டி இருந்ததை அவன் கண்டான். அது அவனுடையதாகிவிட்டது. அந்த வேட்டியைப் பத்திரமாக வைத்திருக்கும்படிச் சுப்பம்மாவிடம் அவன் கொடுத்து வைத்தான். ஒன்றிரண்டு கல்யாணங் களுக்குக்கூட அதை உடுத்திக்கொண்டு போனதுண்டு. அதையே ராஜாராமன் கல்யாணத்துக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், சட்டை இல்லையே, சட்டை போட்டுக்கொள்ளாமல் ஜரிகை வேட்டி உடுத்திக்கொண்டு போவதில் என்ன அர்த்தம் இருக்கிறது; என்ன அந்தஸ்து இருக்கிறது ?

சின்ன வயசில் முத்துசாமி சட்டை போட்டுக் கொண்டுதான் ஐந்தாவது வகுப்புவரை படித்தான். முதலில் கொஞ்சம் பணமுள்ள ஏழையாக இருந்த முத்துசாமியின் தந்தை படிப்படியாய்ப் பரம ஏழையாகப் போனார். பிறகு தன் மகனை அவர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவுமில்லை; அவனுக்குச் சட்டை தைத்துக் கொடுக்கவுமில்லை. அவரால் அது முடியவில்லை. பிறகு பல வருஷங்களுக்குப் பின்–மூன்று வருஷங்களுக்கு முன்னால் தம் கடைசிப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைத்தபோது முத்துசாமிக்கு ஒரு சாதாரண ஒற்றை வேட்டியும் வாங்கிக் கொடுத்து, ஒரு வெள்ளைச் சட்டையும் தைத்துக்



கொடுத்தார் அவர். ஆனால், சட்டை முத்துசாமியின் உடம்புக்குச் சரியாக இல்லை. குருட்டுக் கணக்கில் சின்னதாகவே துணி வாங்கி, சின்னப் பையனுக்குச் சேருகிற மாதிரித் தைத்து வாங்கிவிட்டார். "ஒங்க சட்டையும் லெச்சணமும், நீங்களே வெச்சிக்கிடுங்க" என்று ஆத்திரத்துடன் தன் தகப்பனார் முன்னால் வீசி எறிந்தான். அவன் தரையில் விழுந்த சட்டையை சுப்பம்மா எடுத்து தன் பெட்டிக்குள் வைத்துக் கொண்டாள். சற்று பெரிய பையனான பிறகு தன் மகன் அருணாசலத்துக்காவது அணிவிக்கலாமே என்று அவள் நினைத்தாள்.

அவ்வளவுதான். ஐந்தாம் வகுப்புக்குப் பிறகு முத்துசாமிக்குச் சட்டை இல்லாமலே போய்விட்டது. தன் பணத்தில், தான் சட்டை தைத்துப் போட்டுக் கொள்ளும் காலம் இன்னும் வரவில்லை.

தன் வறுமையையும் துன்பங்களையும் நினைத்து உருகியபடி ஆற்று நீரில் உடம்பை நனைத்துக் கொண்டிருந்தான் முத்துசாமி, பொழுது ஏறிக்கொண்டு போயிற்று வெயில் சற்று கடுத்து விட்டது. அவசர அவசரமாக நாலு முழுக்குப் போட்டுவிட்டு, துவைத்து வைத்த வேட்டி, பனியனுடன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான் அவன்.

மணி ஒன்பது அடித்துவிட்டது. வேட்டி மாற்றிக் கொண்டு தன் மனைவியண்டை போனான். அவள் மூத்த மகன் அருணாசலத்துக்குச் சட்டை பொத்தான் போட்டுக் கொண்டிருந்தாள்... அருணாசலத்துக்குப் பள்ளிக்கூடம் போக நேரம் ஆகிவிட்டது. பொத்தானை மாட்டிக் கொண்டே, "ஒங்களுக்கு மட்டும் நாலு முசுகட்டைக் கீரைத்தோசை செஞ்சு வைச்சிருக்கேன். ஆறிப் போறதுக்கு முன்னாலே தின்னுடுங்க" என்றாள் சுப்பம்மாள்.

"அதுசரி சுப்பம்மா, நாளைக்கு அந்தக் கல்யாணத்துக்குப் போட்டுக்கிட்டுப் போகச் சட்டை இல்லையே என்ன செய்யிறதுன்னு யோசிக்கிறேன்" என்று தன் பிரச்சினையை அவன் சொன்னான். ஏற்கெனவே முன் தினம் அவளிடம் சொல்லியாகிவிட்டது. இன்று மீண்டும் சொல்கிறான். அவளிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது?

"என்ன செய்யிறது சொல்லுங்க... போக வோண்டாம்னு வெச்சிரவேண்டியதுதான். நமக்கெதுக்கு கல்யாணமும் கார்த்திகையும்... என்று விரக்தியைக் கொட்டினாள் சுப்பம்மா.

தன் சட்டை சரியாக இருக்கிறதா என்று குனிந்து பார்த்துக்கொண்டான் அருணாசலம். துவைத்து உலர்த்தியதால் எண்ணற்ற சுருக்கங்கள் விழுந்து அந்தக் காக்கிச் சட்டை சுருணையாக இருந்தது. சட்டையின் இரண்டு விளிம்புகளையும் வெட்டி வெட்டி இழுத்துவிட்டுக் கொண்டான் அச்சிறுவன். முத்துசாமி பேசினான்.

"எப்படி சுப்பம்மா போகாம இருக்கிறது....?"

"அப்படியானா, சட்டை போட்டுக்காமலே போங்க... பனியனும் துண்டும் இருக்கவே இருக்கு."

முத்துசாமி ஒன்றும் பேசாமல் தோசையை எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தான். சுப்பம்மா கணவனுக்குத் தண்ணீர் எடுத்துவைத்தாள்.

தன் பெற்றோர் பேசுவதைக் கேட்டுக்கொண்டு நின்ற அருணாசலம் ஒரு நிமிஷம் ஏதோ யோசித்துவிட்டு, "அம்மா பெட்டியிலே ஒனக்கு சட்டை இருக்கப்பா; வெள்ளச் சட்டை" என்று சொன்னான்.

முத்துசாமி மனைவி பக்கம் திரும்பினான்.

"அதாங்க, அந்தப் பழைய சட்டை ஒங்க தங்கச்சி கல்யாணத்துக்கு ஒங்கப்பா தெச்சுக் கொடுத்தாரே ஒங்களுக்கு 'அளகா' அதைச் சொல்றான் பய."

"அதை இன்னமுமா வெச்சிருக்கே?"



"பின்னே, வெச்சுக்காமே குளத்திலேயே போடுவாங்க. ரெண்டு வருசம் போனா இந்தப் பயலுக்குப் போட்டுக்க சரியா இருக்கும்,"

இதற்குள் அருணாசலம் அம்மாவின் ஓலைப் பெட்டியிலிருந்த அந்தப் பழைய சட்டையை எடுத்துக்கொண்டு அங்கு வந்து விட்டான்.

"இதோ பாரப்பா, இந்தச் சட்டைதான் இதைப் போட்டுக்கிட்டுக் கல்யாணத்துக்குப் போ" என்று உற்சாகமாகச் சொன்னான் அருணாசலம்.

முத்துசாமிக்கு எரிச்சல் பிடுங்கிற்று "ஏலே, முட்டாக்களுதே, யாருடா உன்னை இதை எடுத்திட்டு வரச் சொன்னா....ம்?" என்று கூச்சல் போட்டான். சுப்பம்மா குறுக்கிட்டாள். "பள்ளிக்கூடத்துக்குப் பொறப்பட்டு நிக்கற பிள்ளையை எதுக்கு திட்டுறீங்க? அவனுக்கு என்ன தெரியும்?"

"இங்கிருந்து போறியா இல்லையா" என்று இரைந்தான் முத்துசாமி.

"இந்தச் சட்டை அப்பாவுக்குச் சேராதுடா பயலே. இனிமே நீதான் இதைப் போட்டுக்கிடணும்" என்றாள் தாய்.

"சேரும் அம்மா" என்றான் சிறுவன்.

"எப்படிடா சேரும்?"

"போட்டுக்கிட்டாத்தானே சேரும்" என்று முரண்டு பண்ணினான் அருணாசலம்.

"பய ஆசையைத்தான் எதுக்குக் கெடுக்கணும்? போட்டுக் காமிச்சிருங்களேன்" என்றாள் சுப்பம்மா கனிந்த குரலில். கையைத் துடைத்துக் கொண்டு வந்த முத்துசாமி ஒன்றும் பேசாமல் தன் மகன் கையிலிருந்த சட்டையை வெடுக்கென்று பிடுங்கி அணிந்து கொள்ள முற்பட்டான். மறு கணம் அவன் உடம்புக்கு பெரிசாக, 'தொள தொள'வென்று அந்தச் சட்டை சேர்ந்து கொண்டது!

முத்துசாமி பித்துப் பிடித்தவன் போல் அலறினான் –

"சட்டை சரியா இருக்கு சுப்பம்மா: ரொம்பச் சரியா இருக்கு, ரொம்பச் சரியா இருக்கு."

அவன் கட்டுக்கடங்காத மகிழ்ச்சியில் குதித்தான்; கொம்மாளமடித்தான். உடனே, கசங்கிவிடாதபடி சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டுவிட்டு அருணாசலத்தை வாரி எடுத்துத் தழுவிக் கொண்டான்.

பசியிலும், பட்டினியிலும், வாழ்க்கைத் துயரங்களிலும் அடிபட்டு, சட்டம் சட்டமாய்விட்டுச் சருகாய்க் காய்ந்துபோய் நின்ற தன் கணவனின் மெலிந்த உடம்பைப் பார்த்துக் கண்ணீர் மல்க நின்றாள் சுப்பம்மா.

(சாகித்ய அக்காதமி வெளியிட்ட
நவீன தமிழ்ச் சிறுகதைகள்
நூலிலிருந்து....)

* * *


## சந்தாதாரர் ஆகுங்கள்

### தமிழரசு

தமிழக அரசின் செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

**தமிழரசு சந்தா விவரம்**

**தமிழரசு (தமிழ்) மாத இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | – | ரூ.10/– |
| ஆண்டுச் சந்தா | – | ரூ.120/– |
| ஆயுள் சந்தா | – | ரூ.1,000/– (10 ஆண்டுகள்) |

**தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்**

| | | |
|---|---|---|
| தனி இதழ் | – | ரூ.15/– |
| ஆண்டுச் சந்தா | – | ரூ.60/– |
| ஆயுள் சந்தா | – | ரூ.500/– (10 ஆண்டுகள்) |

தமிழரசு சந்தா தொகையினை
வங்கி வரைவோலையாகவோ,
பணவிடை மூலமாகவோ,
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப் பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பார்க்க, படிக்க, பயன்பெற**

இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்

# 60 ஆயிரம் பன்மொழி நூல்கள்கொண்ட

# தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகம்

உலகப் புகழ் பெற்ற தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அண்மைக் காலமாக பல வளர்ச்சிகளை எய்தியுள்ளது.

**நூல்கள் பதிப்புப் பணி**

மாமன்னர் சரபோஜியின் 229ஆவது பிறந்தநாள் விழாவில் பொதுமக்களால் மிகவும் விரும்பி வாங்கப்படும் இலக்கிய, வைத்திய, வானவியல் நூல்கள் 39ன் மறுபதிப்பு நூல்களும் புதிதாக 9 சமஸ்கிருத நூல்களும், 7 தமிழ் நூல்களும், ஒரு மராத்தி நூலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வெளியீடுகளையும் சேர்த்து இந்நூலகம் இதுவரை 495 நூல்களை வெளியிட்டுள்ளது. 24.9.2006லிருந்து 50 சதவிகிதம் தள்ளுபடி விலையில் புத்தகங்கள் விற்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் தினமும் சராசரி ரூ.20,000க்கு புத்தகங்கள் விற்பனையாகி வருகின்றன. புத்தகங்கள் அனைத்தும் சிறந்த எழில் வண்ண அட்டைகளுடன் வெளியிடப்பட்டுள்ளன.

**கணினிமயமாக்கல்**

இந்நூலகத்தில் 12 கணினிகள் பொருத்தப்பட்டு புத்தகங்கள் யாவும், கணினியிலும், தானியங்கி அச்சகத்திலும் அச்சாகி வெளியிடப்படுகின்றன. இதனால் தனியார் அச்சகங்களில் இந்நூலகப் புத்தகங்கள் தயாரிப்பது தவிர்க்கப்பட்டது. இதனால் நூலகத்திற்கு ஆண்டுதோறும் சற்றேறக்குறைய ரூ.6 இலட்சம் சேமிப்பாகிறது.

**புதிய நூல்கள் அச்சுப் பணி**

சிறந்த பதிப்பாசிரியர்களைக் கொண்டு இலக்கியம், இலக்கணம், மருத்துவம், ஜோதிடம் போன்ற பொருண்மையில் பத்து நூல்கள் அச்சாகி வருகின்றன. இதில் தொல்காப்பிய உரைக்கொத்து (எழுத்ததிகாரம்), தொல்காப்பிய உரைக்கொத்து (சொல்லதிகாரம்), வண்ணத் திரட்டு, திருவரங்க கலம்பகம், குமாரசாமியம், சூடாமணி உளமுடையான், இரகுநாத விலாசம், சிவரகசியங்கள் (அம்சங்கள் 9, 10, 11, 12) ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

**தேசிய சுவடிகள் சேகரிப்பு**

நடுவண் அரசு இந்நூலகத்தை தேசிய சுவடிகள் ஆய்வு மையமாகவும், சுவடிகள் பாதுகாப்பு மையமாகவும் நியமித்துள்ளது. (MRC & MCC) இத்திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, தேனி, தூத்துக்குடி, திண்டுக்கல், ஈரோடு ஆகிய 11 மாவட்டங்கள் அடங்கும்.

அ. இதுவரை கண்டறியப்படாத சுவடிகளை கண்டறிதல்.

ஆ. இணக்க அட்டவணை தயாரித்தல்.

இ. சுவடிகளைப் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்துதல் ஆகியவை தேசிய சுவடிகள் ஆய்வு மையப்பணிகளில் சில.

**சுவடிகள் பாதுகாப்பு மையம்**

மடங்கள், கோயில்கள், பெருமளவில் சுவடிகள் வைத்திருப்போர் ஆகியோரிடம் சென்று சுவடிகள்



பாதுகாப்பு முறையை விளக்கியும், செயல்படுத்தியும் சுவடிகள் பாதுகாக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இதுவரை ஈரோடு, மதுரை, பழனி ஆகிய நகரங்களில் சுவடிகளை பாதுகாப்பும், விழிப்புணர்வும் செயல்முறை விளக்கமும் செய்து காட்டப்பட்டது. இதேபோன்று சிவகங்கை மாவட்டம் கோவிலூரிலும் நடத்தப்பட்டது. 31.1.2006, 1.2.2006 மற்றும் 2.2.2006 ஆகிய மூன்று நாட்கள் தஞ்சாவூரில் மூலப்பாடம் செயல்முறை மற்றும் முருகியல் (Text, practice and Aasthetics Exploring the ancient tradition of Indian Architecture with particular reference to South India) என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் இந்தியாவின் பல்வேறு மாநிலத்திலிருந்து அறிஞர்கள் கலந்து கொண்டு இந்திய சிற்பக்கலை தொடர்பாகவும், சிற்பங்களின் காலம், வளர்ச்சி, செயல்முறை ஆகியவற்றையும் விளக்கினார்கள். வெளிநாட்டு அறிஞர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

13.9.2006 மற்றும் 14.9.2006 ஆகிய நாட்களில் பாண்டிச்சேரி பல்கலைக்கழக தமிழ்த்துறையும், நூலகமும் இணைந்து இருநாள் 'சுவடியியல்' கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் பாண்டிச்சேரி பல்கலைக்கழக முதுநிலை மாணவர்களும் ஆய்வுத்துறை மாணவர்களும் கலந்து கொண்டனர். அவர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

1.2.2006 முதல் 5.2.2006 முடிய ஐந்து நாட்கள் எல்லா மாவட்டங்களிலும் சுவடிகள் சேகரிப்பு முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டு சுவடிகள் இருக்கும் இடங்கள் கண்டறியப்பட்டன. சற்றேறக்குறைய ஒரு இலட்சம் சுவடிகள் கண்டறியப்பட்டன. தற்போது அதற்கான படிவங்கள் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இந்நூலகத்தில் இதுவரை தமிழில் 26 விவரப் பட்டியல்களும், சமஸ்கிருதத்தில் 23 விவரப்பட்டியல்களும், தெலுங்கில் 3, மராத்தியில் 6 விவரப்பட்டியல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### கட்டடப் பணிகள்

உலக புகழ்பெற்ற இந்நூலகத்திற்கு ஒரு நல்ல எழில் கூட்டும் முகப்புத் தோற்றம் வேண்டும் என்பதால் முகப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் (DRDA) ஒப்படைக்கப்பட்டு திரு.கண்ணன் ஸ்தபதியின் துணையோடு பணி முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இதுபோன்று நூலகத்தின் பின்புறம் உள்ள இடத்தை தனியார் ஆக்கிரமிப்பு செய்யாவண்ணம் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. நூலகத்தின் கீழ்ப்புறம் உள்ள அறை ஒன்றும் தூய்மைப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இவற்றிற்கான மதிப்பீடு ரூ.15 இலட்சமாகும்.

### சுவடிகள் மற்றும் நூல்களை மென்பொருள் வடிவில் பாதுகாக்கும் முறை

நூல்களைப் பாதுகாக்க அண்மைக் காலமாக Digitilisation எனும் மென்பொருள் முறை கையாளப்பட்டு வருகிறது. இம்முறை உலகின் முன்னோடி நூலகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, இந்த நூலகமும் இத்திட்டத்தைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக திருப்பதி திருமலை தேவஸ்தானம் இந்தியப் பண்பாட்டுப் பாதுகாப்பு (Indian Heritage) திட்டத்தின் கீழ் நூலகத்தில் தங்களிடமுள்ள கருவிகளை இங்கு கொண்டு வந்து பொருத்தி முக்கிய நூல்களை 'டிஜிட்டலைசேஷன்' செய்ய ஏற்பாடாகி வருகிறது.

### உலக பண்பாட்டுப் பதிவேடு
(World Heritage Register)

அரிய பொருண்மை கொண்ட சிற்பச் சுவடிகள் 96 (சமஸ்கிருதம் 86 மற்றும் தமிழ் 10) பதிவு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புத்தகப் பிரிவு

இப்பிரிவில் சற்றேறக்குறைய 60,000க்கு மேற்பட்ட பன்மொழிப் புத்தகங்கள் உள்ளன. மேலும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்கான புத்தகங்கள் வாங்கி ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தவும், மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் ஒரு திட்ட முன்மொழிவை நடுவண் அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

தற்போது ஐ.ஏ.எஸ்., தேர்வுக்கான புத்தகங்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

### குறும்படம்

நூலகம் பற்றிய குறும்படம் (CD) ஒன்று தமிழ்ப் பல்கலைக்கழக நாடகவியல் துறையால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### இணையதளம்

Sarasvatimahallibrary.Com என்ற இணைய தளம் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நூலகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ள சற்றேறக்குறைய 500 புத்தகங்களின் விவரங்கள் கொண்ட மென்பொருள் தயாராகி வருகிறது.

### நுண்படம் எடுத்தல்

நுண்படம் எடுக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 20,000 சுவடிகள் நுண்படமெடுக்கப்பட்டுள்ளன. மேலும், ஆய்வாளர்களுக்கும், அறிஞர்களுக்கும் புத்தகங்களின் முக்கியப் பகுதிகளையும், சுவடிகளின்




சென்னை கன்னிமாரா பொது நூலகத்தில் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தை 22–11–2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.

பகுதிகளையும் நுண்படம் மற்றும் ஜெராக்ஸ் எடுத்து வழங்கப்பட்டு வருகிறது.

**பயிற்சி வகுப்புகள் நடத்துதல்**

ஆண்டுதோறும் தமிழ், கிரந்தம், தெலுங்கு, மராத்தி மொழிகளில் சுவடியியல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்ற மாபெரும் வரலாற்றுச் சின்னமான நூலகத்தின் சார்பில் 9.10.2006 அன்று மாமன்னர் சரபோஜியின் 229ஆவது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

விழாவில், பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.தங்கமுத்து, சரஸ்வதி மகால் நூலகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவ–மாணவியர் முனைவர் பட்டம் பெற தகுதி பெறுவார்கள் என்று அறிவித்தார். தமிழ், சமஸ்கிருதம், மராட்டியம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களில் ஆய்வு மேற்கொள்ள மாணவருக்கு வழிகாட்டும் பேராசிரியர்களையும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அனுப்பிவைக்கும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து, தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சுப்ரமணியம் ஓலைச்சுவடிப் பிரிவில் சரஸ்வதி மகால் நூலகத்தில் ஆய்வு மேற்கொள்ளும் மாணவரை தமிழ்ப் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் பெற அங்கீகரிக்கும் என்று அறிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சா.விஜயராஜ்குமார்,இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, "திருமலை திருப்பதி தேவஸ்தானம், இந்தியா ஹெரிடேஜ் என்ற அமைப்பை செயல்படுத்துகிறது. அதன் மூலம் நமது நூலகத்தின் ஓலைசுவடிகளையெல்லாம் நமக்கு செலவில்லாமல் மென்பொருள் வடிவில் தயாரித்துத் தர இருக்கிறார்கள். அதற்கான ஆணை விரைவில் வெளிவரும். அதற்குப் பின்னர் இங்குள்ள ஓலைச்சுவடிகளை மென்பொருள் வடிவில் யார் வேண்டுமானாலும் படிக்கலாம். அவற்றில் அடங்கியுள்ள மிகப்பெரிய கருத்துகள் உலகெங்கும் கொண்டு சேர்க்கப்படும். யுனெஸ்கோ நிறுவனம் வெளியிடுகின்ற உலகப் பண்பாட்டுப் பதிவேட்டில் சரஸ்வதி மகால் நூலகத்தைப் பதிவு செய்ய இந்திய அரசு பரிந்துரை செய்துள்ளது. எந்த நோக்கத்தில் இந்நூலகத்தை சரபோஜி மாமன்னர் நிறுவினாரோ அது தொடரவேண்டும். இங்குள்ள அறிவு பொக்கிஷங்கள் அனைவராலும் பயன்படுத்தப்பட வேண்டும்" என்றார்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தஞ்சாவூர்.*

❖ ❖ ❖

# இராமநாதபுரம் மாவட்ட பனைத் தொழிலாளர்களுக்கு ஊக்க உதவிகள்



இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை வெல்லம் விற்பனை கூட்டுறவுச் சங்கம் 09.07.1954–இல் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. 01.11.1993 முதல் இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு இவ்வமைப்பு இயங்கி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட பனை வெல்லம் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டுபாட்டின் கீழ் 117 பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள், 14 பனை ஓலை கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒரு பனந்தும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. மேற்படி சங்கங்களில் மொத்தம் 51 ஆயிரம் பனைத்தொழிலாளர்கள் மற்றும் பனை ஓலைத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள 6 கோடி பனை மரங்களில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 1.50 கோடி பனை மரங்கள் உள்ளன. இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை விவசாயத்திற்கு அடுத்தபடியாக பனைத்தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய வளமற்ற நிலவளம், நீர்வளம், மழைவளம் ஏதுமில்லா வறட்சியான பகுதியாகும். ஆனால் இங்குள்ள நிலத்தில் "கற்பகத்தருவாம்" பனை மரங்கள் மிகுந்த அளவில் வளர்ந்து செழித்தோங்கி உள்ளன. இம்மாவட்ட மக்கள் மனத்திடம் உள்ளவர்களாகத் திகழ்ந்த போதிலும் வேறு தொழில்கள் இல்லாமையால் வறுமைக் கோட்டிற்குட்பட்டு வாழ்கின்றனர். சுருங்கக் கூறின் இம்மாவட்ட மக்கள் பெரும் பகுதியினர் பனைத் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் ஏழைப் பனைத் தொழிலாளர்களுக்கு 2005–06 ஆம் ஆண்டு பகுதி – 2 திட்டத்தின் கீழ் 200 நபர்களுக்கு பதனீரை காய்ச்சி கருப்புக்கட்டி தயார் செய்வதற்கு ரூ. 1,500/– பெறுமான கொப்பரைகள், மரத்துடுப்புகள் மற்றும் கருப்புக்கட்டி மர அச்சுகள் போன்ற கருவிகள் இம்மாவட்ட பனை வெல்ல கூட்டுறவுச் சங்கம் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

சந்தையில் பனைப்பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வது, பனைத்தொழிலாளர்கள் ஒவ்வொரு வருடமும் பனைத்தொழில் செய்து பதனீர் இறக்கி கருப்புக்கட்டி உற்பத்தி செய்வதற்கும் பதனீரை இடம் பெயர்ந்து விற்பனை செய்வதற்கும் தமிழ்நாடு அரசு ஆணையின் பேரில் உரிமம் பெற்றுத் தரும் பணிகளை பனை வெல்லம் கூட்டுறவுச் சங்கம் செய்கிறது. 2006 ஜனவரி முதல் 31.08.2006 முடிய மொத்தம் 900 பனைத் தொழிலாளர்களுக்கு பதனீர் இறக்க உரிமம் வழங்கப் பட்டுள்ளது. இம்மாவட்ட ஏழைப் பனைத் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில்கள், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் மத்திய கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து குறைந்த வட்டியில் கடன் மற்றும் மானியம் பெற்றுத்தருவதும் இச்சங்கத்தின் பணியாக உள்ளது.

இச்சங்கத்தின் கீழ் சாயல்குடி, கீழக்கரை முதலிய இடங்களில் கொள்முதல் நிலையங்களும், மாவட்ட ஆட்சியர் வளாகம் மற்றும் இராமேஸ்வரத்தில் விற்பனை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

**– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் (பொ)**
இராமநாதபுரம் மாவட்டம்.

## தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் தலைவராக திரு. குமரி அனந்தன் அவர்களும், உறுப்பினர்களாக தி. கார்மேகம் (செட்டியார்பட்டி, விருதுநகர் மாவட்டம்) இரா. தா. தங்கமாங்கனி, (ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்) ஐ. அந்தோணி வியாகப்பன் என்ற துரைசாமி, (தென்காசி, விருதுநகர் மாவட்டம்) ஜெ. ஜெயக்குமார் ரூபன் (நாட்டார்குளம், தூத்துக்குடி மாவட்டம்) சி. வரதராஜ் (வையப் பமலை, நாமக்கல் மாவட்டம்) எஸ். சிவலிங்கம் (தாமரைக்குளம், ராமநாதபுரம் மாவட்டம்) ஆகியோரை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நியமனம் செய்துள்ளார்.



# வளரும் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

கலை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வரும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வளர்ந்துவரும் இளம் கலைஞர்களுக்கு வாய்ப்புகளை அளித்து வருகிறது. இளம் கலைஞர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டத்தின் வாயிலாக, வாய்ப்பாட்டு இசை, கருவியிசை, பரதநாட்டியம் ஆகிய கலைப்பிரிவுகளில் கலை நிகழ்ச்சிகள் வழங்கத்தக்க வகையில் கற்றுத் தேர்ந்த 15 முதல் 30 வயது வரையிலான கலைஞர்களைத் தெரிவு செய்து, அக்கலைஞர்களைக் கலை உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழகத்தில் நன்முறையில் செயற்பட்டு வரும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்குத் தேவையான நிதியுதவி வழங்கி, அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்திட ஏற்பாடுகளைச் செய்து தருகின்றது. இத்திட்டத்தின்படி கலைஞர் ஒருவருக்குத் தலா நான்கு கலை நிகழ்ச்சிகள் நடத்திட வாய்ப்பு வழங்கப்படுகின்றது.



ஆண்டுதோறும் நடைபெறும் இந்தத் திட்டத்தின் வாயிலாக வெளி உலகுக்குத் தெரியவந்த கலைஞர்கள்தான் நடிகை திருமதி. ரேவதி, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன், திரு. உன்னிகிருஷ்ணன். திரு. திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம், திரு. பி.கிருஷ்ண மூர்த்தி, திரு. சிக்கல் குருச்சரண், திருமதி.காயத்ரி கிரீஷ், திரு. நெய்வேலி சந்தானகோபாலன், திரு. சேஷம்பட்டி சிவலிங்கம், திருமதி. பார்வதி ரவி கண்டசாலா, திருமதி. ஊர்மிளா சத்தியநாராயணா, திருமதி. கவிதா ராமு போன்றோர். இத்திட்டச் செயலாக்கத்திற்காக தமிழக அரசு, ரூ.6. இலட்சம் தொகையினை இயல், இசை, நாடக மன்றத்திற்கு நல்கையாக வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் (2006–2007) திரு. திருப்பாம்புரம் சோ.சண்முகசுந்தரம், திரு. டி. எஸ். இலட்சப்பா பிள்ளை, திருமதி இலால்குடி விஜயலட்சுமி, திரு. வழுவூர் வி.ரவி ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் இசைத் துறையில் 70 கலைஞர்களை நேர்காணல் செய்து அவர்களில் பின்வரும் 28 கலைஞர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

குரலிசைக் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வி பி. சுசித்ரா, செல்வன் ஏ. ரோகித், செல்வன் ரா. ராகவேந்திரா, செல்வி ராகினி ஸ்ரீ.எம், செல்வி ஷ்ரத்தா மோகன், திருமதி ஞா. கற்பகம், கரூர் மாவட்டம் காகிதபுரத்தைச் சேர்ந்த செல்வி மோ. சாமுண்டீஸ்வரி.

வயலின் இசைக் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன் இரா. அமிர்தராஜ், செல்வன் ஜி.பத்ரிநாத், செல்வி ஸ்ரீவித்யா ஆர். எஸ். ஐயர்.

புல்லாங்குழல் இசைக் கலைஞரான சென்னையைச் சேர்ந்த செல்வன் சுருதி சாகர்.

மிருதங்கம் இசைக்கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன். டி. ஸ்ரீகாந்த், செல்வன் வி. பிரசாந்த், செல்வன் மாயவரம் சு.சிவா, செல்வன் இரா. சரண், செல்வன் ஆர். அரவிந்த், விருதுநகரைச் சேர்ந்த செல்வன் எம். இலட்சுமணன்.

கடம் வாசிக்கும் கலைஞர்களான சென்னையைச் சேர்ந்த செல்வன் ஜி. சந்திரசேகர சர்மா, திருவெறும்பூரைச் சேர்ந்த செல்வன் எஸ். கிருஷ்ணசாமி.

கஞ்சிரா வாசிக்கும் கலைஞரான சென்னையைச் சேர்ந்த செல்வன் ஜி. ஹரிகர சர்மா.

நாதசுரம் வாசிக்கும் கலைஞர்களான காஞ்சிபுரம் மாவட்டம் ஓரிக்கையைச் சேர்ந்த செல்வன் ஜி. பிரகாஷ், செல்வன் க. வரதன், சிதம்பரத்தைச் சேர்ந்த செல்விகள் மு.சுந்தரி – மு. சாவித்திரி, கும்பகோணத்தைச் சேர்ந்த செல்வன் க. சீனிவாசன் – செல்வன் க. சண்முகநாதன், பொள்ளாச்சியைச் சேர்ந்த செல்வன் ஆர். சக்தி சரவணன், திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூரைச் சேர்ந்த செல்வன் எஸ். ராமச்சந்திரன் ஆகியோர் ஆவர்.



மேலும், திருமதி. ஸ்ரீப்ரியா, திருமதி. நந்தினி ரமணி, திருமதி. அம்பிகா காமேஷ்வர், திருமதி. ராதிகா சுர்ஜித் ஆகிய வல்லுநர்கள் கொண்ட குழுவால் பரதநாட்டியத் துறையில் 43 கலைஞர்கள் நேர்காணல் செய்யப்பட்டு, அவர்களில் சென்னையைச் சேர்ந்த செல்வி பூர்ணிமா பாலசுப்பிரமணியன், செல்வி டி.எம்.ஸ்ரீதேவி, செல்வன் நிதீஷ்குமார், செல்வி எஸ். சுகன்யா கவுர், செல்வி ஸ்ரீநிதி சுந்தர், செல்வி மைதிலி பிரகாஷ், செல்வி எல். முருகசங்கரி, செல்வி வித்யாலட்சுமி சீனிவாசன் ஆகிய 8 கலைஞர்கள் தெரிவு செய்யப்பெற்றுள்ளனர்.

இத்தகவலை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர்–செயலாளர் கவிஞர் இளையபாரதி தெரிவித்துள்ளார். ■


செய்தி சொல்லும் சித்திரங்கள்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற மற்றும் உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் தமிழகம் முழுவதும் தீவிர வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்கள்.
ஸ்கேன்
சென்னை அரசு பொது மருத்துவமனையில் ரூ. 5.50 கோடியில் அதிநவீன ஸ்கேன் கருவி நிறுவப்படும்.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அறிவிப்பு.
குடும்ப வன்முறைத் தடுப்புச்சட்டம் அமலுக்கு வந்தது.



தமிழகம் முழுவதும் நல்ல மழை - அணைகள், ஏரிகள் நிரம்பின.



வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், தமிழகம் முழுதும் 9 ஆயிரம் கிராமங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.



மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அதிக நன்மைகளை தமிழக அரசு செய்து வருகிறது.

- மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்.


வாக்காளர் பட்டியல் மூலம் சரிபார்க்கப்பட்டு போலி குடிமைப்பொருள் அட்டைகளை ஒழிக்க திட்டம்.
- தமிழக அரசு பரிசீலனை.
தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்படுகிறது.
- தமிழக அரசு அறிவிப்பு
அரசு மருத்துவமனைகளில் பணியாற்றும் 1505 தற்காலிக மருத்துவர்கள் காலமுறை ஊதியத்தில் நியமனம்
- மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

# 2,636 செவிலியர்களுக்கு காலமுறை ஊதியம், 2,540 செவிலியர்களுக்கு தொகுப்பூதியம் உயர்வு

தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், தொடக்க சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் மாதம் 2,500 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 2,636 செவிலியர்களுக்கு, அவர்களது பணிமூப்பின் அடிப்படையில் ரூ.5,000–150–8,000 என்ற ஊதிய விகிதம் வழங்கப்படும். பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் மற்றும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின்கீழ், மாதம் 2,500 ரூபாய் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவரும் 2,540 செவிலியர்களின் தொகுப்பூதியத்தினை, முதலாண்டில் மாதம் 3,500 ரூபாய் எனவும், இரண்டாம் ஆண்டில் மாதம் 4,000 ரூபாய் எனவும், மூன்றாம் ஆண்டில் மாதம் 5,000 ரூபாய் எனவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கிடையே, மருத்துவமனைகளில் அவ்வப்பொழுது ஏற்படும் காலியிடங்களில் பணிமூப்பு அடிப்படையில் இவர்களை நியமனம் செய்து, முறையான ஊதிய விகிதம் வழங்கப்படும். இவை அனைத்தும் 1.9.2006 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# 742 பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் இரண்டாம் நிலை சுகாதார ஆய்வாளர்களாக நியமனம்

1990–91, 1991–92 ஆகிய ஆண்டுகளில் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்களாகப் பயிற்சி பெற்றும் பல ஆண்டுகளாக இரண்டாம் நிலை சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் நியமனம் செய்யப்படாமல் உள்ள 742 பணியாளர்களையும், வயது வரம்பினைத் தளர்த்தி, காலியாக உள்ள பணியிடங்களில் உடனடியாக இரண்டாம்நிலை சுகாதார ஆய்வாளர்களாக நியமனம் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்.

# உலக அதிசயங்களைக் கொண்ட கோ-ஆப்டெக்ஸின் 1 இலட்சத்து 64,492 வண்ண பட்டுச்சேலை

கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் கோவை மாவட்டம் சிறுமுகை புதூர் இராமலிங்க சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து, பாவில் 164 வண்ணங்களையும், ஊடையில் 1003 வண்ணங்களையும் இணைத்து ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 492 வண்ணங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய ரக பட்டுச் சேலையினை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 22.11.2006 அன்று, தலைமைச் செயலகத்தில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி, அந்தப் புடவைக்கு "மயில்தோகை பட்டுச்சேலை" எனப் பெயரிட்டுள்ளார்.



பட்டுச்சேலை தயார் செய்த சிறுமுகைபுதூர் ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஆர். ராதாகிருஷ்ணன், மேலாளர், திரு. வி. திருமூர்த்தி, நெசவாளர் – திரு. எம். தர்மராஜ், வடிவமைப்பாளர் திரு. பி. சங்கரவேல் பாண்டியன், தனி அலுவலர் ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டாடை அணிவித்து சிறப்புச் செய்தார்கள்.

ஐந்து ஜாக்கார்டு பெட்டிகள் மற்றும் 11,531 ஜாக்கார்டு அட்டைகள் உதவியுடன் உலக அதிசயங்களான எகிப்து பிரமிடு, பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரம், பாரீஸ் நகரின் ஈபிள் டவர், இந்தியாவின் தாஜ்மகால், சீனப் பெருஞ்சுவர், எம்பயர் எஸ்டேட் பில்டிங், பாபிலோன் தொங்கும் தோட்டம் ஆகியவை இப்பட்டுச் சேலையின் பார்டரில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல், எட்டாவது உலக அதிசயப் பட்டியலில் உள்ள மதுரை

மீனாட்சி அம்மன் கோவிலின் அழகிய தோற்றமும், அதன் மீது சூரிய ஒளிக்கதிர் மின்னும் வகையிலும் முந்தானையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, முந்தானையில் யாளி, அன்னப்பறவை, கோவில்தேர் வடிவமைப்புகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பட்டுச்சேலை 15 நெசவாளர்களின் உழைப்பில் 25 நாட்களில் நெய்யப்பட்டது. பாவில் பயன்படுத்தப்பட்டுள்ள 164வண்ணங்களும், ஊடையில் உள்ள 1003 வண்ணங்களும் தனித்தனியான வண்ணங்கள்தான் என்று மத்திய அரசுக்குச் சொந்தமான டெக்ஸ்டைல்ஸ் குழு பரிசோதித்து உறுதிசெய்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த உலக அதிசய சாதனைப் பட்டுப் புடவை ஒன்றின் விற்பனை விலை ரூ. 40,000/– ஆகும். பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவை குறித்து வழங்கும் ஆர்டரின் பேரில், 45 நாட்களில் இந்தப் பட்டுப் புடவை நெசவு செய்து வழங்கப்படும். உலக அளவில் புகழ்பெறுகின்ற வகையில் நெய்யப்பட்ட இந்தப் பட்டுச் சேலை கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.



இந்தச் சேலை குறித்து மேலும் சில தகவல்களை கோ–ஆப்டெக்ஸ் நிறுவன தனி அலுவலர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப.அவர்கள் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"தமிழ்நாடு நெசவாளர்களின் தனித்திறமைக்கு இந்தப் பட்டுச் சேலை ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது. நம் நெசவாளர்கள் பட்டுப்பாரம்பரியம் மிக்கவர்கள். இப்பொழுது பலர் இந்தப் பட்டுச்சேலையை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

உலக அளவிலிருந்தும் ஆர்டர்கள் பெற்று நெய்து தர கோ–ஆப்டெக்ஸ் தயாராக உள்ளது. இணைய தளத்தின் மூலம் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் மின்னஞ்சல் மூலம் ஆர்டர்கள் தரலாம்.

கோ – ஆப்டெக்ஸ் பட்டுதான், நாட்டிலேயே சுத்தமான, தரமான பட்டு ஆகும். ஜரிகையின் தரத்திலும் நாங்கள் எந்தவித சமரசமும் செய்து கொள்வதில்லை. ஒவ்வொரு சேலையிலும் பட்டு மற்றும் ஜரிகையின் எடை எவ்வளவு என எழுதப்பட்டிருக்கும்.

இந்த மயில்தோகை பட்டுச்சேலையில் 500 கிராம் பட்டும், 300 கிராம் ஜரிகையும் உள்ளது. இச்சேலையின் வண்ணத்தை 28 தலைசிறந்த பட்டு வணிகர்களும் சோதித்து சான்றளித்துள்ளனர்.

தங்களுக்கு பிடித்த படங்கள் பொறித்து சேலை வேண்டும் என யார் விரும்பினாலும் அவர்களுக்கும் இந்த மயில் தோகை பட்டுச் சேலையில் அவர்கள் விரும்பும் படம் பொறித்து தயாரித்து தரப்படும். வாடிக்கையாளர்கள் தாங்கள் வைத்திருக்கும் தங்களது திருமணப்பட்டுச் சேலையின் வடிவமைப்பைப் போலவே சேலை வேண்டும், என எதிர்பார்ப்பவர்களும் அதே போல புதிய சேலைகளை நெய்து தரவும் தயாராக உள்ளோம். அந்நாளையபட்டுச் சேலைகளை கோ– ஆப்டெக்ஸ்சில் அளித்தால் அந்த மாதிரியை பிரதி எடுத்துக் கொண்டு அவர்களுக்கு பரிசளிக்கவும் இருக்கின்றோம்" என்று அவர் கூறினார்.

தமிழக அரசின் நிறைந்த ஊக்கத்தினால் கோ–ஆப்டெக்ஸ் சாதனைகளைக் குவித்து வருகிறது. தமிழக நெசவாளர்களின் உயரிய கலை வெளிப்பாட்டில் உருப்பெற்றுள்ள இந்தப் பட்டுச்சேலை உலக சாதனை படைத்து கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றால் அது வியப்பில்லை. □

# அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் ஆங்கில மொழித்திறனை வளர்க்கும் சான்றிதழ் கல்வித் திட்டம்

தமிழகத்தில் உள்ள அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் Business English Certificate (B.E.C.) என்னும் சான்றிதழ் கல்வி திட்டத்தினை அறிமுகப் படுத்துவதற்கு 7.11.2006 அன்று, தமிழக அரசுக்கும், பிரிட்டிஷ் கவுன்சில், சென்னை ஆகியோருக்கிடையே ஒப்பந்தம் கையெழுத் தானது. தமிழக அரசின் கல்லூரிக் கல்வி இயக்குநர் முனைவர், சு. மணி மற்றும் சென்னை பிரிட்டிஷ் கவுன்சிலின் முதன்மைச் செயலாளர் திரு.கிரிஸ் கிப்சன் ஆகிய இருவரும் தமிழக அரசின் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி அவர்கள் மற்றும் உயர் கல்வித் துறை செயலர் க. கனேசன், இ.ஆ.ப, ஆகியோர் முன்னிலையில் இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்கள் பயனடைவார்கள். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் தேர்விற்கு இந்த சான்றிதழ் படிப்பின் மூலமாக மாணவர்களைத் தயார்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான நோக்கமாகும். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வழங்கும் சான்றிதழ் மிகப் பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதால் இச்சான்றிதழ் படிப்பின் மூலம் தமிழக மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு பெருகும். தமிழகத்தில் படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய படிப்புக்கான பாடங்களை படிப்பதற்கான கல்லூரி நேரங்கள் போக பிற நேரத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலமாக மாணவர்கள் தங்களுடைய அறிவுத் திறனை பிறருக்கு வெளிப்படுத்த இந்தப் படிப்பு ஒரு கருவியாக அமையும். வேலைவாய்ப்பு பெறுவதற்கான நேர்முகத் தேர்வுகளில் மிகச் சிறப்பாக பதில் அளிக்கவும், இச்சான்றிதழ் மூலம் பெறும் ஆங்கிலத் திறன் பயனுள்ளதாக இருக்கும். தமிழகத்தில், மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை அதிகரிப் பதற்கும், அவர்களுக்கான பன்னாட்டு நிறுவனங்களின் வேலைவாய்ப்பினை உறுதிசெய்வதற்கும், இச்சான்றிதழ் படிப்பு பயனுள்ளதாக இருக்கும். மாநில கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் செயலாக்கப் படுகின்ற இத்திட்டம், அரசுக் கல்லூரிகள், அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ – மாணவிகளும் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் இத்திட்டத்தில் சேரலாம். பன்னாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் மிக அதிக அளவில் முதலீடு செய்து கொண்டு இருக்கின்ற இச்சூழ்நிலையில் தமிழகத்திலுள்ள அனைத்து மாணவ மாணவிகளும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான திறனை மாணவ – மாணவிகளுக்கு வழங்கு வதற்கும், இச்சான்றிதழ் படிப்பு பயனுள்ள வகையில் அமையும். ■





## டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்

# சென்னை மாநகராட்சிக்கு ரூ.7.32 கோடி ஒதுக்கீடு!

## 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதிஉதவி

மகப்பேறு காலத்தில் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் வருமான இழப்பினை ஈடு செய்யவும், கருவுற்ற காலத்தில் ஊட்டச் சத்துள்ள உணவை உட்கொண்டு எடை குறைவில்லாத குழந்தைகளை ஈன்றெடுக்கவும், இரத்த சோகை ஏற்படுவதைத் தடுக்கவும் உதவக்கூடிய வகையில் தமிழக அரசின் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேறு காலத்திற்கு முன்னர் 3 மாதங்களுக்கும், பின்னர் 3 மாதங்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 6,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளாகிய 15.9.2006 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தில் இதுவரை 1 இலட்சத்து 21 ஆயிரத்து 985 கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதிக்குள் 2 இலட்சத்து 11 ஆயிரம் கர்ப்பிணிப் பெண்களுக்கு நிதிஉதவி வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இத்திட்டத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகருக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் 12,206 ஏழை கர்ப்பிணிப் பெண்கள் பயன்பெறும் வகையில் 7 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் இருந்து, தமிழக முதலமைச்சர் அவர்கள் 22.11.2006 அன்று, தலைமைச் செயலகத்தில் சென்னை மாநகரைச் சேர்ந்த 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு 1,000 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்கினார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே. எஸ். ஆர். இராமச்சந்திரன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் 11.11.2006 அன்று திருச்சிராப்பள்ளி பெரியார் மருந்தியல் மகளிர் கல்லூரியின் புதிய நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.






14.11.2006 அன்று, சென்னையில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையின் சார்பில், நடைபெற்ற 39–ஆவது தேசிய நூலக வார விழாவில் சிறந்த நூலகர்களுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பதக்கங்களை அணிவித்து, சான்றிதழ் வழங்கினார். உடன் மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் உள்ளார்.

மதுரை மாவட்டம் சக்கிமங்கலம் சமத்துவபுரத்தில் 11.11.2006 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன் அவர்கள் உள்ளார்.





மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்,
14.11.2006 அன்று முன்னாள் இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின்
118ஆவது பிறந்தநாளையொட்டி அன்னாரது திருவுருவச்சிலைக்கு
மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்,
மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர்.




14.11.2006 அன்று சென்னையில் 53ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தொடுதிரைக் கணினியைத் துவக்கி வைத்தார். உடன் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் உள்ளனர்.



# மதிப்புக் கூட்டு வரியின் சிறப்பு அம்சங்கள்

மாண்புமிகு
வணிகவரித்துறை அமைச்சர்
திரு. **எஸ்.என்.எம். உபயதுல்லா**
அவர்கள் 15.11.2006 அன்று
கூறியிருப்பதாவது:

## 2007 ஜனவரி 1 முதல் மதிப்புக் கூட்டுவரி அமல்

1. சட்டமன்ற வரவு செலவு, கூட்டத்தில் அறிவித்தபடி தமிழகத்தில் மதிப்புக் கூட்டு வரி, 1.1.2007 முதல் அமல் படுத்தப்படும். இதற்கான, நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இதன்படி, கடந்த அக்டோபர் 28ஆம் தேதி தமிழக அரசின் அரசிதழில், (Gazette), மதிப்புக் கூட்டு வரி தொடர்பான சட்டமுன்வடிவு முறைப்படி வெளியிடப்பட்டுள்ளது. இது தற்போது, தமிழக அரசின் வணிகவரித் துறையின், இணையதளத்திலும் (www.tnsalestax.com) சேர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள வணிகப் பெருமக்கள் மற்றும் வணிகர் சங்கங்கள் இந்த சட்ட முன்வடிவினை ஆராய்ந்து இதில் ஏதேனும் சந்தேகங்கள், குறிப்புகள், தெளிவுரைகள் தேவை இருப்பின் அதனைத் துறைத் தலைமையிடத்தில் தொடர்புடைய அதிகாரிகளிடம் (தொலைபேசி, பேக்ஸ் அல்லது இ–மெயில் மூலம்) தெரிவித்தால் அவை அரசால் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்து கொள்கிறேன்.

## வரிசெலுத்துவோர் அடையாள எண்

2. விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு செய்து 2006–2007ஆம் ஆண்டுக்குப் பதிவினை புதுப்பித்துக் கொண்ட மற்றும் இந்த ஆண்டில் புதிதாகப் பதிவு பெற்ற அனைத்து வணிகர் களுக்கும், புதிய பதினொரு இலக்கம் கொண்ட வரிசெலுத்துவோர் அடையாள எண் (TIN - Tax payer Identification Number) வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தப் புதிய எண்ணைப் பெறுவதற்கான முறையை எளிமைப்படுத்தும் வகையில் வணிகவரித்துறை, தனது இணையதளம் மூலம், இந்த எண்ணைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த முறைப்படி ஒவ்வொரு வணிகரும் துறையினுடைய இணையதளத்தை (www.tnsalestax.com) அணுகி GET TIN - என்ற பொத்தானை அழுத்தி, தங்களுடைய விற்பனைப் பதிவு எண்ணை, நுழைவு (enter) செய்தால் TIN எண் வழங்கப்படும். இதனைத் தாமே அச்சில் நகல் எடுத்துக் கொள்ளலாம். இந்த முறையில் ஏதேனும் சிக்கல் ஏற்படுமானால், தொடர்புடைய வணிகர்கள் தங்களுடைய 2006–2007–க்குப் பதிவு புதுப்பிக்கப்பட்ட விவரங்களுடன், பதிவு அதிகாரி அலுவலரிடமோ (அல்லது) தொடர்புடைய உதவி ஆணையர்/துணை ஆணையரிடமோ, நேரில் அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நிருவாக வசதியினைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய எண்ணை, 1.1.2007 முதல் உள்ள வரி தொடர்பான அனைத்து ஆவணங்களிலும் வணிகர்கள், வணிக நிறுவனங்கள் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



"மதிப்புக் கூட்டு வரி முறையில் வரி மீது வரி விதிக்கும் முறை இருக்காது. இதனால் பொருள்களின் மீதுள்ள வரிச்சுமை (cascading effect) நீக்கப்படுகிறது."

3. மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தியபின், தற்போது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்று நடைமுறையில் உள்ள அனைத்து நிறுவனங்களும் புதிய சட்டத்தின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இதனை எளிதாக்கவும், அனைத்து வணிகர்களும் ஒரே சமயத்தில் மனு அளிப்பதைத் தவிர்க்கவும், துறை பதிவுச் சான்றிதழ் அளிப்பதைச் சீர்செய்யவும், 15.11.2006லிருந்தே வணிகர்கள் இதற்கான மனுவைத் தொடர்புடைய பதிவு அலுவலரிடம் அளிக்க அரசு வழி வகை செய்துள்ளது. இதன்படி துறையின் இணையதளத்தை அணுகி அதற்குரிய படிவத்தைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து 2 புகைப்பட நகல்களுடன் இணைத்து, போதுமான அஞ்சல் வில்லை ஒட்டிய சுய முகவரியிட்ட உரையையும் சேர்த்து, பதிவு அலுவலருக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த மனுக்களைப் பெற்று பரிசீலித்துப் புதிய சான்றிதழ்கள் மதிப்புக் கூட்டுவரி அமலுக்கு வந்த 15 நாட்களுக்குள் வணிகர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் பதிவு செய்த வணிகர்கள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய எந்தவித கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

### சிறப்பு அம்சங்கள்

- புதிய பொருளாதாரக் கொள்கையை செயற்படுத்தவும், வெளிநாட்டுச் சந்தையில் இந்திய ஏற்றுமதிகளை அதிகப்படுத்தவும், விற்பனை வரி விதிப்பு முறையை சுயவரிவிதிப்பு முறையாக எளிமைப்படுத்தவும், அனைத்து மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டது.
- தற்பொழுது பிரேசில், ஐரோப்பா, சீனா, இலங்கை உட்பட 130க்கு மேற்பட்ட நாடுகளில் மதிப்புக் கூட்டு வரிமுறை நடைமுறையில் உள்ளது. இம்முறை எளிமையானது, வெளிப்படையானது மற்றும் சுலபமானது.
- இந்தியாவில் 2003–04இல் அரியானாவிலும், 2005–06ல் 24 மாநிலங்களிலும், 1.4.2006 முதல் மேலும் 4 மாநிலங்களிலும் மதிப்புக் கூட்டு வரி முறை செயல்படுத்தப்படுகிறது.
- பாண்டிச்சேரி, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டும் செயற்படுத்தவில்லை. தமிழ்நாட்டில் வரும் 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி முறை நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.
- மதிப்புக் கூட்டு வரி முறையில் வரி மீது வரி விதிக்கும் முறை இருக்காது. இதனால் பொருள்களின் மீதுள்ள வரிச்சுமை (cascading effect) நீக்கப்படுகிறது.
- மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும்பொழுது, தற்பொழுது விதிக்கப்படும் கூடுதல் வரி, உபரி வரி, மறுவிற்பனை வரி ஆகியவைகள் நீக்கப்படும்.
- தற்பொழுது நடைமுறையிலுள்ள விற்பனை வரிச் சட்டத்தில் பொருட்களின் விற்பனைக்கு பல்வேறு வரி விகிதங்களில் வரி விதிக்கப்படுகிறது. மதிப்புக் கூட்டு வரி முறையில் 1 சதவிகிதம், 4 சதவிகிதம் மற்றும் 12.5 சதவிகித வரி விகிதங்களில் மட்டும் வரி விதிக்கப்படும். தங்கம், வெள்ளி மற்றும் அதன் நகைகளுக்கு 1 சதவிகித சிறப்பு வரியும், சில பொருளினங்களுக்கு 4 சதவிகித வரியும், ஏனைய அனைத்து பொருட்களுக்கும் 12.5 சதவிகித வரியும் விதிக்கப்படும். பெட்ரோல், டீசல், மதுவகைகள் போன்ற பொருட்களுக்கு மதிப்புக் கூட்டு வரி முறையில் வரிவிதிப்பில்லாமல், சிறப்பினமாகக் கருதி, 20 சதவிகிதத்திற்கு மேல் வரி விதிக்கப்படும்.
- செலுத்தப்பட்ட நுழைவு வரி, பொருளின் விற்பனைக்குச் செலுத்தப்படும் வரியில் முழுவதுமாக கழித்துக் கொள்ளப்படும்.
- உள்மாநிலத்தில் கொள்முதலுக்குச் செலுத்தப்படும் வரி, அப்பொருளின் விற்பனையின் போது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்ளப்படும். ஒரு மாதத்தில்

அதிகமாக கொள்முதல் செய்கிறபோது செலுத்தப்பட்ட வரி, அடுத்த மாதத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதிகம் உள்ள தொகை அடுத்த ஆண்டு இறுதிவரை கொண்டு செல்லப்பட்டு, தேவையெனில் வணிகர்களுக்குத் திருப்பியளிக்கப்படும்.

- மூலதனப் பொருட்கள், தொழிலக உட்பொருட்கள் (Industrial input) ஆகியவற்றிற்கு 4 சதவிகித வரி விதிக்கப்படும். உற்பத்தியாளர்கள் மூலதனப் பொருட்கள் கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யும்போது 36 மாதங்களில் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரிக் கழிவு செய்து கொள்ளலாம்.
- பதிவு பெற்ற வணிகர்கள் வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்யும்பொழுது கொள்முதல் செய்தபோது செலுத்திய வரியை 4 சதவிகிதம் வரை வரிக் கழிவு செய்து கொள்ளலாம். அதற்கும் மேலாக கொள்முதல் செய்த போது செலுத்திய வரி அதிகமாக இருந்தால், அவ்வரியை வேறு பொருட்கள் விற்கும் பொழுது வரிக் கழிவு செய்து கொள்ளலாம். இச்சலுகை **"சி"** படிவம் பெற்று விற்பனை செய்யும் வணிகர்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- வெளிமாநில கிளைகளுக்கு மற்றும் முகவர்களுக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு கொள்முதல் செய்தபோது செலுத்திய வரி 4 சதவிகிதத்திற்கு மேற்பட்டுள்ள வரியை மட்டும் கழிவு செய்து கொள்ளலாம். இச்சலுகை **"எப்"** படிவம் பெற்று வணிகம் செய்யும் வணிகர்களுக்கு மட்டுமே பொருந்தும்.
- ஏற்றுமதியாளர்களுக்கு செய்யப்படும் விற்பனை, சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு செய்யப்படும் விற்பனை மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் பொழுது, அந்நிறுவனங்கள் அத்தகைய பொருட்கள் கொள்முதல் செய்யும் பொழுது செலுத்திய வரியினை சில ஆவணங்கள் அளித்து மூன்று மாத காலத்திற்குள் திரும்பப் பெற்றுக் கொள்ள விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.
- தற்பொழுது தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் வரி தள்ளிவைப்புத் திட்டத்தில் உள்ள நிறுவனங்கள் மீதமுள்ள காலத்திற்கும், தொகைக்கும் அப்பயனை அனுபவித்துக் கொள்ளலாம். வரி தள்ளுபடி செய்யும் திட்டத்தில் உள்ள நிறுவனங்கள் மதிப்புக் கூடுதலின் தொடர்ச்சி அறுந்துவிடாமல் இருக்கும் வகையில் அவை வரி தள்ளிவைப்புத் திட்டத்தின் கீழ் வரி செலுத்த அனுமதிக்கப்படுவார்கள்.
- தண்டம் விதித்தல் தொடர்பான பிரிவுகள் மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தில் எளிமையாக்கப்பட்டுள்ளது.
- மதிப்புக் கூடுதல் வரி முறையை அமல்படுத்தும்பொழுது, ஆரம்ப இருப்பில் இருந்த பொருட்களுக்கு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தில் கொள்முதல் செய்த பொழுது செலுத்திய வரியை வரிக்கழிவாக செய்து கொள்ள விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.
- மதிப்புக் கூட்டு வரி முறையில் வணிகராகப் பதிவு செய்து கொள்வதற்கு உள்மாநிலத்திலேயே பொருட்களை கொள்முதல் செய்து, உள்மாநிலத்திலேயே பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களுக்கு தற்பொழுதுள்ள ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ.3 இலட்சம் வரம்பிலிருந்து ரூ.10 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதர வணிகர்களுக்கு ஆண்டு விற்பனைத் தொகை வரம்பு ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

> *"மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்படும் பொழுது, தற்பொழுது விதிக்கப்படும் கூடுதல் வரி, உபரி வரி, மறுவிற்பனை வரி ஆகியவைகள் நீக்கப்படும்."*

- சிறு வணிகர்களுக்குப் பயனளிக்கும் வகையில், உள்மாநிலத்தில் பொருட்களை கொள்முதல் செய்து உள்மாநிலத்தில் பொருட்களை விற்பனை செய்யும்

வணிகர்களின் ஆண்டு மொத்த விற்பனைத் தொகை ரூ. 50 இலட்சத்திற்கு மிகாமல் இருந்தால், அவ்வணிகர்கள் தங்கள் விற்பனைத் தொகைக்கு ஒரு சதவிகிதத்திற்கு மிகாமல் வரி செலுத்திட வகை செய்யும் இணக்க வரிவிதிப்புத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

➪ வணிகர்கள் தமக்குத்தாமே சுயவரிவிதிப்பு செய்து கொள்ளும் திட்டம் மதிப்புக் கூட்டு வரி முறையின் சிறப்பு அம்சமாக அனைத்து வணிகர்களுக்கும் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி வணிகர்கள் மாதாந்திர நமூனாக்களை உரிய படிவத்தில், உரிய வரித் தொகையுடன் செலுத்துவது போதுமானது. தற்பொழுது நடைமுறையிலுள்ள வரிவிதிப்பு அலுவலர்களால் ஒவ்வொரு ஆண்டும் கணக்கு சரிபார்க்கும் முறை களையப்படும். ஒவ்வொரு ஆண்டும் அறிவியல் முறையில் வணிக வரி ஆணையர் மொத்தம் பதிவு பெற்ற வணிகர்களில் 20 சதவிகிதத்திற்கு மிகாத எண்ணிக்கையில் வணிகர்களை தணிக்கைக்கு உட்படுத்த தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்வணிகர்கள் பற்றிய விவரம் வணிக வரித்துறையின் இணைய தளத்தில் வெளியிடப்படும். மேலும் வரிவிதிப்பு அலுவலகங்களின் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்படும். அத்தணிக்கையின் முறையும் வெளிப்படையான தன்மையைக் கொண்டதாக அமையும்.

➪ மதிப்புக் கூட்டு வரி அமல்படுத்தப்பட்டால் பல வகையான கணக்குகளை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தவறான எண்ணம் வணிகர்களின் மத்தியில் நிலவி வருகிறது. மதிப்புக் கூட்டு வரியில் கணக்குகள் வைத்துக் கொள்ளும் முறை எளிதாக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் கொள்முதல் செய்கின்றபோது செலுத்திய வரியை விற்பனை செய்கின்றபோது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்ளும் முறையில் வரி நிர்ணயம் செய்யப்படுவதால் வணிகர்கள் கொள்முதல் மற்றும் விற்பனை கணக்குகளை வைத்துக் கொண்டால் போதுமானது.

➪ உற்பத்தியாளர்கள் உள்மாநிலக் கொள்முதலின் போது செலுத்திய வரியை கழித்துக் கொள்வதாலும், ஒரே சீரான வரிவிதிப்பு அனைத்து மாநிலங்களிலும் மேற்கொள்ளப்படுவதாலும், வெளி மாநிலச் சந்தையில் பொருட்களை விற்பது இலகுவாகும்.

➪ வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வணிகர்கள் உள்மாநிலக் கொள்முதலின்போது செலுத்திய வரியை அரசிடமிருந்து திரும்பப் பெற வழிவகை செய்யப்பட்டிருப்பதால், ஏற்றுமதிச் சந்தையில் போட்டியிட எளிதாகும்.

■ ■ ■





# அண்ணா போற்றிய பெருமக்கள்

- நூல் விற்பனைக்கு

தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையால் 1988 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட "அண்ணா போற்றிய பெருமக்கள் (தொகுதி-1)" என்ற நூல் விற்பனைக்கு உள்ளது.

இந்நூல் மிகக் குறைந்த பிரதிகளே உள்ளன. 456 பக்கங்கள் கொண்ட இந்நூல் ரூ.46 மட்டுமே.

தமிழரசு அலுவலகம், சென்னை, அண்ணா நினைவிடத்திலுள்ள அண்ணா நினைவு நூலகம் மற்றும் விற்பனை நிலையம், காஞ்சிபுரம், அண்ணா நினைவு இல்லம் மற்றும் சென்னை, கலைவானர் அரங்கின் பின்புறமுள்ள மாநிலச் செய்தி நிலையம் ஆகிய இடங்களில் இந்நூல் விற்பனைக்குக் கிடைக்கும்.

இந்நூல், சான்றோர்கள், பாவலர்கள், காவலர்கள், இந்திய விடுதலை இயக்கப் பெருமக்கள், திராவிட இயக்கப் பெருமக்கள், சமூக நலப் பெருமக்கள், அரசியல் மற்றும் கலையுலகப் பெருமக்கள் ஆகியோர் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்களின் அரிய கருத்துக்கள் அடங்கிய மிகச்சிறந்த தொகுப்பாகும். ■

# அன்று இலவச வீடு

# இன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட அறிவிப்புகள் ஒவ்வொன்றையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்றி அதன் பயனை பொதுமக்கள் அடையும் வண்ணம் ஆணைகளாக வெளியிட்டு நடைமுறைப்படுத்தி வருகிறார். அந்த அடிப்படையில் 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, ரூபாய் 7,000 கோடி அளவிற்கு கூட்டுறவு கடன் தள்ளுபடி என்ற மிகப்பெரிய சாதனைகளை செய்து முடித்துள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் ஏழை எளிய மக்களுக்கு இலவச நிலம் மற்றும் வறுமைகோட்டிற்கு கீழ்வாழும் மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின்



பிறந்த நாளில் அறிமுகப்படுத்தப்பட்டு, கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவாமூர், பள்ளிப்பட்டு, கழுதூர், ஐவதுக்குடி ஆகிய நான்கு சமத்துவ புரங்களில் வாழும் குடும்பங்களுக்கு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் அவர்களால் 16.9.06 அன்று 396 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இலவச வண்ணத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

திருவாமூரில் உள்ள பெரியார் சமத்துவபுரத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெற்ற திரு. என். சீனுவாசன் (வயது 77) அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து இதுகுறித்து கேட்டபோது அவர் நம்மிடம் தெரிவித்ததாவது :

நான் எனது மனைவி அம்புஜம் (65) மற்றும் மகன் வரதராஜன் (27), மகள் ஆண்டாள் (21) ஆகியோருடன் இந்த சமத்துவபுரத்தில் கதவு எண்.86, சூரியகாந்தி தெருவில் வசித்து வருகிறேன். சமத்துவபுரத்தில் எந்த வீட்டிலும் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. இதனால் தினந்தோறும் நிகழும் நிகழ்வுகள் மற்றும் உலக நடப்புகள், உள்ளூர் செய்திகள், பொழுது போக்கு அம்சமான நாடகங்கள் உள்ளிட்ட எதுவும் அறியவோ, பார்க்கவோ இயலவில்லை. மேலும், எந்த பொதுவான விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்றாலும் 15 கிமீ. தொலைவில் உள்ள பண்ருட்டி நகருக்குதான் செல்ல வேண்டும். மேலும், இங்கு வசிக்கும் மக்கள் பெரும்பாலும் கூலிவேலை செய்பவர்களாகவே இருக்கிறார்கள். என் போன்ற ஓரளவு படித்தவர்கள் வீட்டில் முடங்கி கிடக்க முடியாமலும், நாட்டு நடப்புகளை அறிய முடியாமலும் தவித்துக் கொண்டிருந்தேன்.

செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சமத்துவபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு முதல்கட்டமாக வழங்கப்படும் என



அறிவிக்கப்பட்டதையும், செவி வழியாகவே என்னால் அறிய முடிந்தது. இதை ஒரு கணம் யோசித்துப் பார்க்கையில் முதன் முதலாக சமத்துவபுரம் மக்கள் பயனடைய வேண்டுமென முதல்வர் கலைஞர் அறிவித்துள்ளதை அறியும்போது அவர் சமத்துவபுரம் மக்களை மேம்படுத்த வேண்டும், எல்லா வசதிகளும் இந்த சமத்துவபுரம் மக்கள் பெற வேண்டும் என்ற அடிப்படையில் இங்கு சமுதாயக் கூடம், கிளை நூலகம், வணிக வளாகங்கள், சாலை வசதிகள், குடிநீர் வசதிகள் உள்ளிட்டவற்றை செய்து தந்திருக்கிறார். எனக்கு வழங்கப்பட்ட இந்த தொலைக்காட்சிப் பெட்டியின் மூலம் காலையிலேயே என்னால் அதுவரை நடந்துள்ள அனைத்து செய்திகளையும் அறிய முடிகிறது. அதே சமயம் மாலை நேரங்களில் ஓய்வாக இருக்கும்போது பிற பொழுது போக்கு அம்சங்களையும் பார்க்க வாய்ப்பாக அமைந்துள்ளது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி பெற்றதன் மூலம் தினசரி நாளிதழ்களைப் படிக்க வேண்டிய அவசியமோ, செவி வழியாக செய்திகள் பெற வேண்டிய அவசியமோ இல்லாமல் நேரிடையாகவே என்னால் அறிய முடிகிறது.

கதவு எண். 83ல் வசித்து வரும் திரு. கே. நாகப்பன் (வயது 40) அவரது மனைவி சாந்தி (வயது 36) ஆகியோரிடம் தொலைக்காட்சிப் பெட்டியின் பயன் குறித்து கேட்டோம்.

திரு. நாகப்பன் நம்மிடம், "நாங்கள் நான்கு குழந்தைகளுடன் சமத்துவபுரத்தில் வசித்து வருகிறோம். நான் தினமும் கூலி வேலைக்கு சென்று மாலை 5 மணியளவில் வீடு திரும்புவேன். அன்றாட செய்திகள் தெரிந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பேன். ஆனால் அதற்கான வசதியில்லை. எந்தவிதமான செய்திப் பரிமாற்றங்களுக்கும் இடமின்றி தனித்து விடப்பட்டதை போலவும், உலக நடப்புகள் ஏதும் தெரியாமல் ஓர் இருட்டில் இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும். சமத்துவபுரத்தில் வாழும் குடும்பங்களுக்கு 16.9.06ல் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் இங்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்பட உள்ளதை இரண்டு நாட்களுக்கு முன்பு அறிந்த நிலையில் அன்றைய தினமே என் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி இருப்பதை போன்ற உணர்வு ஏற்பட்டது. எங்களை பொறுத்தளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எங்களுக்கு குடியிருக்க இலவசமாக வீடு கட்டிக் கொடுத்தார். அந்த இலவச வீட்டில் வைத்து அழகு பார்க்க இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியையும் வழங்கி உள்ளார். இதற்காக நாங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியை செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

*– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
*கடலூர்.*

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சீர்மிகு புதிய திட்டம்

# "அறிவியல் ஆனந்தம்"

அறிவியல் பாடம் என்பது குழந்தைகளின் உள்ளங்களில் ஒளிந்திருக்கும் விஞ்ஞானிகளை வெளிக் கொண்டு வரவும், புதிய புதிய கண்டுபிடிப்புகளை அவர்கள் உருவாக்க ஊக்கம் அளிப்பதாகவும் அமைந்திருக்கும் ஒரு பாடமாகும். ஆனால் இன்றைய சூழ்நிலையில் பள்ளிக் குழந்தைகள் அறிவியலை பாடப்புத்தகத்தில் உள்ள தகவல்களாக மட்டுமே பார்க்கிறார்கள். அவர்கள் பள்ளியில் தாங்கள் கற்பதையும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் இணைத்துப் பார்ப்பதில்லை. இதனால், அறிவியல் அவர்களுக்கு வாழ்க்கைக்கு தொடர்பு இல்லாததாகவும், விருப்பமில்லாததாகவும் இருக்கிறது. இந்த இடைவெளியை முற்றிலுமாக நீக்கி, குழந்தைகள் அறிவியல் கருத்துகளைப் பற்றி சிந்திப்பதற்கும், வாழ்க்கையுடன் தொடர்பு உடையதாக மாற்றிடவும், "அறிவியல் ஆனந்தம்" என்னும் பெயரில் சீர்மிகும் திட்டம் ஒன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டுவரும் அனைவருக்கும் கல்வித் திட்டம், AID INDIA நிறுவனமும் இணைந்து இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக 4 மாதங்களில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் அனைத்துக் குழந்தைகளும் வெவ்வேறு அறிவியல் தத்துவங்களை விளக்கும் 35 அறிவியல் சோதனைகளை கற்றுக் கொள்வார்கள். இச்சோதனைகளுக்கு விலை குறைந்த எளிதில் கிடைக்கக் கூடிய பொருட்களை உபயோகிப்பார்கள். எளிய பொருட்களை வைத்து வியக்கத்தக்க சோதனைகளை எவ்வாறு செய்யலாம் என்று கற்றுக் கொள்வார்கள். முக்கியமாக, குழந்தைகள் குழுக்களாக அமர்ந்து சோதனைக்கான விளக்கத்தை விவாதித்து, அந்த அறிவியல் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு தங்களது பிஞ்சு மனங்களில் பசுமரத்தாணியாக பதிய வைத்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள் வாரத்திற்கு இரண்டு முறை வகுப்புகள் எடுப்பார்கள். நான்கு மாத முடிவில், குழந்தைகள் தாங்கள் கற்றுக் கொண்ட அறிவியல் சோதனைகளையும், கருத்துகளையும் கண்காட்சி மூலம் பொதுமக்களுக்கு விளக்குவார்கள். இந்தப் புதிய "அறிவியல் ஆனந்தம்" திட்டம் குழந்தைகளிடம் அறிவியலில் உள்ள புரிதலை மேம்படுத்தவும், அறிவியலைப் பற்றி கற்றுக் கொள்வதிலும், சிந்திப்பதிலும் அதிக ஆர்வம் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்டுள்ளது.

"அறிவியல் ஆனந்தம்" என்னும் இந்த அற்புதத் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். சந்தோஷ் பாபு. இ.ஆ.ப., அவர்கள் 27.10.2006 அன்று துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இத்திட்டம் முதற் கட்டமாக கிருஷ்ணகிரி மற்றும் சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் வாயிலாக இவ்வூராட்சி ஒன்றியங்களில் உள்ள 101 நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் படிக்கும் 20,000 மாணவர்கள் பயனடைவார்கள்.



–செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி.


குடும்பத்தில்
அனைவருக்கும்
கோ-ஆப்டெக்ஸின் ஜாலமே
கோ-ஆப்டெக்ஸ்
• பட்டு மற்றும் பருத்திப் புடவைகள் • வேட்டிகள் • லுங்கிகள்
• பருத்தி சுடிதார்கள் • படுக்கை விரிப்புகள் • துண்டுகள்
சிறப்புத் தள்ளுபடி
30%
தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்


தமிழரசு
R.N.I. No 21446/70 Regn.No TN/ARD/48/06-0
TN/PMG(CCR) WPP-518/06-08
சமத்துவப் பெருவிழா
விவேகம் என்னும் வெள்ளி முளைத்து
சாதிப் பித்து என்னும் சனி தொலைந்தால்தா
சமத்துவம் எனும் ஞாயிறு தோன்றும்.
- முதல்வர் கலை